பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஆவணி 03 வியாழக்கிழமை (19-08-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:268

ஆட்சியாளர்களின் அரசியல் நெருக்கடி உச்சம்

# அரசு செயலிழந்து விட்டது; எச்சரிக்கிறது ஐ.தே.கட்சி

## நாட்டுக்கு முக்கியமான விடயங்களில் கூட அரசுக்குள் குழப்பம் எனக் குற்றச்சாட்டு

கொழும்பு,ஓகஸ்ட்19

**நாட்டில் அரசியல் நெருக்கடி மோசமான கட்டத்தை அடைந்துள்ளது. மாலுமி இல்லாத மரக்கலம் போன்ற நிலையில் நாடு தத்தளிக்கின்றது. அரசு முற்றாகச் செயலிழந்துவிட்டது.**

**- இப்படி அபாய அறிவிப்பு வெளியிட்டிருக்கின்றது ஐக்கிய தேசியக் கட்சி.**

**நாட்டுக்கு மிக முக்கியமான தேசியப் பிரச்சினைகளில் கூட ஆட்சியாளர்கள் தமக்குள் முரண்பட்டு, முட்டிமோதி, நாட்டைக் குட்டிச்சுவராக்க முயன்றுவருகின்றார்கள் என்றும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.**

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் அதன் எம்.பியும் முன்னாள் அமைச்சருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் நேற்றுக் கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே இவ்வாறு சுட்டிக்காட்டினார்.

நாட்டின் மிக முக்கியமான பிரச்சினையான இனப்பூசல், பொருளாதாரச் சிக்கல் போன்ற விடயங்களைக் கையாள்வதில் அரசுக்குள் திட்டவட்டமான - நிலையான - ஒரு நிலைப்பாடோ, கொள்கையோ, மாறாத போக்கோ இல்லை. இந்தக் குழப்பத்தால் அரசே முற்றாகச் செயலிழந்து விட்டது. நாடு மாலுமி இல்லாத மரக்கலமாகி விட்டது.

அரசின் ஒவ்வொரு பகுதியும் செயலிந்து விட்டது. சமாதான முயற்சிகளும் சரி பொருளாதார ஸ்திரமும் சரி குழம்பிப் போய்விட்டன.

தேசிய முக்கியத்துவம்வாய்ந்த விடயங்களில் கூட அரசுக்குள் ஒரு தரப்பு ஒன்றைச் சொல்லி பிறிதொன்றைச் செய்கிறது. மற்றொரு தரப்போ அவை இரண்டுக்கும் மாறாக பிறிதொன்

(16ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.அரச அதிபராக கணேஷ் நியமனம்?

யாழ்ப்பாணம்,ஓக.19

யாழ். மாவட்டத்தின் புதிய அரச அதிபர் பதவிக்கு வவுனியா மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படவுள்ளார் எனத் தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

யாழ்.மாவட்ட அரச அதிபராகக் கடமையாற்றும் செ.பத்மநாதன் உலக வங்கியின் வடக்கு - கிழக்கு மாகாண, வீடமைப்பு புனர்நிர்மாணத் திட்டப் பணிப்பாளராக உலக வங்கியினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதனால் ஏற்பட்டுள்ள வெற்றிடத்திற்கே வவுனியா மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படுவார் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-5)

## தெற்கில் புலிகளின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்குப் புதிய திட்டம்

தென்னிலங்கையில் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்படுவதாகக் கூறப்படும் தாக்குதல்களைத் தடுத்து நிறுத்துவதற்காக புதிய செயற்திட்டம் ஒன்றை அரசு தயாரித்துவருகின்றது எனக் கூறப்படுகின்றது.

இதற்கான திட்டத்தைப் பாதுகாப்புப் பிரிவினர் தயாரித்துள்ளனர் என்றும், விரைவில் அது நடைமுறைக்கு வரும் என்றும் விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

தென்னிலங்கையில் விடுதலைப் புலிகளின் சட்டவிரோத செயற்பாடுகளைத் தடுக்கும் நோக்கில் படையினர் புதிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருக்கின்றனர் என்ற தகவலை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹேரத்தும் உறுதிப்படுத்தினார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தனியார் மயப்படுத்தப்படமாட்டா

### தொழிற்சங்கப் பிரதிநிதிகளிடம் ஜனாதிபதி உறுதிமொழி

கொழும்பு,ஓக.19

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தனியார் மயப்படுத்தப்படமாட்டாது என தொழிற்சங்கத் தலைவர்களிடம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உறுதியளித்துள்ளார்.

ஜனாதிபதிக்கும் இலங்கைப் பெற்றோலியக கூட்டுத்தாபனத்தின் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலின்போது இந்த விவரம் வெளியிடப்பட்டதாக ஜனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகரித்துள்ள உலக எண்ணெய் விலை காரணமாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் இலங்கை மின்சார சபையும் எதிர்நோக்கியுள்ள தற்போதைய நிதிநெருக்கடி தொடர்பாகவும் ஜனாதிபதி விளக்குவதாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## வாழைச்சேனையில் நேற்று தமிழ்க் கிராமங்கள் சல்லடை

ஏறாவூர்,ஓக.19

வாழைச்சேனை பொலீஸ் பிரிவிற்குட்பட்ட தமிழ்க் கிராமங்களில் பாரிய சுற்றிவளைப்புத் தேடுதல் ஒன்று நேற்று மேற்கொள்ளப்பட்டது. இராணுவத்தினரும், பொலீஸாரும் கூட்டாக இணைந்து, இந்தத் தேடுதல் நடவடிக்கையினை மேற்கொண்டனர்.

புதுக்குடியிருப்பு, பேய்த்தாழை, கண்ணகிபுரம் ஆகிய பிரதேசங்களை நேற்றுக்காலை சுற்றிவளைத்த பாதுகாப்புப் படையினர் வீடு வீடாகச் சென்று தேடுதல் மேற்கொண்டனர். தேடுதல் நேரத்தின்போது வீதிகளில் சென்ற பொதுமக்களும் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

வாழைச்சேனைப் பிரதேசத்தில் கடந்த

(16ஆம் பக்கம் பார்க்க)

## தனியார் மயப்படுத்தலுக்கு ரயில்வே ஊழியரும் எதிர்ப்பு

### மருதானையில் நேற்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு,ஓக.19

ரயில்வேத் திணைக்களத்தை தனியார் மயமாக்குவதற்கு அரசு எடுத்துவரும் நடவடிக்கையைக் கண்டித்து கொழும்பில் நேற்றுப் புதன்கிழமை ரயில்வே ஊழியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மருதானை ரயில்வே நிலையம் முன்பாக இடம்பெற்ற இப்போராட்டத்தில் 300 இற்கும் அதிகமான ரயில்வே உழியர்கள் கலந்துகொண்டனர். தனியார் மயமாக்கலுக்கு வசதியளிக்கும் ரயில்வே அதிகார சபைச்சட்டத்தை அரசு உடனடியாக நீக்கவேண்டும் என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

ரயில்வேத் திணைக்களத்தில் 17 ஆயிரம் ஊழியர்கள் வரை பணியாற்றுகின்றனர். தனியார்

(16ஆம் பக்கம் பார்க்க)



ரயில்வேத் திணைக்களத்தினை தனியார் மயமாக்கும் அரசாங்கத்தின் திட்டத்தை எதிர்த்து நேற்று மருதானை ரயில் நிலையத்தில் ரயில்வே ஊழியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

நிமலராஜன் படுகொலை தொடர்பான வழக்கில்

## ஈ.பி.டி.பி. சந்தேகநபர்கள் நால்வரையும் வவுனியாவில் கையொப்பமிட உத்தரவு!

யாழ்ப்பாணம்,ஓக.19

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலை தொடர்பான வழக்கில் நான்கு சந்தேகநபர்களையும் வவுனியா பொலீஸ் நிலையத்தில் கையொப்பம் இடுமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நிமலராஜன் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ஈ.பி.டி.பி. அமைப்பைச் சேர்ந்த நான்கு பேரையும் பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் யாழ். பொலீஸ் நிலையத்தில் கையொப்பம் இடவேண்டும் என்ற நிபந்தனையுடன் யாழ். மேல் நீதிமன்றம் பிணையில் விடுவித்திருந்தது.

இதனை ஆட்சேபித்த இவர்கள் -

தற்போதுள்ள சூழ்நிலையில் யாழ்ப்பாணம் சென்று கையொப்பம் இடுவது தமக்குப் பாதுகாப்பு இல்லை என்றும் -

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஐந்து ரொக்கட்டுக்கள் சிலாபத்தில் மீட்பு

கொழும்பு,ஓக.19

சிலாபம் மாறவிலப் பகுதியில் உள்ள மட்டுக்கொட்டுவ என்ற இடத்தில் நேற்றுமுன்தினம் ஐந்து ரொக்கட் குண்டுகள் மீட்கப்பட்டன.

அண்மையில் நீர்கொழும்பு வாவியில் விழுந்து விபத்துக்குள்ளான விமானப்படையின் 'மிக்' ரக விமானத்தினுடையவையே இவை எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பிட்ட வாவியில் மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மீனவர் ஒருவர், இந்த ரொக்கட் குண்டுகள் அடங்கிய பெட்டியைக் கண்டெ

(16ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# நாட்டுப் பற்றாளர் இரத்தினத்தின் பூதவுடல் நேற்று தீயுடன் சங்கமம்

கொழும்புத்துறை,ஓக.19

நாட்டுப்பற்றாளர் செல்லையா இரத்தினத்தின் இறுதி ஊர்வலமும் வீரவணக்க அஞ்சலிக்கூட்டமும் நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றன.

யாழ்.ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் வித்தியாலய மண்டபத்தில் யாழ்.மாவட்ட அரசியல்துறையினரின் ஏற்பாட்டில் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன.

அன்னாரது இல்லத்தில் இருந்து ஊர்வலமாகப் பூதவுடல் எடுத்துவரப்பட்டு அஞ்சலிக்காக அங்கு வைக்கப்பட்டு கூட்டம் நடைபெற்றது.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ்.பகீரதன் தலைமையில் நடைபெற்ற இரங்கல் நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி உரையாற்றுகையில்:-

மனிதர்களில் அனைவரும் என்றோ ஒருநாள் இறந்தே ஆகவேண்டும். இறந்தும் இறவாது வாழ்பவர்கள் சிலர். அவ்வாறான சாவையே சாகடித்து சாகாது வாழ்பவர் நாட்டுப் பற்றாளர் இரத்தினம் ஐயா அவர்கள்.

வசீகரத் தோற்றமும்" அமைதியான அணுகுமுறையும் ஆளுமை முகாமைத்துவம் , நேர்மையாளனாக, பகுத்தறிவாளனாக அவரது வாழ்வுப் பயணம் அமைந்துள்ளது.

ஒருவர் சமூகத்தின் மீது பற்றுள்ளவராக இருந்தால் நாட்டின் மீதும் பற்றுமிகுந்தவராக இருப்பார். இந்த வகையில் தேசியத் தலைவரின் இலக்குக்கு, இனத்தின் விடுத லைக்கு ஒத்தாசை புரிந்த செயல்வீரனாகத் திகழ்ந்தவர்.

போராட்டத்தின் முக்கியத்துவத்தை சர்வதேசமும் புரிந்துகொண்ட இவ்வேளையில் இவரது பன்மொழிப் புலமை எமது விடுதலையின் பல நகர்வுக்கு பாதை காட்டியது.

விடுதலை வேட்கைகொண்ட நாட்டுப் பற்றாளரின் இழப்பு தமிழ்த் தேசியத்திற்குப் பேரிழப்பாகும் - என்று தெரிவித்தார்.

முன்னதாக அன்னாரது இல்லத்தில் இடம்பெற்ற அஞ்சலி நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, புனர்வாழ்வு அமைசசின் செயலாளர் வே.பொ.பாலசிங்கம், சீரான் பிரதிநிதி முகமட் பலீல், யாழ். அரச அதிபர் பத்மநாதன், வேலணை உதவி பிரதேச செயலாளர் எஸ். நந்தகோபாலன் ஆகியோரும் உரையாற்றினர். அஞ்சலி உரைகளைத் தொடர்ந்து அன்னாரின் பூதவுடல் கோம்பையன் மயானத்தில் தீயுடன் சங்கமமானது. (எ-30)

# வடக்கு–கிழக்கு புனரமைப்புக்கு உலக வங்கி ரூ.1000 கோடி உதவி

யாழ்ப்பாணம்,ஓக.19

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் வீடமைப்பு மற்றும் புனர்நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதறகு உலக வங்கி பத்துக் கோடி அமொிக்க டொலரை ஒதுக்கியுள்ளது.

இத்தகவலை வடக்கு - கிழக்கு மாகாண வீடமைப்பு, புனர்நிர்மாணத் திட்டப்பணிப்பாளராக உலக வங்கியால் நியமிக்கப்பட்டுள்ள செ.பத்மநாதன், தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள எட்டு மாவட்டங்களிலும் இந்த நிதியின் மூலம் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதன் முதற்கட்டமாக வடக்கு - கிழக்குப் பகுதிகளில் 58 ஆயிரம் வீடுகள் அமைக்கப்படும். அவற்றில் யாழ். மாவட்டத்தில் 21ஆயிரம் வீடுகள் அமைப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்காக உலக வங்கியும் இலங்கை அரசும் மிக விரைவில் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடவுள்ளன - என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-க-5)

# கைதுசெய்து தரதரவென்று பொலீஸார் இழுத்துச் சென்றனர் என்கின்றார் காதர்!

## தமக்கு நேர்ந்த அவலத்தை நாடாளுமன்றில் அவர் விவரிப்பு

கொழும்பு,ஓக.19

ஒரு சாதாரண மனிதனுக்கு வழங்கப்படும் உரிமைகள்கூட மறுக்கப்பட்ட நிலையில் பொலஸார் என்னுடன் காட்டுமிராண்டித்தனமாக நடந்துகொண்டார்கள். என்னைக் கைதுசெய்தனர். நான் செல்ல மறுத்ததால் என்னைத் தரதரவென இழுத்துச் சென்றனர்.

- இப்படித் தனக்குநேர்ந்த அவலத்தை நேற்று நாடாளுமன்றத்தில் விவரித்தார் ஐ.தே. கட்சியின் எம்.பியும், முன்னாள் அமைச்சருமான ஏ.ஆர்.எம்.அப்துல் காதர்.

தமக்கு நேர்ந்த அவலம் குறித்து நேற்று நாடாளுமன்றத்தில்அவர் முறையிட்டார்.

ஊழல் குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியல் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் ஏ.ஆர்.எம்.ஏ.காதர் நேற்றும் சிறைக் காவலர்கள் சகிதம் நாடாளுமன்றத்துக்க வருகை தந்திருந்தார். தனது சிறப்புரிமைகள் மீறப்பட்டதாகத் தெரிவித்து, அதுகுறித்து சபாநாயகரின் முன் அனுமதியுடன் நேற்று நாடாளுமன்றத்தில் அவர் பேசமுற்பட்டார்.

உடனேயே ஆளும் தரப்பிலிருந்து, நீதிமன்றத்தில் வழக்குப் பதிவுசெய்யப்பட்டிருக்கும் போது, அதுபற்றி அவர் உரையாற்ற முடியாது என்று சர்ச்சை கிளப்பப்பட்டது.

விமல் வீரவசன்ஸ, தினேஷ் குணவர்த்தன, மேர்வின் சில்வா போன்றோர் இவ்விவகாரம் குறித்து உரையாற்றுவதற்குக் கடும் எதிர்ப்புத தெரிவித்தனர். எனினும், சபாநாயகர் அவரைத் தொடர்ந்து உரையாற்ற அனுமதித்தார்.

தமது உரையில் காதர் எம்பி. மேலும் கூறியதாவது:-

கடந்த 25 வருடங்களாக வருடமொன்றுக்கு ஐம்பது லட்சம் ரூபா உதவிகளை பள்ளிவாசலகளுக்கும், பௌத்த விகாரைகளுக்கும், ஆலயங்களுக்கும் கொடுத்து வருகின்றேன்.

இது தொடர்பான முழுவிவரங்கள் என்னிடம் உள்ளன.

குற்றமிழைத்தவர்களுக்குத் தண்டனை வழங்கப்படவேண்டும் என்றுதான் நான் கூறுகின்றேன். அத்தகைய குற்றமிழைத்திருந்தால் நானும் தண்டிக்கப்படவேண்டியவனே. எனக்கு அதில் விதிவிலக்கு இல்லை. ஆனால், என்மீது வீண்பழி சுமத்தி - பொய்க குற்றச்சாட்டு சுமத்தி - என்னைக் கைதுசெய்துள்ளனர்.

ஒரு சாதாரண பிரஜைகளுக்குக் கொடுக்க வேண்டிய அடிப்படை உரிமைகள்கூட மீறப்பட்ட நிலையில்தான் பொலீஸார் என்னைக் கைதுசெய்தனர்.

வாக்குமூலம் பெறப்போகிறார் எனக் கூறித் தனது இல்லத்துக்கு வந்த உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் வெதசிங்க, மிருகத்தனமான முறையில் என்னைக் கைதுசெய்தார். காலில் செருப்பு இல்லாத நிலையிலும், எனது மருந்துகளை எடுக்கக்கூட அனுமதி வழங்கப்படாமல், பலாத்காரமாக என்னைக் கொண்டுசென்றார். செல்லமறுத்த என்னை இன்ஸ்பெக்டர் ருவன் குணசேகர என்பவர் தரதரவென்று இழுத்துச் சென்றார்.

எனது மனைவி, சட்டத்தரணியுடன் உரையாடுவதற்குத் தொலைபேசி எடுக்கச்சென்ற போதும் அதற்குக்கூட அனுமதி வழங்கப்படவில்லை. எனவே, இதுகுறித்துப் பொலீஸாருக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என கேட்டுக்கொள்கிறேன் - என்றர் அவர். (க)

# சின்னபாலா கொலை தொடர்பாக இதுவரை 15பேர் விசாரிக்கப்பட்டனர்

## ஆனால், கொலையாளியைப் பிடிக்க துப்புக் கிடைக்கவில்லை

கொழும்பு,ஓக.19

ஈ.பி.டி.பியின் ஊடகப் பேச்சாளர் பால நடராஜ ஐயரின் (சின்னபாலா) படுகொலை தொடர்பாக இதுவரை 15பேர் பொலீஸாரினால் விசாரணை செய்யப்பட்டுள்ளனர்.

கொலையாளிகளை அடையாளம் காணவோ அல்லது அவர்களின் இருப்பிடங்களைக் கண்டறியவோ போதுமான தகவல்கள், துப்புக்கள் இவ்விசாரணைகளிலிருந்து கிடைக்கவில்லையென விசாரணைகளை மேற்கொள்ளும் பொலஸார் தெரிவித்தனர்.

இதேவேளை இக்கொலைச் சம்பவத்தை நேரில் கண்ட ஓட்டோ சாரதி ஒருவரைத் தாம விசாரணை செய்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரில் பின இருக்கையில் அமர்ந்திருந்தவரே பாலாவை நோக்கிச் சுட்டார் எனவும் அவர்களை இதற்கு முன் தாம் கண்டிராததால் அவர்களை தம்மால் அடையாளம் காட்டமுடியாது எனவும் ஓட்டோச் சாரதி வெள்ளவத்தைப் பொலீஸாரிடம் தெரிவித்திருக்கிறார்.

கொலையாளிகள் டபிள்யூ.ஏ.சில்வா மாவத்தையூடாக வந்து, பாலாவைச் சுட்டபின் பாலாவின் விட்டுக்கருகிலுள்ள அலுவலத்த வீதியூடாகவே தப்பிச் சென்றுள்ளனர். இவ்வீதி ஹவ்லொக் வீதிக்குச் சென்றடையும் குறுக்கு வழிப்பாதையென வெள்ளவத்தைப் பொலீஸ் நிலையக் குற்றத் தடுப்புப் பொறுப்பதிகாரி தீப்தி விஜயவிகரம தெரிவித்தார்.

தொடர்ந்து விசாரணைகள் இடம்பெற்று வருவதாக வெள்ளவத்தைப் பொலீஸார் தெரிவித்தனர். (க)

## கண்டியில் கைதுசெய்யப்பட்ட 2 தமிழ் இளைஞர்களும் விடுவிப்பு

கொழும்பு,ஓக.19

கண்டி உடவத்தை காட்டுப்பிரதேசத்தில் சந்தேகத்துக்குரியவகையில் நடமாடினர் எனக கூறிக் கைதுசெய்யப்பட்ட இரு தமிழ் இளைஞர்களும் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

மல்வத்தை பீடத்தின் புதிய மகாநாயகருக்கான உத்தியோகபூர்வ நியமனப்பத்திரம் கையளிக்கும் வைபவம் கடந்த 16ஆம் திகதி கண்டி தலதாமாளிகை அருகில் நடைபெற்றது.

அப்போதே இந்த இரு இளைஞர்களும் இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டு இருந்தனர். இந்த வைபவத்தில் ஜனாதிபதி, பிரதமர் உட்படப் பலர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

கைதுசெய்யப்பட்ட இரு இளைஞர்களும் வவுனியாவைச் சேர்ந்தவர்களான சத்திநாதன் பிரசாந் (வயது 25), துவாரகன் சிவபாலசிங்கம் (வயது 19) என்று பொலீஸார் கூறினர்.

இவர்கள் பிரயாணம் செய்த வான் தற்சமயம் கண்டி பொலீஸ் பாதுகாப்பில் உள்ளது. அபாயத்தை உண்டுபண்ணக்கூடிய பொருள் வாகனத்துக்குள் இருக்கவில்லை எனப் பொலீஸ் உறுதிப்படுத்தியுள்ளது. (க)

## நல்லூர் திருவிழா: கொடிச்சேலை நாளை இரத பவனி

யாழ்ப்பாணம்,ஓக.19

வரலாற்றுப் பிரசித்திபெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழாவுக்கான கொடிசசேலை நாளை வெள்ளிக்கிழமை ஆலயத்திற்கு எடுத்துவரப்படவுள்ளது.

நல்லூர் சட்டநாதர் வீதியல் அமைந்துள்ள ஸ்ரீ முருகன் ஆலயத்திலிருந்து நாளை முற்பகல் 10.00 மணிக்கு அழகிய இரதத்தில் கொடிச் சேலை எடுத்துவரப்படும்.

பாரம்பரிய முறைப்படி செங்குந்த மரபு மக்கள் இந்தக் கொடிச்சேலை இரதபவனியில் மேளதாளங்கள், கொடி, ஆலவட்டம் சகிதம் கலந்துகொள்வார்கள். (ஐ-13)

## 'சமாதானத்துக்கான குரல்' அமைப்பின் மாணவர் புலமைப் பரிசில் திட்டம்

'சமாதானத்திற்கான குரல்' என்னும் இளைஞர் அமைப்பின் ஏற்பாட்டில் உள்ளக ரீதியாக இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களில் வசிக்கும் மாணவர்களுக்கான புலமைப்பரிசில் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

சிங்கப்பூரைத் தளமாகக் கொண்டு இயங்கும் 'AFLAC' - Association for Lighting a Candle எனும் உதவி வழங்கும் அமைப்பின் அனுசரணையுடன் இத்திட்டம் அமுலுக்கு வருகின்றது.

உள்ளக ரீதியாக இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களில் வசிக்கின்ற - கல்வியில் நாட்டமும் ஆர்வமும் உடைய - மாணவர்களுக்கு இப் புலமைப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

ஆரம்பத்தில் ஒரு வருடத்திற்குரியதாக வழங்கப்படவிருக்கும் இப்புலமைப்பரிசில்கள் மாணவர்களது திறமைக்கும் முயற்சிக்கும் ஏற்றவாறு அவர்களது பாடசாலைக் கல்வி முழுவதற்காகவும் நீடிக்கப்படலாம்.

இப்புலமைப் பரிசில்கள் மாணவர்களது கல்விதொடர்பான செலவுகளை மாதாந்தக் கொடுப்பனவுகள் மூலப் ஈடுசெய்ய முயற்சிக்கும். இப்புலமைப் பரிசிலுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தமது குடும்பத்தின் மாதாந்த வருமானம், கல்விக்கான மாதாந்தச் செலவீட்டு விவரம், குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கை, கல்வி கற்கும் பாடசாலை, பாடசாலைக் கல்வி முன்னேற்ற அறிக்கைத் தரவுகள் உள்ளடங்கலாக சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் செப்ரெம்பர் 15ஆம் திகதிகு முன்பதாக 'இணைப்பாளர், சமாதானத்திற்கான குரல், 350/1, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கலாம் - என்று 'சமாதானத்துக்கான குரல்' அமைப்பு வெளியிட்ட ஓர் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## வரலட்சுமி நோன்பு

யாழ்ப்பாணம்,ஓக.19

யாழ்.வண்ணை வெங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் வரலட்சுமி விரதத்தை யொட்டி எதிர்வரும் 27 ஆம் திகதி விசேட அபிஷேக ஆராதனை இடம்பெறவுள்ளது.

அன்றையதினம் மகாலட்சுமி அம்பாளுக்கு காலை 6.30 மணியளவில் அபிஷேக ஆராதனையும் முற்பகல் 10.30 மணிக்கு உள்வீதியுலாவும் இடம்பெறும். அதன் பின் விரதக் காப்பு வழங்கப்படும். (ஒ)

## கொழும்பு பங்குப் பரிவர்த்தனை(நேற்றையது)

பங்குச்சந்தை புள்ளிவிவரங்களும் கம்பனி அறிவித்தல்களும் புதன்கிழமை ஒகஸ்ட் 18--2004

| சந்தைப்புள்ளிவிவரம் | இன்று | முந்திய நாள் | புள்ளி மாற்றம் | %மாற்றம் |
|---|---|---|---|---|
| அனைத்துப்பங்கு விலைச்சுட்டி (ASPI) | 1,406.93 | 1,422.62 | (15.69) | (1.10) |
| மிலங்கா விலைச்சுட்டி (MPI) | 2,095.13 | 2,120.74 | (25.61) | (1.21) |
| மொத்த வருவாய்ச்சுட்டி (TRI) | | | | |
| ASTRI - அனைத்துப் பங்குகள் | 1,454.75 | 1,470.97 | (16.22) | (1.10) |
| MTRI - மிலங்கா பங்குகள் | 2,174.48 | 2,201.05 | (26.57) | (1.21) |
| சந்தைப்புரள்வு (மில்லியன் ரூபாயில்) | 344.20 | 121.70 | | |
| கைமாற்றப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை (மில்லியனில்) | 10.30 | 7.20 | | |
| மொத்தக் கொடுக்கல் வாங்கல் | 2,640.00 | 2,311.00 | | |
| சந்தை மூலதனம் (பில்லியன் ரூபாயில்) | 344.60 | 348.40 | | |
| இன்றைய பங்கிலாப அறிவித்தல்கள் | | | | |
| குறித்த திகதியில் கம்பனி அறிவித்தல்கள் இடம்பெறவில்லை | | பணம் செலுத்துகை | | |

*குறிப்பு: நி.ச.இ. விலை - நிறையிடப்பட்ட சராசரி இறுதி விலை.

## சமய சந்நிதிகளில்

நவாலி,ஓக.19

குருபகவான் சிம்மராசியிலிருந்து கன்னி ராசிக்கு இன்று வியாழன் பிரவேசிக்கின்றார்.

இதனையொட்டி நாட்டில் சாந்தி, சமாதானம் என்பன நிலவவேண்டி ஆனைக்கோட்டை கரைப்பிரான் ஆதிவிநாயகர் ஆலயத்தில் காலை 9.30 மணி தொடக்கம் குருபகவானுக்கு விசேட ஹோமம் வளர்த்து வேத மந்திரங்கள் ஓதி அபிஷேகம் நடைபெறவுள்ளது. (10-100)

* * *

நவாலி அந்திரான் முருகமூர்த்தி ஆலய வருடாந்த பெருந்திருவிழா நாளை வெள்ளிக்கிழமை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 12 தினங்கள் இடம்பெறும் திருவிழாவில் எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை இரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (10-100)

* * *

நவாலி, ஓக.19

ஆனைக்கோட்டை மூத்தநயினார் ஆலய கும்பாபிஷேகம் எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.45 மணிக்கு இடம்பெறும். கிரியைகள் நாளை வெள்ளிக்கிழமை மாலை ஆரம்பமாகவுள்ளன.(10-100)

* * *

வட்டுக்கோட்டை,ஓக.19

வட்டுக்கோட்டை மூன்றாம் பனை ஸ்ரீ வைரவர் ஆலய அலங்கார உற்சவம் எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து பதினொரு தினங்கள் நடைபெறவுள்ளது.(ஐ-161)

* * *

வட்டுக்கோட்டை, ஓக.19

வட்டுக்கோட்டை உளக்கைபளைச்சி வீரபத்திர சமேத பத்திரகாளி அம்பாள் ஆலய நவோத்திர சங்காபிஷேகம் எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு சங்குபூஜையுடன் ஆரம்பமாகி 11.30 மணிக்கு சங்காபிஷேகம் இடம்பெறும். (10-161)

உதயன்

# இடைக்கால நிர்வாகம் இழுத்தடிப்பு விவகாரமா?

இன்று நாட்டில் அரசியல் சர்ச்சைகளுக்கெல்லாம் மையமாக இருப்பது புலிகள் சமர்ப்பித்துள்ள 'வடக்கு - கிழக்கு இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை' பற்றிய யோசனைதான்.

"இலங்கையில் பிரிவினைக்கு மாற்றீடாகப் பேசக்கூடிய ஒரே முன்மொழிவு யோசனை இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைதான். தற்போது கூறப்படும் அரசின் மாற்று இடைக்கால யோசனைகளைப் புலிகள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். நேரத்தைக் கடத்துவதற்கான ஒரு சந்தர்ப்பமாகவே இந்த மாற்று யோசனைத் திட்டத்தை அரசு பயன்படுத்துகின்றது எனப் புலிகள் நினைக்கிறார்கள். இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையின் அடிப்படையில் பேச்சை மீண்டும் ஆரம்பித்த பின்னர் தனது யோசனைகளையும் அரசு அதில் சமர்ப்பிக்கட்டும்" - இவ்வாறு அடித்துக் கூறியிருக்கின்றார் மன்னார் ஆயர் வண. இராயப்பு ஜோசப்.

ஈழத் தமிழர்களின் பொதுவான நிலைப்பாட்டைப் பிரதிபலிப்பனவாகவே மன்னார் ஆயரின் கருத்துக்கள் அமைந்திருக்கின்றன.

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான அமைதி முயற்சிகள் ஆரம்பித்து ஏறத்தாழ இரண்டரை ஆண்டுகளாகிவிட்டன.

நிரந்தரத் தீர்வு குறித்து ஆராய்வதற்கு முன்னர் இடைக்கால ஏற்பாடாகச் செய்யவேண்டிய ஒழுங்குகள் குறித்து இக்காலத்தில் பல தடவைகள் பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டுவிட்டன. இருதரப்பும் சேர்ந்து 'சிரான்' உபகுழுவரை பல்வேறு எத்தனங்களை எடுத்தும் அவற்றில் எதுவும் நடைமுறைச் சாத்தியமானதாக - பயன்தரக்கூடியதானதாக - அமையவில்லை.

இந்தநிலையில்தான், முழு அளவிலான இடைக்கால நிர்வாகத்தின் அவசியம் பற்றிய தேவை வலியுறுத்தப்பட்டது. அத்தகைய அமைப்பு ஒன்று பற்றிய தேடலின் முக்கியத்துவம் உணரப்பட்டது.

இந்த விவகாரம் தொடர்பாகப் புலிகளுக்கு மறுதரப்பில் இருக்கின்ற அரசுத் தரப்பின் சார்பில் பல்வேறு பெயர்களில் யோசனைகள் முன்வைக்கப்பட்டன. அவை விடுதலைப் புலிகளால் பரிசீலிக்கப்பட்டு நிராகரிக்கப்பட்டன. அதன்பின்னரே புலிகள் தாமே ஒரு யோசனையைத் தயாரித்து முன்வைப்பது என்ற முடிவுக்கு வந்தனர்.

அதன் பயனாகச் சர்வதேச ரீதியில் தமிழர்களின் சட்ட ஆலோசனைகளைப் பெற்று, தமிழ்மக்களின் உள்ளக்கிடக்கையையும் கருத்தையும் பிரதிபலிக்கத்தக்க வகையில் இந்த யோசனைகளை - நீண்ட ஆராய்வுகள், கலந்துரையாடல்களின் பின்னர் - புலிகள் முன்வைத்திருக்கின்றார்கள்.

அத்தோடு, கடந்த பொதுத் தேர்தலில் இவ்விவகாரத்தை ஈழத் தமிழ்மக்களின் முன்னிலையில் வைத்து இதற்கான ஆணையையும் அவர்கள் பெற்றிருக்கின்றார்கள்.

இவ்வளவும் முடிந்த பின்னர் - ஏற்கனவே, பேச்சுக்களில் பங்குபற்றிய இலங்கை அரசுக் குழுவின் சார்பில் இவ்விவகாரத்தில் யோசனைகள் சமர்ப்பிக்கப்பட்டு, புலிகளால் அவை ஆராயப்பட்டு, நிராகரிக்கப்பட்டு, அவற்றுக்கு மாற்றீடாகப் புதிய யோசனைகள் புலிகளால் முன்வைக்கப்பட்ட நிலையில் -

புலிகள் சமர்ப்பித்த யோசனைகளைப் பரிசீலிக்க மறுத்து புதிய யோசனைகள் என்ற வடிவத்தில் சில ஆவணங்களைச் சமர்ப்பிக்க முயல்கின்றது புதிய அரசு.

சமாதான முயற்சிகளில் பங்குபற்றும் அரசுத் தரப்பின் பிரதிநிதிகள் மாறலாம். அரசுக்குள் மாற்றம் வரலாம். ஆனால், புலிகளையும் சமாதானப் பேச்சுக்களையும் பொறுத்தவரையார் அரசுப் பக்கத்திலிருந்து அமைதி முயற்சிக்கு வந்தாலும் அரசுத் தரப்பு அரசுத் தரப்புத்தான்.

எனவே, ஐ.தே.முன்னணி அரசோ, ஐ.ம.சு.கூட்டமைப்பு அரசோ எதுவென்றாலும் இடைக்கால நிர்வாகம் என்ற விவகாரம் தொடர்பாகச் சிலயோசனைகளைச் சமர்ப்பித்து, அந்த விவகாரம் காலாவதியாகிவிட்டது. இப்போது புதிய அரசு ஆட்சிக்கு வந்ததும் "புதிய யோசனைகள் தருகிறோம். அதைப் பரிசீலியுங்கள்!" என்று கூறுவது, மன்னார் ஆயர் சுட்டிக்காட்டுவதுபோல காலத்தை இழுத்தடிக்கும் அரசின் தந்திரோபாயமாகத்தான் புலிகளுக்கும் தமிழ்மக்களுக்கும் அது மனதைத் தைக்கும் என்பது சரிதான்.

இடைக்கால நிர்வாக விவகாரத்தில் புதிய மாற்று யோசனைகளை அரசு தயாரிக்கிறது. அவை விரைவில் புலிகளின் பரிசீலனைக்குச் சமர்ப்பிக்கப்படும் என்கிறார் அரசுப் பேச்சாளர் அமைச்சர் மங்கள சமரவீர.

அதையே யாழ்ப்பாணத்தில் வைத்து அரசின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் நாயகம் ஜயந்த தனபால உறுதிப்படுத்துகின்றார்.

ஆனால், அரசில் அங்கம் வகிக்கும் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸவோ, சமாதானச் செயலகப் பணிப்பாளர் நாயகத்தின் கருத்தை அடித்துக்கூறி மறுக்கிறார்.

மஹரகம இளைஞர் மன்றத்தில் மிகவும் பரவலாகப் பிரசாரப்படுத்தப்பட்டு, 'சமாதானத்தின் உண்மையான எதிரிகள் யார்?' என்ற தலைப்பில் நடத்தப்பட்ட ஜே.வி.பி. கூட்டத்திலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"நாங்கள் அரசில் அங்கம் வகிக்கிறோம். எங்களுக்குத் தெரியாமல் அப்படி ஒரு மாற்றுயோசனை தயாரிக்கப்பட முடியாது. அப்படித் தயாரிக்கப்பட்டிருந்தால் அது எங்களுக்குத் தெரிந்திருக்கும்" - என்கிறார் அவர்.

இதற்கிடையில் யு.பி.ஐ. செய்தி நிறுவனத்துக்குப் பேட்டியளித்த ஜனாதிபதி, இதுவரை தமது அரசு புலிகளுக்கு ஏழு அல்லது எட்டு யோசனைகளை அனுப்பியதாகவும் அவை ஒன்றுக்கும் புலிகள் பதில் அனுப்பவில்லை எனவும் புதுக்குண்டைத் தூக்கிப் போடுகின்றார்.

இவ்வாறு ஒரே குழப்பத்தில் குழம்பிப் போயிருக்கின்றது இடைக்காலத் தன்னாட்சி விவகாரம்.

அதற்குத் தீர்வு வராமல் சமாதான முயற்சிகளில் அமைதித் தீர்வு சாத்தியமில்லை என்பது மட்டும் நிச்சயம்.

# சர்வதேச எழுத்தறிவு தினத்தையொட்டி சமுர்த்தி அதிகாரசபை நிகழ்வுகளுக்கு ஏற்பாடு

வலி.மேற்கு,ஓக.19

இலங்கை சமுர்த்தி அதிகார சபை கல்வி அமைச்சுடன் இணைந்து சர்வதேச எழுத்தறிவு தினமான செப்ரெம்பர் 8ஆம் திகதி பல நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பாக இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் டபிள்யூ.ஜி. மித்ரரத்ன, மாவட்ட செயலாளர்கள், மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர்கள், உதவி சமுர்த்தி ஆணையாளர்கள், மாவட்ட சமுர்த்தி பிரதிப்பணிப்பாளர்கள், பிரதேச செயலாளர்கள், பிரதேச சமுர்த்திப் பிரதிப் பணிப்பாளர்கள் ஆகியோருக்கு சுற்றறிக்கையொன்றினை அனுப்பிவைத்துள்ளார்.

இச்சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எழுத்தறிவு பெற்றிராத சிறுவர்குழு ஒன்று நாட்டில் உள்ளது. இச்சிறுவர்களில் பெரும்பான்மையானோர் பெருந்தோட்டப்பகுதியிலும், நகர சேரிப்புறங்களிலும் அதிகமாக உள்ளதாகவே அறிக்கைகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அதிகமானோர் வறுமைக்கோட்டுக்குட்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் இனங்காணப்பட்டுள்ளது.

எழுத்தறிவு தினத்தினைப் பிரதானமாக வைத்துக்கொண்டு கூடுதலான மாணவர்களைப் பாடசாலைகளில் சேர்க்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும் உத்தியோகத்தர்கள் மூவருக்கு மாவட்டமட்டத்தில் பணப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. என்றுள்ளது.

(10-175-117)

# ஊடகத்துறையில் சகிப்புத் தன்மை மேம்பாடு; நாளை கொழும்பில் உரையரங்கும் பரிசளிப்பும்

கொழும்பு,ஓக.19

பத்திரிகையாளர்களின் சர்வதேச சம்மேளனத்தின் ஆசியத் திட்ட அலுவலகம், இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் மற்றும் ஊடக ஊழியர் தொழிற்சங்க சம்மேளனம் ஆகியவற்றுடன் இணைந்து நடத்தும் பரிசு வழங்கும் நிகழ்வும குழும உரை அரங்கும் நாளை கொழும்பில் நடைபெற உள்ளன.

"ஊடகத்துறையில் சகிப்புத்தன்மையும் பன்முகத்தன்மையும் - தென்னாசியா எதிர்நோக்கும் சவால்கள்" என்ற கருப்பொருளைக் கொண்டதாக குழும உரை அரங்கு இடம்பெறும்.

மேற்குறிப்பிட்ட இரண்டு நிகழ்வுகளும் கொழும்பு கோல்பேஸ் ஹோட்டலில் நாளை 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு இடம்பெறவிருக்கின்றன. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க, ஊடகத்துறை, விமான சேவை, துறைமுகங்கள் அமைச்சரும் பிரதிக் கல்வி அமைச்சருமான மங்கள சமரவீர, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சம்பந்தன், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப ஹக்கீம், சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனத் தலைவர் கிறிஸ்தோப்பர் வாறன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகக் கலந்துகொண்டு பிரதான உரையாற்றுவார்கள்.

**உரை அரங்கு**

குழும உரை அரங்கில் இலங்கை மனித உரிமைகள் ஆணையகத்தின் தலைவர் திருமதி ராதிகா குமாரசாமி, லேக்ஹவுஸ் நிறுவனத்தின் ஆங்கில வெளியீடுகளின் பிரதம ஆசிரியர் அஜித் சமரநாயக்க, உதயன் வெளியீடுகளின் பிரதம ஆசிரியர் எம்.வி.கானமயில்நாதன, பஞ்சாப் மாநில "ரிபியூன்" வெளியீடுகளின் பிரதம ஆசிரியர் எச்.கே.துவா மற்றும் "ஹிந்துஸ்தான்" ஆசிரியர் பிரினால் பாண்டே ஆகியோர் பங்குபற்றுவர். சமாதானப் பேரவையைச் சேர்ந்த ஜெஹான் பெரேரா நெறியாளராகக் கடமையாற்றுவார்.

இந்த நிகழ்வுகள் உலக அபிவிருத்தி விடயங்களுக்கான ஐரோப்பிய ஆணைக்குழுவின் ஆதரவுடன் நடைபெறுகின்றன.

சகிப்புத்தன்மையை ஊக்குவித்தல், இன வேறுபாட்டையும் பாகுபாட்டையும் களைந்தெறிதல், கலாசார, சமய மற்றும் இனவேறுபாடுகளை விளங்கிக் கொள்ளுதல் ஆகிய அம்சங்களை உள்ளடக்கியதாக இந்தப் பரிசுத் திட்டம் அமைந்துள்ளது. ஊடகத்துறையின் சகலதுறைகளையும் சேர்ந்த பத்திரிகையாளர்களுக்கு இடையில் இந்தப் பரிசுப் போட்டி வருடந்தோறும் நடத்தப்படுகின்றது.

சகல சமூகங்களில் இருந்து வரும் பத்திரிகையாளர்களுக்கிடையில் மனித உரிமைகளைக் குறிப்பாக, சிறுபான்மையோர் தொடர்பான செய்திகள் விடயத்தில் சகிப்புத் தன்மை மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் விதத்திலான புரிந்துணர்வை மேம்படுத்துவது இந்தப் பரிசுத் திட்டத்தின் நோக்கமாகும்.

இம்முறை பரிசுபெறுவோர் போட்டியாளர்கள் தென்னாசியாவிலிருந்து கிடைத்த ஏறத்தாழ நூறு விண்ணப்பங்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

அச்சு ஊடகத்துறையில் -

ஆங்கில மொழி மூலமான ஆக்கங்களில் மசூட் அன்சாரி (பாகிஸ்தான்), பஸ்ஹாற்பீா (இந்தியா), சுவேற்றா இராமனுஜன் (இந்தியா - இன்டியன் எக்ஸ்பிரஸ்) ஆகியோரும் -

ஏனைய மொழிகள் மூலமான ஆக்கங்களில் - சுபத்திரா பாசு (வங்காளி - இந்தியா), உவிண்டு குருகுலசூரிய (சிங்களம் - ஸ்ரீலங்கா) ரான்ஸ் பான்ட் (நேபாளி மொழி - நேபாளம்) ஆகியோரும் -

இலத்திரனியல் ஊடகத்துறையில் -

ஷாமினி போயிஸ் (ஸ்ரீலங்கா - யங் ஏசியா ரெலிவிஷன்), ஷார்னி ஜெயவர்த்தனா (ஸ்ரீலங்கா - யங் ஏசியா ரெலிவிஷன்), ஸ்ரீலால் ஷா (நேபாளம்) ஆகியோரும் - பரிசில்களை வென்றுள்ளனர்.

இந்தியா, பாகிஸ்தான், ஸ்ரீலங்கா, நேபாளம் ஆகிய நாடுகளைச் சேர்ந்த மூத்த ஊடகவியலாளர்களும் பேராசிரியர்களும் பரிசில்களுக்கு உரியவர்களைத் தெரிவுசெய்யும் நடுவர் குழுவில் அங்கம் வகித்தனர்.

(ப)

# உலக வங்கியின் வடக்கு - கிழக்கு வீடமைப்பு மற்றும் புனர்நிர்மாண திட்டப்பணிப்பாளராக யாழ்.அரச அதிபர் நியமனம்

யாழ்ப்பாணம்,ஓக.19

உலக வங்கியின் வடக்கு - கிழக்கு மாகாண வீடமைப்பு மற்றும் புனர்நிர்மாணத் திட்டப்பணிப்பாளராக யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

பேராதனைப் பல்கலைக்கழகப் பொருளியல் சிறப்புப் பட்டதாரியான இவர், 37 வருடங்கள் நிர்வாக அனுபவம் பெற்றவராவார். 1967 ஆம் ஆண்டு பேராதனை விவசாயத் திணைக்களத்தில் எழுதுநராக நியமனம்பெற்ற இவர், அன்றிலிருந்து பல உயர்பதவிகளை வகித்து வந்துள்ளார்.

சமூக அபிவிருத்தி அமைச்சின் மேலதிக செயலாளராகப் பணிபுரிந்ததுடன் யாழ்.குடாநாட்டில் மிகவும் நெருக்கடி நிலவிய காலப்பகுதியான 1995ஆம் ஆண்டு முதல் 1998ஆம் ஆண்டு வரை யாழ். மாவட்ட அரச அதிபராக இருந்து



இடம்பெயர்ந்து அல்லற்பட்ட மக்களுக்குப் பல்வேறு உதவிகளைச் செய்துள்ளார். பின்னர் 2002ஆம் ஆண்டு முதல் மீண்டும் யாழ்.மாவட்ட அரச அதிபராகக் கடமையாற்றி வருகின்றார்.

அரச அதிபர் செ.பத்மநாதன் 1990 ஆம் ஆண்டு முதல் 1995 ஆம் ஆண்டு வரை யாழ்.மாவட்டச் செயலகத்தின் திட்டப்பணிப்பாளராகவும் 1989ஆம் ஆண்டு காலப்பகுதியில் வவுனியா மாவட்ட அரச அதிபராகவும் மேலதிக அரச அதிபர், மாவட்ட காணி ஆணையாளர் மற்றும கணக்காளர் போன்ற பதவிகளை வவுனியா, மன்னார், கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலும் வகித்துள்ளார்.

இஸ்ரேல் பல்கலைக்கழகத்தில் அபிவிருத்தி தொடர்பாகவும் தாய்லாந்துப் பல்கலைக்கழகத்தில் 'அனர்த்த முகாமைத்துவம்' தொடர்பாகவும் பட்டப்பின் மேற்படிப்பைப் பூர்த்திசெய்துள்ளார். அத்துடன், அண்மையில் அமெரிக்கத் தலைநகரான வாஷிங்ரனில் இடம்பெற்ற உலக வங்கியின் மாநாட்டில் இலங்கையின் பிரதிநிதியாகவும் அரச அதிபர் கலந்துகொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(10-5)

# தமிழகத்தின் மணிமேகலை பிரசுராலயத்தின் புத்தகக் கண்காட்சிகள் யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம்,ஓக.19

தமிழகத்தின் முன்னணிப் பிரசுராலயமான மணிமேகலை பிரசுரத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 23ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை புத்தகக் கண்காட்சி ஒன்றினை நடத்தவுள்ளனர்.

இதன்படி, 23ஆம் திகதி திங்கட்கிழமை மாலை நல்லை ஆதீன மண்டபத்திலும், மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 6மணிக்குத் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய வளாகத்திலும், பிற்பகல் 2மணிக்கு கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிலும் இக்கண்காட்சிகள் இடம்பெறவுள்ளன.

தொடர்ந்து 25ஆம் திகதி புதன் கிழமை காலை ஸ்கந்தவரோதயக் கல்லூரியிலும், மதியம் நெல்லியடியிலும், மறுநாள் வியாழக்கிழமை மதியம் யாழ்.இந்துக் கல்லூரியிலும், 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்.பல்கலைக்கழகத்திலும் கண்காட்சிகள் நடைபெறும்.

மணிமேகலை பிரசுராலய நிர்வாக இயக்குநர் ரவி தமிழ்வாணன் இக்கண்காட்சிகளில் கலந்துகொள்ளவுள்ளார்.

(10-201)

## நாளை

ஆவணி 4
வெள்ளிக்கிழமை
(20.08.2004)
திதி : சதுர்த்தி
முற்பகல் 7.25
நட்சத்திரம் : அத்தம்
முற்பகல் 11.21
சுபநேரம்: 6.05 - 7.35
ராகுகாலம்: 10.35 - 12.05
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

அளந்து பேசுபவனைவிட அதிகம் பேசுபவன் சிறந்தவன்.

# இதய அஞ்சலி



அமரர்.

## செல்லையா இரத்தினம்

புளியங்கூடல் மண்ணின் மைந்தரும் வேலணை, சங்கானை பிரதேசசபை முன்னாள் செயலரும், தற்போதைய யாழ்.மாவட்ட சிறான் அமைப்பாளரும், பன்மொழி வித்தகரும் எமது கிராம சிறுவர் நல்வாழ்வு நிலையத் தலைவரும், எமது கிராம விளையாட்டுத்துறை வளர்ச்சியின் ஆணிவேரும், செந்தூர் முருக பக்தரும், விடுதலைப்போராட்ட வளர்ச்சியில் இயன்றளவு பங்காற்றிய நாட்டுப் பற்றாளரும், கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் அன்பின் உறைவிடமாய் வாழ்ந்தவருமாகிய நாட்டுப் பற்றாளர்

## ஸ்ரீமான் செல்லையா இரத்தினம்

அவர்களின் மறைவையொட்டி எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

அன்னாரின் மறைவால் துயரக் கடலில் மூழ்கி இருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அமரரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

புளியங்கூடல் மகாமாரி சனசமூக நிலையமும்,
மகாமாரி விளையாட்டுக் கழகமும்.

*புளியங்கூடல்.*
(35434)(42-13-17)

## வீடுகள் கையளிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.19

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் வெள்ளி விழாவை முன்னிட்டு மாவட்டங்கள் தோறும் வீடற்ற வறிய குடும்பங்களுக்கு வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் யாழ் மாவட்டத்தில் சண்டிலிப்பாய், மாகியப்பிட்டிப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள வீடுகளைக் கையளிக்கும் வைபவம் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10மணிக்கு இடம்பெறவுள்ளது.

வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் யாழ.மாவட்டப் பணிப்பாளர் சுமாசிலாமணி தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் வீடுகளை உரியவர்களிடம் கையளிப்பார். (10-5)

## பண்டாரவளை பஸ் விபத்தில் ஒருவர் பலி; 30 பேர் காயம்!

கொழும்பு,ஓக.19

பண்டாரவளை, எட்டம்பிட்டிய பகுதியில் உள்ள அமுனுகெவப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் தனியார் பஸ் ஒன்று குடைசாய்ந்து விபத்துக்குள்ளானதில ஒருவர் உயிரிழந்தார். மேலும் முப்பது பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் பண்டாரவளை, தியத்தலாவ மற்றும் பதுளை வைத்திய சாலைகளில சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர். இவ்விபத்துத் தொடர்பாக பண்டாரவளைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-க)

## ஆன்மீகச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,ஓக.19

இந்துசமய விவகார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ் மாவட்ட அலுவலகம் நடத்தும் ஆன்மீகச் சொற்பொழிவின் 90 ஆவது தொடர் நாளை வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றிலில் உள்ள நாவலர் மணி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ள மேற்படி நிகழ்வில "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்ற தலைப்பில் சைவப் புலவர் க.நித்தியதசீதரன் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். (10-201)

# கண்ணீர் அஞ்சலி

அருட்சகோதரி **அன்ரனி யோசப் பிரகாசம்**

எமது பாடசாலையின் முன்னைநாள் அதிபர்
அருட்சகோதரி **அன்ரனி யோசப் பிரகாசம்** அவர்கள்
17.08.2004 அன்று இறையடி சேர்ந்துள்ளார்.
அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுவதுடன்
எமது கண்ணீர் அஞ்சலியையும் காணிக்கையாக்குகின்றோம்.

யா/தி.கு.க. மடம்,
யாழ்ப்பாணம்.
(35442) (24-42-13-17)

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், ஊழியர்கள்.

# மரண அறிவித்தல்கள்

## சுப்பிரமணியம் சந்திரகோபால் (சந்திரன்)



திருநெல்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும், தற்போது இங்கிலாந்தில் வசித்தவருமாகிய சுப்பிரமணியம் சந்திரகோபால் அவர்கள் நேற்று (18.08.2004) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் அருந்ததி, அகிலன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற பொற்கொடி, பவளக்கொடி, இராஜகோபால், கமலாம்பிகை, ஜெயராணி ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இங்கிலாந்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
S.இராஜகோபால்,
(சகோதரர்)

*'மீனஸ்தன்',*
*வளாகவீதி, திருநெல்வேலி.* (35440)(42-13-17)

## அருட்சகோதரி அன்ரனி யோசப்

(முன்னாள் அதிபர், யாழ்.திருக்குடும்ப கன்னியர் மடம் English School)

யாழ்.திருக்குடும்ப கன்னியர் மடம் (ஆங்கிலப் பாடசாலை) முன்னாள் அதிபர் அருட்சகோதரி அன்ரனி யோசப் அவர்கள் 17.08.2004 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் அச்சுவேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்றவர்களான பிரகாசம் - இரத்தினம் தம்பதிகளின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான பீலிக்ஸ், மில்றட் அலெக்சான்டர், றெஜீனா, மற்றும் பொலின், பிலோமினா, அஞ்சலீனா, கிறிஸ்ரினா ஆகியோரின் அன்புச்சகோதரியும், காலஞ்சென்றவர்களான வில்பிறட் அலெக்சான்டர், எட்வேட், யோக்கிம்பிள்ளை மற்றும் வென்சஸ்லஸ், பூபாலரட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (2004.08.19) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் இளவாலை திருக்குடும்ப கன்னியர் மடத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அருட்சகோதரிகள், அருட்சகோதரர்கள், பாடசாலை பழைய மாணவிகள் ஆகியோர் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
அஞ்சலீனா சவுந்தரநாயகம்,
பெறாமகள்,
சென்ஜேம்ஸ் மகளிர்
வித்தியாலயம்.

*118, 4ஆம் குறுக்கு வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(C/36807)(42-13-17)


யாழ்ப்பாணத்தில் **SAAMSTECH** இன்

## ஆங்கில மற்றும் சிங்கள நேரடி வகுப்பு

இன்று இலங்கையில் புதிய முறையிலான இலகுவான ஆங்கில வகுப்பினை 35,000 பேருக்கு மேல் வழங்கிய சாம்ஸ்டெக் நிறுவனத்தினால் முதல்முறையாக யாழ்ப்பாணத்தில் நேரடி ஆங்கில மற்றும் சிங்கள வகுப்புகள் ஆரம்பிக்கப்படுகின்றன.

நீங்கள் விரும்பிய நாள்களில் காலை 8.00 மணிமுதல் இரவு 8.00 மணிவரை உங்களுக்கு வசதியான நேரங்களில் வாரங்களில் மூன்று நாள் வீதம் தினமும் 2 மணி நேரம்.

(சனி, ஞாயிறு வகுப்புகளும் உண்டு)
முழுமையாகக் கதைக்கலாம்.

பாடநெறியின் முடிவில் டிப்ளோமாச் சான்றிதழ்

இடம் : **யாழ்ப்பாணக் கல்லூரி,**
பட்டதாரிகள் பிரிவு,
464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P 222 3382

காலம் : 2 மாதங்கள்
கட்டணம் : ஆங்கிலம் 6,000/-, சிங்களம் 4,000/-

**50% கழிவு** இன்றும் (19.08.2004), நாளையும் (20.08.2004) பதிவு செய்யும் அனைவருக்கும் பாடக் கட்டணத்தில் 50% சலுகையுடன் பாடக் கட்டணம் ஆங்கிலம் 3,000/-, சிங்களம் 2000/- மட்டுமே.

**SAAMSTECH**

மொழிக் கற்கைநெறியில் ஒரு புதிய பரிமாணம்
No.22, 1/3, Galle Road, Dehiwala,
Web.www.saamstech.com,
e-mail: salea@saamstech.com
011-5540200 (36800)(42-13-17)






- கனம் 2.5 மி.மீ
- வேறு கூரைத்தகடுகளைவிட மலிவானது
- வெப்பம் குறைந்தது
- மழை நேரங்களில் இரைச்சலற்றது
- சுகாதார இடையூறு அற்றது
- துரு பிடிக்காதது
- 20 வருடங்களுக்கு மேல் நீடிக்கக்கூடியது
- திறம் மாறாதது
- குடியிருப்ப, விவசாய, வர்த்தக, கட்டிடங்களுக்கு உகந்தது

நீடித்த பாவனைக்கு
பொருத்தும் வழிகாட்டியின்படி
பொருத்துங்கள்
இதனை விற்பனையாளரிடம்
பெற்றுக் கொள்ள மறவாதீர்கள்

உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துனர்கள்
சென்ட்-அந்தனீஸ் ருவ்பிங் (பிரைவேட்) லிமிட்டெட்
515, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொ. பே: 2334361-5, 2337283-5 பெக்ஸ்: 3440134

விநியோகஸ்தர்
நாராயணா கட்டிடப் பொருள் வர்த்தகர், 95/1, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
21 - 09 - 1940



மறைவு
20 - 07 - 2004

## அமரர் கணபதிப்பிள்ளை நமசிவாயம்

*(அம்பாள் மில் உரிமையாளர், மட்டுவில்)*

பண்பின் சிகரமாய் பாசத்தின் திருவுருவாய்
திகழ்ந்த எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே!
எங்கள் வாழ்வுக்கு நல்வழி காட்டி
வாழ்வாங்கு வாழவைத்த எம் அன்புத் தெய்வமே!
உங்கள் இன்னுயிரை ஒரு நொடியில்
காலனவன் கவர்ந்தானோ!
மாதம் ஒன்றல்ல ஓராயிரம் சென்றாலும்
உங்கள் நினைவுகள் எம்மை விட்டகலா!

எங்கள் குடும்பத்தலைவனது ஆத்மா சாந்தியடைய
காளிதேவியைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (19-08-2004) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சிவன் கோயிலடி,
மட்டுவில் மத்தி,
சாவகச்சேரி.

- குடும்பத்தினர்.

(35402)(42-13-17)

# கொரியாவில் நடைபெற்ற தடகளப் போட்டியில் பதக்கங்கள் வென்றோர் கௌரவிக்கப்பட்டனர்

வலி.வடக்கு,ஓக.19

கொரியா நாட்டில் அண்மையில் நடைபெற்ற உலக சமாதான மதங்களுக்கிடையிலான சர்வதேச தடகள விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்றுப் பதக்கங்கள் வென்ற யாழ். மாவட்ட வீர வீராங்கனைகளைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் யாழ். மாவட்ட மெய்வல்லுநர் சங்கத்தலைவர் எஸ்.மரியதாஸ் தலைமையில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

'ரில்கோ ஹெறலிடேய்ஸ் பிறைவேற் லிமிட்டெட்' நிறுவனத்தின் ஆதரவில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மங்கள விளக்கினை சென்பற்றிகஸ் கல்லூரி உப அதிபர் அருட்தந்தை ஜெறோம், மகாஜனாக் கல்லூரி அதிபர் ரி.சுந்தரலிங்கம், இலங்கை வங்கி முகாமையாளர் கே.விக்கினராசா, இலங்கை வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் எஸ்.பாலசுப்பிரமணியம், யாழகம் உரிமையாளர் என்.சோமசுந்தரம் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

வெற்றியாளர்களான சிவகுமார் கமலமோகன், மரியநாயகம் சஞ்சீவ், செல்வராஜா தயாளினி மற்றும் யாழ்.பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தரும் வெற்றியாளர்களின் பயிற்றுவிப்பாளருமான செல்வராசா ரமணன் ஆகியோருக்கு முன்னாள் விளையாட்டு வீரர்களும் தற்போதைய விளையாட்டு வீரவீராங்களைகளும் மலர்மாலை அணிவித்தும் சான்றிதழ் வழங்கியும் கௌரவித்தனர்.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன், மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, யாழ்.மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் கலைவிழி, தமிழீழ விளையாட்டுத் துறையைச் சேர்ந்த பொ.ஈஸ்வரன், யாழ்.மாவட்ட விளையாட்டு அலுவலர் றெ[illegible]ன் இராஜசிங்கம் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (10-86-[illegible])

## சமநிலையில் நிறைவுற்ற உதைபந்தாட்டம்

வலி.வடக்கு,ஓக.19

வடக்கு - கிழக்கு மாகாண உதைபந்தாட்டத் தெரிவு அணிக்கும் கொழும்பு மாவட்ட பொலீஸ் தெரிவு அணிக்கும் இடையே இடம்பெற்ற உதைபந்தாட்டப் போட்டி சமநிலையில் முடிவுற்றுள்ளது.

கொழும்பு பொலீஸ் 'பாக்' விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் வடக்கு- கிழக்கு மாகாணத் தெரிவு அணியினர் தமது திறமையினை முழுமையாக வெளிப்படுத்தி விளையாடினார்கள்.

ஆட்டம் ஆரம்பமாகிய சில நிமிட நேரத்திலேயே வடக்கு கிழக்கு மாகாணத் தெரிவு அணியினர் ஒரு கோலைப் பெற்று முன்னிலை பெற்றனர். பொலஸ் அணியினரும் தொடர்ச்சியாக கோல்களைப் பெறுவதற்கு பிரயத்தனங்களை மேற்கொண்ட போதிலும் கோல்கள் எதனையும் பெற முடியாத நிலையில் முதல் பாதி ஆட்டம் முடிவுற்றது.

இரண்டாவது பாதி ஆட்டம் தொடங்கிய நேரம் முதல் இரு அணிகளுமே மிகவும் விறுவிறுப்பாக விளையாடிக் கோல்களைப் பெறும் முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டு இருந்தன.

ஆட்டம் நிறைவடைவதற்கு சில நிமிடங்களுக்கு முன்னர் தமக்குக் கிடைத்த தண்டனை உதையை நல்ல முறையில் பயன்படுத்திபொலஸ் அணி ஒரு கோலைப் பெற்று ஆட்டத்தை சமப்படுத்திக் கொண்டது.

ஆட்ட முடிவில் இரு அணிகளுமே தலா ஒரு கோல் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவு பெற்றது (10-86)

## இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு,ஓக.19

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கூடைப் பந்தாட்டச் சங்கம் மாவட்ட ரீதியில் நடத்தும் கூடைப்பந்தாட்டப் போட்டியில் இன்று வியாழக்கிழமை மாலை 4.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

★ உடுவில் விளையாட்டுக்கழகம் எதிர் யாழ்.ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம்.

★ யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அலகு அணி எதிர் கொக்குவில் மத்திய ச.ச. நிலைய விளையாட்டுக்கழக அணி. (10-86)

## தொடரை வென்றது இங்கிலாந்து

இங்கிலாந்து-மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையே இங்கிலாந்தில் நடைபெற்று வரும் 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 3 போட்டிகளில் வெற்றியீட்டியதன் மூலம் இங்கிலாந்து அணி தொடரைக் கைப்பற்றியது. (10)

## 82 ஆவது தடகளப் போட்டி

வடக்கு - கிழக்கின் எட்டு மாவட்டங்களைச் சேர்ந்த வீரவீராங்கனைகள் பங்கு கொள்ளும் 82 ஆவது தடகளப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை வவுனியாவில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியில் கலந்து கொள்வதற்காக யாழ்.மாவட்ட வீரவீராங்கனைகள் இன்று வியாழக்கிழமை வவுனியா புறப்படுகின்றனர். இவர்களுக்கான சகல வசதிகளையும் யாழ்மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி மேற்கொண்டுள்ளார். (10-190)

## பயிற்சி வகுப்பு

வடமராட்சி மென்பந்து துடுப்பாட்டச் சங்கத்திற்கு நடுவர்களைத் தெரிவு செய்வதற்கான பயிற்சி வகுப்புகள் எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இப்பயிற்சி வகுப்பில் ஆர்வமுள்ள அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறும் சங்கத்தில் இதுவரைப் பதிவுகளை மேற்கொள்ளாத கழகங்கள் நாளை வெள்ளிக்கிழமைக்கு முன்னர் பதிவு செய்து கொள்ளுமாறும் சங்கச் செயலர் கேட்டுள்ளார். (10-5)

## ஒருநாள் போட்டி நாளை ஆரம்பம்

இலங்கை - தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையேயான 5போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடர் நாளை கொழும்பில் ஆரம்பமாக உள்ளது.

ஏற்கனவே இரு அணிகளுக்குமிடையே நடைபெற்ற 2போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 1-0 என்ற ரீதியில் இலங்கை அணி வெற்றியீட்டியமை குறிப்பிடத்தக்கது. (10)



கொரியாவில் நடைபெற்ற உலக சமாதான மதங்களுக்கிடையிலான சர்வதேச தடகள விளையாட்டு விழாவில் பதக்கம் வென்ற யாழ்.மாவட்ட விளையாட்டு வீரர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் யாழ்.மத்திய கல்லூரி அதிபர் க.இராசதுரை, கப்டன் என்.சோமசுந்தரம், 'யாழகம்' உரிமையாளர் என்.சோமசுந்தரம், யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி ஆகியோர் கலந்து கொண்டு வீரர்களைக் கௌரவிப்பதைப் படங்களில் காணலாம். (படங்கள் - பிரபா).

# மருத்துவ உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையில் சேர்ப்பு

யாழ்ப்பாணம்,ஓக.19

யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப்பணிப்பாளர் பிரிவின்கீழ் இயங்கும் வைத்தியசாலைகளில் 2005ஆம் ஆண்டு காலத்தில் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றுவதற்குத் தகுதிவாய்ந்த மருத்துவ உத்தியோகத்தர்கள் மீள்நியமனம் செய்யப்படவுள்ளனர்.

வைத்திய உத்தியோகத்தர், பதிவு வைத்திய உத்தியோகத்தர் அல்லது உதவி வைத்திய உத்தியோகத்தர், மருந்தாளர், ஆய்வுகூட தொழில்நுட்ப உத்தியோகத்தர், தாதிய உத்தியோகத்தர், குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர், ஊடுகக் கதிர் படப்பிடிப்பாளர், பொதுச்சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர், மருந்துக் கலவையாளர் ஆகியோரிடமிருந்து இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் ஓய்வூதியக் கொடைப்பத்திரம், இறுதியாகப் பெற்றுக்கொண்ட சம்பளப்படி நிலையில் கடமையாற்றுவதற்கான சம்மதக் கடிதம், சமாதான நீதிவானின் நற்சான்றிதழ், வடக்கு - கிழக்கு மாகாணத்தின் எப்பகுதியிலும் கடமையாற்றுவதற்கான சம்மதக்கடிதம், தற்போதைய உடல், உள நிலைபற்றிய மருத்துவ உத்தியோகத்தரின் சான்றிதழ், பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், 60 வயதுக்கு உட்பட்டவரெனில் தனது ஓய்வூதியத்தை உறைநிலையில் வைப்பதற்கான சம்மதக் கடிதம் ஆகியவற்றின் 3பிரதிகளுடன் எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன் 'சுகாதார சேவைகள், மாகாணப் பிரதிப் பணிப்பாளர், சு.சே.மா.பி.ப. பணிமனை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்குத் தமது விண்ணப்பங்களை அனுப்பிவைக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர். (ஜ-201)

# பால்மாவின் விலை அதிகரிக்கப்படலாம்!

கொழும்பு,ஓக.19

400கிராம் நிறையுடைய 'நெஸ்பிறே' பால்மா பைக்கற் ஒன்றின் விலை 4ரூபா 50சதத்தால் அதிகரிக்கப்படவுள்ளதாக நெஸ்லே லங்கா நிறுவன வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தற்போது உலக சந்தையில் டொலரின் பெறுமதி மீளமைக்கப்படுவதனாலும், பொருள்களின் விலை அதிகரித்துக் காணப்படுவதாலும் இந்த விலை அதிகரிப்பை மேற்கொள்ளவேண்டிய அவசியம் ஏற்படுகின்றது எனப் பால்மா உற்பத்தி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நெஸ்பிறே, அங்கர், லக்ஸ்பிறே, மலிபன் உட்பட பால்மா வகைகளின் விலைகளை அதிகரிப்பதற்கு அதனுடன் சம்பந்தப்பட்ட சுமார் 7உற்பத்தி நிறுவனங்கள் நுகர்வோர் பாதுகாப்புச் சபையிடம் அனுமதி கோரியிருந்தபோதிலும் மேற்படி சபை அதற்கு எதுவித பதிலையும் இதுவரை வழங்கவில்லை என்று தெரியவருகின்றது.

எனவே, நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் அங்கீகாரம் பெறப்படாமலேயே இவ்விலை அதிகரிப்பு அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இந்த நிலையில் மேற்படி அதிகார சபையின் பணிப்பாளர்கள் விலை அதிகரிப்புத் தொடர்பாக ஆராய்ந்து முடிவு எடுக்கப்படவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (10-201)

## விபத்தில் காயம்

தென்மராட்சி,ஓக.19

தென்மராட்சிப் பகுதியில் வெவ்வேறு இடங்களில் இடம்பெற்ற வீதி விபத்துக்களில் இருவர் காயமடைந்தனர்.

மீசாலைப் பகுதியில் இடம்பெற்ற சைக்கிள் - மோட்டார்சைக்கிள் விபத்தில் மீசாலை வடக்கைச் சேர்ந்த சரவணமுத்து நடராசா (வயது57) என்பவரும் -

மிருசுவில் பகுதியில் இடம்பெற்ற சைக்கிள்-வான் விபத்தில் மிருசுவில் உசனைச் சேர்ந்த அரியகுட்டி முருகையா (வயது65)என்பவரும் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். (10-117)

## மருந்துகளுக்கு தட்டுப்பாடு

கோப்பாய்,ஓக.19

கோப்பாய் சுற்றயல்கூறு மருந்துவமனையில் கடந்த சில வாரங்களாக முக்கியமான மருந்துகள், வலிநிவாரண மருந்துகள், கிளினிக்குகளில் வழங்கப்படும் மருந்துகள் ஆகியவற்றிற்குப் பலத்த தட்டுப்பாடு நிலவுவதாகப் பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

மூன்றாம் கந்தாயத்திற்கான மருந்துகள் இதுவரை கிடைக்காமையினாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை, இவ்வாறான நிலைமை யுத்த காலங்களில் இருந்த போதிலும் சமாதான காலத்திலும் அடிக்கடி ஏற்படுவது குறித்துப் பொதுமக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (10-72)

## மாகாண மட்டத்திற்குத் தெரிவு

யாழ்ப்பாணம், ஓக.19

கடந்த 7 ஆம் திகதி வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் நடைபெற்ற தீவக வலய மட்ட சிறுவர் அரங்கு நிகழ்வில், ஊர்காவற்றுறை புனித மரியாள் மகளிர் வித்தியாலயம் மாகாண மட்ட நிகழ்வில் பங்குபற்றுவதற்காகத் தெரிவாகியுள்ளது. எனத் தீவக வலயக் கல்விப் பணிபபாளர் பி.வேணுகோபால் தெரிவித்துள்ளார். (10-201)

## மீளாய்வுப் பணிகள் இன்றும் நாளையும்

வலி.தெற்கு,ஓக.19

நிவாரணம் பெறும் சகல குடும்பங்களின வருமானங்களையும் மதிப்பீடு செய்யும் நடவடிக்கைகள் உடுவில் வடக்கு கிராம சேவையாளர் பிரிவில் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளன.

தற்போது வழங்கப்பட்டுக் கொண்டிருக்கும் இலவச நிவாரணத்தைப் பெறும் குடும்பங்களின் தகுதி, வருமானம் என்பன மீளாய்வு செய்யப்பட்டு புதிய நிவாரண அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

இன்றும் நாளையும் நடைபெறவுள்ள மீளாய்வு நடவடிக்கைகளின்போது உடுவில் வடக்கு கிராம சேவையாளர் பிரிவில் வசிக்கும் நிவாரணம் பெறும் குடும்பங்கள் அனைத்தும் பங்கீட்டு அட்டை, அடையாள அட்டை என்பவற்றோடு வருகை தருமாறும் மீளாய்வு செய்யப்பட்டவர்களுக்கே இவ்வருடம் மார்ச் மாத நிவாரணம் வழங்கப்படும் எனவும் உடுவில் பிரதேச உதவிப் பிரதேச செயலர் எஸ். ஆர். ஜெயப்பிரகாசம் அறிவித்துள்ளார். (10.-152)

# யு.என்.எச்.சி.ஆர்., ஜெய்ப்பூர் நிறுவனம் இணைந்து

# யாழ்ப்பாண மாவட்டத்தில் விசேட தேவைகள் உள்ளோருக்கான வேலைத் திட்டங்கள் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம்,ஓக.19

யாழ்.மாவட்டத்திலுள்ள விசேட தேவைகள் உள்ளோருக்கான (அங்கவீனர்கள்) உபகரணங்களைத் திருத்துதல் மற்றும் அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டம் என்பவற்றை அகதிகளுக்கான ஐ.நா.தூதரகமும், யாழ்.ஜெய்ப்பூர் நிறுவனமும் இணைந்து மேற்கொள்ளவுள்ளன.

இது தொடர்பாக யாழ்.மாவட்டத்திலுள்ள சகல பிரதேசங்களிலும் விசேட தேவைகள் உள்ளோருக்கான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதற்கென அத்துறைசார்ந்த நிபுணர் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

அக்குழு அடுத்தமாதம் 7ஆம் திகதி காலை 9மணிக்கு வேலணை, நெடுந்தீவு ஆகிய பிரதேசங்களிலும் பிற்பகல் ஒரு மணிக்கு ஊர்காவற்றுறையிலும் -

15ஆம் திகதி காலை 9மணிக்கு சங்கானை, சண்டிலிப்பாய் பிரதேசங்களிலும், நண்பகல் 12மணிக்கு உடுவில் தெல்லிப்பழை பிரதேசங்களிலும், பிற்பகல் 2மணிக்கு காரைநகரிலும - 28ஆம் திகதி காலை 9மணிக்கு மருதங் கேணியிலும் பிற்பகல் 2மணிக்கு சாவகச்சேரியிலும் -

ஒக்ரோபர் மாதம் 7ஆம் திகதி காலை 9மணிக்கு பருத்தித்துறையிலும் பிற்பகல் ஒரு மணிக்கு கரவெட்டியிலும், ஒக்ரோபர் மாதம் 17 ஆம் திகதி கோப்பாயிலும், நண்பகல் 12 மணிக்கு நல்லூரிலும், பிற்பகல் 2மணிக்கு யாழ்ப்பாணத்திலும் ஆய்வுகளை மேற் கொளளவுள்ளது. (10-5)

## இலவச மருத்துவ முகாம்

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினால் சாவகச்சேரி கோயில் குடியிருப்பு, அல்லாரை, சங்கத்தானை, பெரியமாவடி ஆகிய பகுதி மக்களுக்கான இலவச மருத்துவப் பரிசோதனை முகாம் எதிர்வரும் 22 ஆம் திகதி நடத்தப்படவுள்ளது.

சாவகச்சேரி சப்பச்சிமாவடி சித்தி விநாயகர் சனசமூக நிலைய மண்டபத்தில் பரிசோதனை முகாம் நடைபெறும்.

கண், இரத்த அமுக்கம், சலரோகம், பெண் நோயியல், வாய்ப்புற்று, பொது மருந்துவம் ஆகியவற்றுக்கான பரிசோதனைகள் நடத்தப்படுமென கழகச் செயலாளர் லயன் செ.சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார். (10-117)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 227-xxxx தொடர் இலக்கமுடைய ELF - 250 (அலுமினிய பொடி) வாகனம் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0777 - 222 - 123. (35393)

5ஸ்ரீ தொடர் இலக்கமுடைய மொறிஸ் ஒக்ஸ்போட் கார் (நல்ல நிலையில் உள்ளது) விற்பனைக்குண்டு. தொடர்பு: க.குணபாலன் (பவா), பழைய வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய். (35202)

மிகவும் நல்ல நிலையில் உள்ள NPGI xxxx தொடரிலக்கமுடைய Bajaj Classic Scooter (New Model Self Start) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 126, Temple Road, Jaffna. (பார்வையிடும் நேரம் மாலை 4.00 மணி முதல் 7.00 மணிவரை) (35428)

## வீடு விற்பனைக்கு

உரும்பிராய் வடக்கு, கற்பகப்பிள்ளையார் ஒழுங்கையில், கணேசா சனசமூக நிலையத்துக்கு அண்மையில் 6½ பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. கூடிய விலை கேட்பவருக்கு முன்னுரிமை வழங்கப்படும். தொடர்பு: திருமதி ப.சர்வேஸ்வரன், சிவசக்தி கோயிலடி, அச்சுவேலி தெற்கு,
T.P. 0776-087538. (35296)

யாழ்.நகருக்கு உட்பட்ட பகுதியில் OLR சேச் அருகில் 3½ பரப்பளவு கொண்ட வீடும் வளவும் விற்பனைக்குண்டு. தரகர் இன்றித் தொடர்புகொள்ளவும். தொடர்பு: 680, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 222 - 7193, 0776192347 (35343)

## வீடும் காணியும் விற்பனைக்கு

வல்வை வீதி, 1ஆம் கட்டை தொண்டமானாறில் உள்ள 12 பரப்பு தோட்டக்காணியும், 2 பரப்புக் காணியுடன், வீடும், கிணறும் விற்பனைக்குண்டு. தொடர்பு: கதிரவேலு செல்வரத்தினம், 15ஆம் கட்டை (வடக்கு), உடுப்பிட்டி T.P. 226 3446. (35371)

## வாடகைக்குத் தேவை

சுண்டுக்குளி பகுதியில் பல்கலைக்கழக மாணவர் ஒருவருக்கு அறை வாடகைக்குத் தேவை. வாடகை விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். தொ.பே இலக்கம் 0776 - 544437. (35424)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ 28 வயது பிரான்ஸ்சில் உள்ள மணமகனுக்கு ஐரோப்பா அல்லது கனடா வதிவிடவுரிமையுடைய பொருத்தமான மணமகள் தேவை. தொடர்புகளுக்கு: க.சுந்தரலிங்கம் (அதிபர்) தாவடி தெற்கு, கொக்குவில். T.P 021 - 222 - 7810. (35420)

## கோழிக்குஞ்சு விநியோகம்

**Prima** சிவப்பு, வெள்ளை பேட்டுக்குஞ்சுகளும், **Broiler** குஞ்சுகளும் இன்று 19.08.2004 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும். தொடர்பு: ராஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. T.P. 2867, 3529, P.ரவி, தபாற்கந்தோர் வீதி சாவகச்சேரி, ஸ்ரீராம் பருத்தித்துறை பஸ்நிலையம் முன்பாக, றஞ்சித் 517, ஸ்ரான்லி வீதி, யாழ். தாரகை முதலாம் கட்டை, பருத்தித்துறை. (35430)

## தமிழ் விழா

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் தமிழ்விழா நாளை காலை 9.00 மணிக்கு மன்றத் தலைவர் லோ.சுதர்ஜனன் தலைமையில் கல்லூரி பொது மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கி.விசாகரூபனும் சிறப்பு விருந்தினராக தமிழீழ கல்விக்கழக யாழ். மாவட்டப் பொறுப்பாளர் சி.ஆர்வலனும் கலந்துகொள்ளவுள்ளனர். (10-72)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 23 |  | 31 |
| 07 | | 08 |
| 1928 | | 2003 |

### அமரர் கதிரவேலு கந்தையா

ஆண்டொன்று போனாலும் நீர்
மறைந்த நாளை எண்ணி
ஆறாத் துயரடைந்தோம் அந்தத் துயரினின்றும்
மீளமுடியாது தவிக்கின்றோம் ஐயாவே!

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

இன்று (19.08.2004) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன விருந்திலும் கலந்து சிறப்பிக்குமாறு எமது உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகிறோம்

மனைவி, மகன்,
மகள்மார், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

கைதடி தெற்கு,
கைதடி.

(35401)(35-21-19)

---

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணம் சதுரங்கச் சம்மேளனத்தின் நீண்டகால உபதலைவரும்
ஸ்தாபக உறுப்பினரும் மூத்த சதுரங்க வீரருமாகிய

### அமரர் செ.இரத்தினம்

*(முன்னாள் பிரதேச செயலர், வேலணை - சங்கானை, சிரேஷ்ட இணைப்பாளர், யாழ்ப்பாணம்)*

அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாருக்கு ஆழ்ந்த அஞ்சலியை அர்ப்பணிக்கின்றோம். அன்னாரின் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம். (35414)(26-21-19)

- யாழ்ப்பாணம் சதுரங்க சம்மேளனம்.

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

### முருகேசபிள்ளை கதிர்காமசேகரம்

B.A.(Hons) London.,Dip-in Education (Cey.)
(இளைப்பாறிய அதிபர்)



மலர்வு 20.05.1920 — உதிர்வு 30.08.2003

எமது குடும்பத் தலைவரைய், குருவாக அன்பினைச் சொரிந்து வழிகாட்டி வையத்துள் எம்மை வாழ்வாங்கு வாழவைத்து இறைவனடி சேர்ந்த எம் அன்புத் தெய்வத்தின் பிரிவு மறக்க முடியாதது! நித்தமும் உம்

நினைவில் வாழும்:
அன்பு மனைவி.பிள்ளைகள்.
மருமக்கள். பேரப்பிள்ளைகள்.

'சாந்தினிகேதன'
அளவெட்டி மேற்கு,
அளவெட்டி.

---

சுகாதார சேவைகள், மாகாணப் பிரதிப் பணிப்பாளர் பணிமனை,
யாழ்ப்பாணம்

# கேள்வி அறிவித்தல்

## வாகனங்கள் திருத்தம்

பின்வரும் வாகனங்கள் திருத்தம் செய்வதற்காக என்னால் கேள்விகள் கோரப்படுகின்றன. உரிய கேள்விப்படிவங்களை மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா100/- உம மீளளிக்கக்கூடிய கேள்விப் பிணையாக ரூபா 1000/- உம் செலுத்தி 09-09-2004 பிற்பகல் 3.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். பூர்த்திசெய்யப்பட்ட கேள்விகள் அரக்கு முத்திரையிடப்பட்ட உறையிலிட்டு 10.09.2004ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்குமுன் இதற்கென வைத்திருக்கும் கேள்விப்பெட்டியில் சேர்க்கப்பட வேண்டும்.

அலுவலக நேரங்களில் வாகனங்களைப் பார்வையிடலாம். வேறு தேவையான விவரங்களையும் அறிந்து கொள்ளலாம்.

**வாகன விவரம்**

1. 56 - 8024 - Mitsubishi D.Cab.Pick up L.200
2. 64 - 3092 - Toyota Land Cruiser
3. 31 ஸ்ரீ 2665 - Mitsubishi Jeep

(சி-36795) வைத்திய கலாநிதி க.தா.சிவபாதம்
பதில் மாகாணப் பிரதிப்பணிப்பாளர், சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.

(சி-36795)

---

# தமிழீழ வைப்பகம்

## பணிநிலை வேண்டுகை

தமிழீழ வைப்பகத்தினால் கீழ்க்காட்டப்படும் பணிநிலைகளுக்குத் தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

01. பணிநிலை: உத்தியோக உதவியாளர் தரம் - 03
தகைமைகள்:
I. க.பொ.த. (சாதாரணதர) தேர்வில் கணிதம், 42/கணிதம் II, தமிழ் உட்பட 05 திறமைச் சித்தியுடன் குறைந்தது 06 பாடங்களில் ஒரே அமர்வில் தேர்ச்சிபெற்றிருப்பதுடன், க.பொ.த. (உயர்தர) தேர்வில் 03 பாடங்களில் ஒரே அமர்வில் தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும்.
II. ஆண், பெண் இருபாலாரும்

மாதாந்த ஊதியம்: $\frac{3,670 - 5,070}{70 \text{ X } 20} + 6,000$

அகவை எல்லை: 19 - 25 வருடங்கள்

02. பணிநிலை: பாதுகாப்பு உதவியாளர் தரம் - 03
தகைமைகள்:
I. 10ஆம் தரத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
II. நல்ல உடல் வலுவும், தேக ஆரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.
III. உயரம் 5' 5" இற்குக் குறையாமலும் நெஞ்சுச்சுற்று 32" இற்குக் குறையாமலும் இருத்தல்வேண்டும்.
IV. ஆண்பாலார் மட்டும்.
V. கராத்தே போன்ற தற்காப்புக் கலைகளுக்கான சான்றிதழ்கள், உடற்தகைமையை உறுதிசெய்யும் சான்றிதழ்கள் என்பவற்றைக் கொண்டுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மாதாந்த ஊதியம்: $\frac{2,780 - 3,780}{50 \text{ X } 20} + 6,000$

அகவை எல்லை: 28 - 35 வருடங்கள்

வேண்டுகைகள் யாவும் உரிய படிவத்தில் முழுமையாக நிறைவுசெய்யப்பட்டுக் கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் "ஆட்சேர்ப்புக்கான வேண்டுகை உத்தியோக உதவியாளர்" அல்லது "ஆட்சேர்ப்புக்கான வேண்டுகை பாதுகாப்பு உதவியாளர்" எனக் குறிப்பிடப்பட்டு 2004/09/15ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்பாகக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைத்தல்வேண்டும். வேண்டுகைப் படிவங்களையும், மேலதிக விளக்கங்களையும் தமிழீழ வைப்பகத்தின் எல்லாக் கிளைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

**மேலாளர்,
ஆளுகைப்பகுதி,
நடுவப்பணியகம்,
தமிழீழ வைப்பகம்.**

*குறிப்பு:* 01. முழுமையாக நிறைவுசெய்யப்படாத, சான்றிதழ்கள் இணைக்கப்படாத வேண்டுகைகள் நிராகரிக்கப்படும்.
02. நிறைவுசெய்யப்பட்ட வேண்டுகைகளைப் பதிவுத் தபாலில் (மேலாளர், ஆளுகைப்பகுதி, நடுவப்பணியகம், தமிழீழ வைப்பகம், யாழ்.சாலை, கரடிப்போக்கு, கிளிநொச்சி எனும் முகவரிக்கு) நேரடியாகவோ அல்லது தமிழீழ வைப்பகக் கிளைகளினூடாகவோ அனுப்பிவைக்கலாம்.

(சி-36719) (26-14-16)

# சுதந்திரப் போராட்டத் தியாகியை மத்திய அமைச்சர் அவமதித்தார்?

## நாடாளுமன்றில் அமளிதுமளி

புதுடில்லி,ஓக.19

இந்தியச் சுதந்திரப்போராட்டவீரர் விநாயக் தாமோதர் சாவர்க்கரின் நினைவிடத்தில் உள்ள வாசகங்களை நீக்க உத்தரவிட்டதற்கு, மத்திய பெற்றோலியத்துறை அமைச்சர் மணிசங்கர் அய்யர் மன்னிப்பு கேட்கக்கோரி நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் எதிர்க கட்சிகள் அமளியில் ஈடுபட்டன.

அந்தமானில் நடந்த சுதந்திரதினக் கொடியேற்றுவிழாவின்போது செல்லுலார் சிறையில் வைக்கப்பட்டுள்ள நினைவுத்தூணில் உள்ள வீர சாவர்க்கரின் வாசகங்களை அகற்றுவதற்கு மத்திய அமைச்சர் மணிசங்கர் அய்யர் உத்தரவிட்டார் என்று கூறப்படுகிறது.

இதையடுத்து, நேற்றுமுன்தினம் நாடாளுமன்றம் கூடியதும் மத்திய அமைச்சர் மணிசங்கர் அய்யர், உடனடியாக மன்னிப்புக் கேட்க வேண்டும் எனச் சிவசேனை உள்ளிட்ட எதிர்க் கட்சி உறுப்பினர்கள் கோஷம் எழுப்பினர்.

இதனால், ஏற்பட்ட அமளியில் அனைத்து எதிர்க்கட்சி உறுப்பினர்களும் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.

மீண்டும் அவை கூடியபோது பெற்றோலியத்துறை அமைச்சர் மணிசங்கர் அய்யர் என்ன உத்தரவிட்டார் என அரசுக்குத் தெரியாது. அது குறித்து தகவல் அறிந்து அவையில் தெரிவிக்கிறேன்.

எனவே, அவை நடவடிக்கைகள் சுமுகமாக நடைபெற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஒத்துழைப்பு அளிக்கவேண்டும் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் பிரணப்முகர்ஜி தெரிவித்தார்.

இதனால், கோபமுற்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வீர சாவர்க்கருக்கு ஆதரவாக அவையில் கோஷம் எழுப்பி அமளியில் ஈடுபட்டனர். (ஒ)

## நர்மதா நதியில் லட்சக்கணக்கானோர் நீராடினர்



இந்தியாவின் மத்திய பிரதேச மாநிலம்-ஹோஷங்காபாத்தில் ஆடி அமாவாசையை முன்னிட்டு நடத்தப்படும் சவான் திருவிழாவில் நர்மதா நதியில் இலட்சக்கணக்கான பக்தர்கள் புனித நீராடிய காட்சி. 122 ஆண்டுகளுக்குப்பிறகு இந்தத் திருவிழா இப்போது கொண்டாடப்படுகிறது.

# மடாதிபதிகளின் கோபம் தணிக்க திருப்பதி ஆலயம் நடவடிக்கை!

பள்ளிப்பட்டு,ஓக.19

இந்தியாவின் ஆந்திரமாநிலத்தில் உள்ள திருப்பதி வெங்கடாஜலபதி ஆலயத்தின் ஆயிரங்கால் மண்டபத்தை இடித்துப் புதிய மண்டபம் கட்ட தேவஸ்தானம் முடிவு செய்தது. அதே போல் மகா மண்டபத்தையும் புதிதாகக் கட்ட தேவஸ்தானம் முடிவு செய்தது. இந்த இரு செயல்களுக்கும் பலரிடமிருந்து எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

கடந்த சில நாள்களாகப் பல மடாதிபதிகள் தேவஸ்தானத்தைப்பற்றியும் ஆயிரங்கால் மண்டபம், மகாபிரகாரம் ஆகியவை புதிதாகக் கட்டுவது பற்றியும் பலவிதமாக விமர்சனம் செய்து வருகின்றனர்.

இந்த விமர்சனங்களுக்குச் சரியான முறையில் பதிலடி கொடுக்காவிட்டால் பக்தர்களிடமும், பொது மக்களிடமும் தேவஸ்தானம் பற்றித தவறான எண்ணம் உருவாகும் என்று ஆலய நிர்வாகிகள் கருதுகின்றனர்.

அதனால், தேவஸ்தானம் பற்றிச் சிலர் கூறி வரும் தவறான கருத்துகளுக்குத் தர்ம பிரசாரக் குழுக்கள் மூலம் பதிலடி கொடுக்க அவர்கள் முடிவுசெய்துள்ளனர்.

மகாபிரகாரம் கட்டும் பணி ஆகம சாஸ்திர முறைக்கு எதிரானது அல்ல என்று பண்டிதர்கள் புத்தகத்தில் எழுதியுள்ளதை மக்களுக்குத் தெரியப்படுத்தும் பொறுப்பு தர்மப் பிரசாரக்குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.



காட்டாமணக்குப் பயிர் மூலமாக உயிரி எரிபொருள் தயாரிக்கும் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கான ஒப்பந்தத்தில் முதல்வர் ஜெயலலிதா முன்னிலையில் சென்னையைச் சேர்ந்த 'மோகன் ப்ரூவரீஸ்' நிறுவன நிர்வாக இயக்குநர் எம்.நந்தகோபால் (இடது), பிரிட்டனைச் சேர்ந்த 'டிஒயில்ஸ்' நிறுவனத் தலைமைச் செயலதிகாரி மார்க் எம்.எல் க்யுன் கைச்சாத்திடுகின்றனர்.

# தமிழகத்தில் வெயில் கொளுத்துகிறது

சென்னை,ஓக.19

தமிழகத்தில் கோடைகாலத்தில்கூட இல்லாத அளவில் கடும் வெப்பநிலை நிலவுகிறது.

மாநிலத்தில் சென்னை, மதுரை, வேலூர், கடலூர், நாகப்பட்டினம் ஆகிய 5 இடங்களில் வெப்பநிலை 100 பாகையைக் கடந்தது.

தமிழகத்திலேயே அதிகபட்சமாக மதுரையில் இதுவரை இல்லாத அளவில் வெப்பநிலை 105 பாகையை எட்டியது.

தமிழகத்தில் கடந்த சில நாள்களாகக் கோடையின் வெம்மையை விஞ்சும் வகையில், அனல் காற்றுடன் கூடிய காலநிலை நிலவுகிறது.

தென்மேற்குப் பருவமழை குமரி, நெல்லை, கோவை உள்ளிட்ட மாவட்டங்களில் மட்டுமே தொடர்ந்தது. இதர மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் அவ்வப்போது மட்டுமே மழை பெய்துள்ளது.

இதனால் சென்னை, காஞ்சிபுரம், திருவணணாமலை, திருவள்ளூர், கரூர், சேலம், தர்மபுரி, சிவகங்கை, ராமநாதபுரம் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களிலும் வரட்சி நீடிக்கிறது.

பாண்டிச்சேரியிலும் வெப்பநிலை 103 பாகையை எட்டியது.

(ஒ)

## 5 ரூபா நோட்டுகள் இனிமேல் இல்லை

ஐந்து ரூபா நோட்டுகள் அச்சடிப்பதை நிறுத்திவிட இந்திய அரசு முடிவுசெய்துள்ளது. இனி 5ரூபா நாணயங்கள் மட்டுமே புழக்கத்தில் இருக்கும் - என்றும் அறிவித்துள்ளது.

இது குறித்து நிதித்துறை இணை அமைச்சர் பழனி மாணிக்கம் கூறியதாவது:-

ஐந்து ரூபா மதிப்புடைய நோட்டுகளை அச்சடித்து வழங்குவதைக் கைவிட அரசு முடிவு செய்துள்ளது. அதற்குப் பதில் இனி நாணயங்களாக வெளியிடப்படும். ஏற்கனவே, புழக்கத்திலுள்ள ஐந்து ரூபா நோட்டுகள் அப்படியே இருக்கும் அவற்றை அரசு திரும்பப்பெறாது - என்றார் அவர்.

# தமிழகத்தில் உயிரி 'டீசல்' உற்பத்தி

காட்டாமணக்குப் பயிர் மூலமாக உயிரி எரிபொருள் (பயோ டீசல்) தயாரிக்கும் திட்டத்தைச் செயல்படுத்தச் சென்னையைச் சேர்ந்த நிறுவனத்துக்கும், பிரிட்டனைச் சேர்ந்த நிறுவனத்துக்கும் இடையே ஒப்பந்தம் செவ்வாய்க் கிழமை கையெழுத்தானது.

தமிழக தலைமைச் செயலகத்தில் முதல்வர் ஜெயலலிதாவின் முன்னிலையில் இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது.

சென்னையில் உள்ள 'மோகன் ப்ரூவரீஸ்' நிறுவனமும், பிரிட்டனைச் சேர்ந்த 'டி1 ஒயில்ஸ்' நிறுவனமும் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

காட்டாமணக்குப் பயிரிடல் மற்றும் உற்பத்தியை மேம்படுத்தவும், மேலாண்மை செய்யவும், உயிரி எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தை அமைக்கவும் இந்த ஒப்பந்தம் வழிசெய்கிறது.

இந்தியாவில் காட்டாமணக்குப் பயிர் மூலமாக உயிரி எரிபொருள் தயாரிக்கும் திட்டத்தைச் செயல்படுத்த இதுபோன்ற ஒப்பந்தம் முதல் முதலாகத் தமிழகத்தில்தான் கையெழுத்தாகியுள்ளது.

## காங். அலுவலகத்தில் வெடிகுண்டு வீச்சு!

ஒரிசா மாநிலம், புவனேஸ்வர் நகரில் உள்ள காங்கிரஸ் கட்சி அலுவலகத்தை ஒரு கும்பல் 2 வெடிகுண்டுகளை வீசித் தாக்கியது. குண்டுகள் வெடித்ததில் கண்ணாடிகள் உடைந்து சிதறின. கட்சித் தொண்டர் ஒருவர் காயம் அடைந்தார்.

# சூலாயுதம் மீதான தடைநீக்கம்!

ராஜஸ்தான் மாநிலத்தில் காங்கிரஸ் ஆட்சியின்போது சூலாயுதத்துக்கு விதிக்கப்பட்ட தடையை, தற்போது பதவியிலுள்ள பாரதீய ஜனதா அரசு இப்போது நீக்கிவிட்டது.

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் விஸ்வஹிந்து பரிஷத் அமைப்பு தொண்டர்களுக்கு சூலாயுதம் வழங்கும் நிகழ்ச்சியை நடத்தியது. இதனால், மதக்கலவரம் தலைதூக்கும் என்று அஞ்சிய காங்கிரஸ் முதல்வர் அசோக் கெலோட், பொது இடங்களில் சூலாயுதம் வழங்கவோ, எடுத்துச் செல்லவோ, வைத்திருக்கவோ தடைவிதித்தார். இதற்காக ஆயுதச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்பட்டது. ஆனால், அதில் சூலாயுதம் என்று நேரடியாகக் குறிப்பிடப்படவில்லை.

ஒன்றுக்கு மேற்பட்ட கூர்முனை கொண்ட ஆயுதங்களை வைத்திருக்கவோ, எடுத்துச் செல்லவோ கூடாது என்று கூறப்பட்டிருந்தது.

இந்த உத்தரவால் சமையலறையில் பயன்படுத்தப்படும் சிலவகைக் கத்திகளைக் கூட தடைசெய்யப்பட்ட ஆயுதமாகக் கருத நேரும் என்பதால் இந்த உத்தரவை விலக்கிக் கொள்வதாக மாநில உள்துறை அமைச்சர் குலாப் சந் கடாரியா அறிவித்தார்.




# மாறன் நினைவாக முத்திரை வெளியீடு

மறைந்த முன்னாள் மத்திய அமைச்சர் முரசொலி மாறனின் நினைவு முத்திரை வெளியிடும் விழா நேற்றுமுன்தினம் சென்னையில் நடந்தது. இதில் பங்கேற்க அகில இந்திய காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி சென்னை வந்தார். அவர் நினைவு முத்திரையை வெளியிட்டார். அதனை தி.மு.க. தலைவர் கருணாநிதி பெற்றுக்கொண்டார்.

இதற்கிடையில் சென்னையில் நடைபெற்ற மற்றொரு விழாவில் முரசொலி அலுவலக வளாகத்தில் மறைந்த முன்னாள் மத்திய அமைச்சர் முரசொலி மாறனின் முழு உருவச் சிலையை தி.மு.க. தலைவர் கருணாநிதி திறந்து வைத்தார்.

# நாய்கள் கடிபட்டதால் ஊரில் கலவரம்; 17 ஆண்டுகளின் பின் இப்போது தீர்ப்பு

புதுடில்லி,ஓக.19

அக்கம்பக்கத்துக்குக் குழந்தைகள் சண்டையிட்டால் பிரச்சினைவரும் என்றில்லை. நாய் போன்ற வளர்ப்புப் பிராணிகளுக்கு இடையே சண்டை மூண்டாலும் அது தீராத தலைவலியைத் தரும்.

1987 ஆம் ஆண்டு பெப்ரவரி 11 ஆம் திகதி உத்தரப்பிரதேச மாநிலத்தில் லட்சுமிபூர் கெடி என்ற நகரில் ஒருவரின் வளர்ப்பு நாய் பக்கத்து வீட்டுக்காரரின் செல்ல நாயைக் கடித்துக் குதறிவிட்டது.

அதன்பிறகு நாய்கள் சமாதானமாகப் போய் விட்டன.

இருப்பினும், அதை வளர்ப்போருக்கு இடையே சண்டை மூண்டது. ஒருவரோடொருவர் கைகலப்பில் ஈடுபட்டனர். இது ஊர்க்கலவரமாக மாறியது.

வழக்குப் பதிவாகியது. நீதித்துறையின் ஆமைவேக நடவடிக்கை காரணமாக 17 ஆண்டுகளுக்குப் பின் கடந்த வாரம்தான் நீதிமன்றத்தில் இந்த வழக்கு ஒரு முடிவுக்கு வந்தது.

முன்னதாக 199? ஓகஸ்ட் 20 இல் இவ் வழக்கில் சம்பந்தப்பட்டவர்களுக்கு 3 ஆண்டு சிறைத்தண்டனை விதித்து - விசாரணை நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.

இதையும் எதிர்த்து அலகாபாத் நீதிமன்றத்தில் குற்றவாளிகள் சார்பில் மேன்முறையீடு செய்யப்பட்டது.

இதில் நீதிமன்றம் 17 ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற சம்பவம் மீதான இவ்வழக்கில் குற்றவாளிகள் ஏற்கனவே, அனுபவித்த தண்டனையே போதும். மேலும் தண்டனை எதுவும் தேவையில்லை என்று தீர்ப்புக் கூறியுள்ளது. (ஒ)

# கறுப்பு முத்தை உருவாக்கி இந்திய விஞ்ஞானி சாதனை

உலகிலேயே மிகவும் அரிதான மிகப் பெரிய கறுப்பு முத்தை உருவாக்கிச் சாதனை புரிந்துள்ளார் இந்திய விஞ்ஞானி டாக்டர் அஜய் கே.சங்கர். சர்வதேச சந்தையில அதன் மதிப்பு இலங்கைப் பணத்தில் 28 லட்சம் ரூபாவாகும்.

இது பற்றி விஞ்ஞானி சங்கர் கூறியதாவது:-

தற்போது அந்தமான், நிக்கோபார் தீவுப் பகுதியில் இந்த ஆராய்ச்சியை மேற்கொண்டு இருக்கிறேன் 8 மில்லி மீற்றர் மையப் பகுதியைக் கொண்ட அந்தக் கறுப்பு முத்தை 7 மாதகாலத்தில் உருவாக்கினேன். அதற்குக் கரு நிற உதடு உடைய சிப்பியைப் பயன்படுத்தினேன்.

எனது ஆராய்ச்சியின் முதற்கட்டத்தில் ஆயிரம் முத்துச்சிப்பிகளில் செயற்கை முறையைப் பயன்படுத்தி முத்துகளை உருவாக்குவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டேன். அதில் 905 சிப்பிகளில் முத்துக்கள் உருவாகி இருந்தன. உலக அளவில் இத்தகைய வெற்றி விகிதம் என்பது சாதனையாகும். ஏனென்றால், செயற்கை முயற்சியில் 60 சதவீத வெற்றி தான் இதுவரை உலக சாதனையாகும்- என்றார் அவர்.

# ஒரே பிரசவத்தில் 3 குழந்தைகள்

கேரள மாநிலம், பாலக்காடு மாவட்டம் - வடக்கன்சேரியை அடுத்த அஞ்சுமூர்த்தி மங்கலம் கிராமத்தைச் சேர்ந்தவர் ராஜன். இவரது மனைவி பிரவீணா (வயது 23).

நிறைமாதக் கர்ப்பிணியாக இருந்த பிரவீணாவுக்குப் பிரசவவலி ஏற்பட்டது.

உடனே அவரை ஆலத்தூரில் உள்ள தனியார் ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். அவரைப் பரிசோதித்த மருத்துவர் அறுவைச் சிகிச்சை செய்யவேண்டும் என்று தெரிவித்தார்.

இதையடுத்து, பிரவீணாவுக்கு அறுவைச் சிகிச்சை நடந்தது. பின்னர் ஒன்றன்பின் ஒன்றாக 2 ஆண் குழந்தைகளும், ஒரு பெண் குழந்தையும் பிறந்தன. தற்போது தாயும், குழந்தைகளும் நலமாக உள்ளனர். தலைப் பிரசவத்தில் 3 குழந்தைகள் பிறந்திருப்பது குறித்து ராஜனும் அவரது குடும்பத்தினரும் மகிழ்ச்சி அடைந்தனர்.

**PRINCE**

துருப்பிடிக்காத
உலோக கிச்சன் சின்க்

பிரின்ஸ்
நீடித்த உழைப்பிற்கு
கூடிய நிக்கள்

பூசப்பட்டுள்ளதால் சந்தையிலுள்ள
ஏனைய கிச்சன் சின்குகளைவிட
விசேஷமானது.



Access Graphics

ஏக விநியோகஸ்தர்கள்:
**செண்ற் அந்தனீஸ் ஹார்ட்வெயார் (பிரைவேட்) லிமிட்டட்**
காட்சியறை: 524, ஸ்ரீசங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: 2324261-5, 2337283-5, 2436779 பெக்ஸ்: 2446554

விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப்பொருட்கள் வர்த்தகர். 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


## சிறுவர் இல்ல ஸ்தாபகர் சிலை திறப்பு

கைதடி சைவச் சிறுவர் இல்ல ஸ்தாபர் அமரர் கலாநிதி குலபதி ஆறுமுகம் கந்தையாவின் திருவுருவச்சிலை திரைநீக்க விழா சைவச் சிறுவர் இல்லத்தில் எதிர்வரும் 22 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு அருட்கவி சீ.விநாசித்தம்பி தலைமையில் இடம் பெறவுள்ளது. சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலர் நா. சத்தியநாதன் தலைமையில் நடை பெறும் இந்நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீல ஸ்ரீசோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர். விழா இறுதியில் கைதடி சைவ ஐக்கிய சங்கத்திற்கு அன்னாரின் நினைவாக சமய நூல்கள்" அன்பளிப்பாக வழங்கப்படுமென விழா ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.(ஓ -117)

உ

# திருமண வாழ்த்து

இன்று (19.08.2004) வியாழக்கிழமை
இல்லறமாம் நல்லற வாழ்வெனும்
திருமண பந்தத்தில் இணையும்,

| | | |
|---|---|---|
| எமது அன்புப் புதல்வன் | | எமது அன்புப் புதல்வி |
| திருவளர் செல்வன் |  | திருவளர் செல்வி |
| **ராஜ்குமார்** | | **தயாநுஷா** |
| அவர்களையும் | | அவர்களையும் |

சகல சௌபாக்கியங்களையும் பெற்று இறைவனின்
ஆசியையும் பெற்று பல்லாண்டு காலம் நலமுடன்
இன்புற்று வாழ உளமார வாழ்த்துகின்றோம்.

**- திரு.திருமதி செல்வநாயகம்**
**குடும்பம், கொழும்பு.**

(35346) (24)

## தம்பசிட்டி- மாயக்கையம்பதி ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானம் மஹோற்சவ விஞ்ஞாபனம்

கொடியேற்றம்: 20.08.2004 வெள்ளிக்கிழமை மு.ப. மணி10.01.
தேர்த்திருவிழா: 28.08.2004 சனிக்கிழமை
சுவாமி தேரில் எழுந்தருளல் மணி 10.35.
ஆலய பிரதமகுருக்கள்: சிவஸ்ரீ.சி.மகேந்திரநாதக்குருக்கள்
மஹோற்சவ பிரதமகுரு: சாதக இளவரசு சிவஸ்ரீசுந்தரராசக் குருக்கள் ஸ்ரீரங்கநாதக்குருக்கள் (வழக்கம்பரை, முத்துமாரியம்மன் தேவஸ்தானம்)

சாதக இளவரசு சிவஸ்ரீ. சுந்தரராசக்குருக்கள்
ஸ்ரீரங்கநாதக்குருக்கள்
முதல்முதலாக கொடியேற்றும் வைபவம் சிறப்புற
வாழ்த்துபவர்கள்: **"பஜனைச் சபையார்"**


*வழக்கம்பரை.*
*சுழிபுரம்.*
(சி.36773)(39-11-17)


# இலவச..

நடமாடும் சேவை வாரம்
திங்கள் 16 ஆம் திகதிமுதல்
வெள்ளி 20 ஆம் திகதி வரை

**மெற்றொபொலிட்டன்**

உங்களை வரவேற்கிறது
வாருங்கள்.............
இல. 200, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.



(அல்லது)

அழையுங்கள்.........
(021) 222 5461,
222 5462
(பிரத்தியேகசேவைத்தொடர்பு)


**metropolitan**

இலவச தொழில்நுட்பக் கவனிப்பும்
சேவையும்சகல மெற்றொபொலிட்டன்
உபகரணங்களுக்கும் வழங்கப்படும்.

Canon கொப்பியர், Canon பக்ஸ் இயந்திரம்,
Superfax டுப்ளிகேட்டர்ஸ் மற்றும் இதர....

NAVAKALA
நவகலா
இல.200,காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.


## கலையாத நினைவுகளுடன் ஓராண்டு நினைவலைகள்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 05 |  | 30 |
| 11 | | 08 |
| 1932 | | 2003 |

அமரர்

# பொன்னையா நடராசா

(ஓய்வுபெற்ற ஊழியர், நில அளவைத் திணைக்களம்)
திதி: சதுர்த்தி 19.08.2004

ஆண்டு ஒன்று சென்றதய்யா – ஆனால்
உங்கள் நிழலில் வாழ்ந்த வாழ்வு போல் இனி வருமா?
அன்பாய் அரவணைத்து ஆதரவு மொழி பேசி
உங்கள் மீது நாம் கொண்ட பாசமும் நேசமும்
உங்களையே நிதம் எண்ணி கலங்க வைக்கிறதே
எங்கள் வாழ்வில் ஒளியேற்றி வைத்த – ஐயாவே
என்றும் உங்கள் நினைவு நெஞ்சில் நிலைக்கிறதே – ஐயா
மங்காத மணி விளக்காய் சுடர் விட்டு பிரகாசிக்கும்
உங்கள் திருமுகத்தை மறக்க முடியாது ஐயா மறக்க முடியாது.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

என்றும் ஈரவிழிகளுடன் சோகம் சுமக்கும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*வள்ளி வளவு,*
*வியாபாரி மூலை,*
*பருத்தித்துறை.*

(35373) (24-11-17-33)

# புலிகளின் படகு குறித்துக் கடற்படை கண்காணிப்புக்குழுவிடம் முறையீடு

கொழும்பு,ஓக.19

முல்லைத்தீவுக்கு அப்பால் சாலைக்கடற் பரப்பில் விடுதலைப் புலிகளின் ட்ரோலர் படகு ஒன்றில் இருந்து பெட்டிகள் இறக்கப்பட்டன என்றும் - அவற்றில் ஆயுதங்கள் இருந்திருக்கலாம் என்று தாம் சந்தேகப்படுகின்றனர் என்றும் - கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இது குறித்துக் கடற்படையினர் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறையிட்டுள்ளனர்.

"செவ்வாய்க்கிழமை காலையில் சாலைக் கடற்பரப்பில் சந்தேகத்துக்குரிய ட்றோலரின் நடமாட்டத்தைக் கடற்படையினர் அவதானித்தனர். அதனை நோக்கிச் சிறிய டிங்கி ஒன்று வந்தது. ட்றோலரில் இருந்து டிங்கிக்குப் பெட்டிகள் இறக்கப்பட்டன. அவற்றுக்குள் ஆயுத தளபாடங்கள் இருக்கலாம் என்று சந்தேகம் ஏற்பட்டுள்ளது" - என்று பாதுகாப்பு நிலைவர அறிக்கை தெரிவித்தது.

கடற்படையினரின் முறைப்பாட்டை அடுத்து அந்த ட்றோலரைச் சோதனையிடுவதற்குக் கண்காணிப்புக் குழுவினர் முற்பட்டபோதும், அங்கு செல்வதற்கு விடுதலைப் புலிகள் அதற்கு அனுமதிக்கவில்லை என்றும் - அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், கடற்படையினரின் இந்தக் குற்றச்சாட்டைக் கண்காணிப்புக் குழுவின் தலைவரான ரொன்ட் புறுஹொவ்டே மறுத்துள்ளார். அந்தப் பிரதேசத்துக்குள் கண்ணிகள் இருக்கும் என்று எச்சரிக்கப்பட்டதனால் தனது கண்காணிப்பாளர்கள் அங்கு அனுப்பப்படவில்லை என்றும் - அவர் தெரிவித்தார்.

"சாலைக் கடற்பகுதியில் ஒரு ட்ரோலர் படகும் டிங்கியும் இருந்ததைக் கடற்படைப் படகு பார்த்தது. அதில் எமது கண்காணிப்பாளர் ஒருவர் இருந்தார்.

ட்றோலரில் இருந்து என்ன இறக்கப்பட்டது என்பது தொடர்பாக எந்தத் தகவலும் இல்லை. அப்பகுதியில் எமது கண்காணிப்புப் படகு ஒன்றும் இருந்தது. ஆனால், கடலில் கண்ணிகள் இருக்கின்றன என்று எமக்குத் தகவல் வந்ததால் எமது படகு அப்பகுதிக்குச் செல்வதற்கு நான் அனுமதிக்கவில்லை" - என்றார் ரொன்ட் புறுஹொவ்டே.

(ஐ-க)

## சைவப்புலவர் பட்டமளிப்பு விழா

வலி.தென்மேற்கு, ஓக.19

அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் நடத்தும் இவ்வருடத்திற்கான சைவப்புலவர். மற்றும் இளம் சைவப்புலவர் பட்டமளிப்பு விழா அடுத்த மாதம் 4ஆம் திகதி சனிக்கிழமை வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத்தலைவர் சைவப்புலவர் மு.திரு ஞானசம்பந்தபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில், பிரதம அதிதியாக யாழ். பல்கலைக்கழகக் கலைப்பீடாதிபதி பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் கலந்துகொண்டு பட்டங்களை வழங்குவார். சங்கம் நடத்திய சைவப்புலவர் பரீட்சையில் சித்திபெற்ற 15 பேருக்கு சைவப்புலவர் பட்டமும், 12 பேருக்கு இளம் சைவப்புலவர் பட்டமும் வழங்கப்படவுள்ளன.

'உண்மை விளக்கம்' என்ற சைவ சித்தாந்த சாஸ்திர நூல் வெளியீடும் இவ்விழாவில் இடம்பெறவுள்ளதாக சங்கச் செயலாளர் கலாபூஷணம் சு.செல்வத்துரை தெரிவித்தார். (ஐ-135)




யாழ. போதனா வைத்தியசாலை தாதியர் பயிற்சிப் பாடசாலையில் 2002ஆம் கல்வி ஆண்டு மாணவத் தாதியர்களுக்குத் தொப்பி அணியும் வைபவம் அண்மையில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படம். இவ்வைபவத்தைத் தாதிய பரிபாலகர் எஸ்.கனகரத்தினம் மங்களவிளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும் பயிற்சிப்பாடசாலையின் முன்னாள் பதில் அதிபர் செல்வி ஆர்.வல்லிபுரநாதன் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (10-15)

### கற்றல் செயற்பாட்டிலிருந்து இடைநிறுத்தப்பட்ட

# கல்வியியற்கல்லூரி மாணவனை மீண்டும் இணைக்கப் பணிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.19

தேசியக்கல்வியியற் கல்லூரியில் இருந்து இடைநிறுத்தப்பட்ட மாணவனை உடனடியாக இணைத்துக்கொள்ளுமாறு இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் தலைமையகம் பணித்துள்ளது.

யாழ். கல்வியியற் கல்லூரியில் கல்வி பயிலும் என்.ரவிராஜ் என்னும் மாணவன் கல்லூரியின் பீடாதிபதியால் கற்றல் செயற்பாடுகளில் இருந்து இடைநிறுத்தப்பட்டார். இது தொடர்பாகச் சம்பந்தப்பட்ட மாணவன் பீடாதிபதிக்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு ஒன்றைச் செய்திருந்தார்.

முறைப்பாடு குறித்து விசாரணைகளை மேற்கொண்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக இணைப்பாளர் ஆர்.பி. சந்திரசேகர விசாரணை அறிக்கையைத் தமது கொழும்புத் தலைமையகத்திற்கு அனுப்பியிருந்தார்.

இதனையடுத்து இதுதொடர்பான விசாரணைக்காக யாழ். கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி மற்றும் கல்வியியற் கல்லூரியின் ஆணையாளர் ஆகியோர் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் தலைமையகத்திற்கு அழைக்கப்பட்டிருந்தனர். அந்த விசாரணைகளின் முடிவில் சம்பந்தப்பட்ட மாணவனை உள்வாங்குமாறு யாழ். கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதிக்கு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமையகம் பணித்திருந்தது.

(ஐ-5)

## பண்டாரவளை பஸ் விபத்தில் ஒருவர் பலி; 30 பேர் காயம்!

கொழும்பு,ஓக.19

பண்டாரவளை, எட்டம்பிட்டிய பகுதியில் உள்ள அழுனுகெவப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் தனியார் பஸ் ஒன்று குடைசாய்ந்து விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்தார். மேலும் முப்பது பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் பண்டாரவளை, தியத்தலாவ மற்றும் பதுளை வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவ்விபத்துத் தொடர்பாகப் பண்டாரவளைப் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-8)

# விளக்கமறியல்கைதி எம்.பி. நாடாளுமன்றத்துக்கு வந்தார்

கொழும்பு,ஓக.19

ஊழல் குற்றச்சாட்டின்பேரில் பொலீஸாரால் அதிரடியாகக் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் முன்னாள் அமைச்சரும், எம்.பியுமான அப்துல் காதர் நேற்றுமுன்தினம் அனைவரும் ஆச்சரியப்படத்தக்கவகையில் திடீரென நாடாளுமன்றுக்கு வருகைதந்தார்.

நாடாளுமன்றம் கூடியிருந்த சமயம் திடீரெனச் சபா மண்டபத்துக்குள் அவர் நுழைந்ததும் அது ஆளும் கட்சியினரின் பக்கம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. எதிர்க்கட்சியினரின் பக்கம் மகிழ்ச்சி ஆரவாரத்தையும் அது ஏற்படுத்தத் தவறவில்லை.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஆளும் கட்சியினருக்கும் எதிர்க்கட்சியினருக்கும் இடையில் பலத்த வாக்குவாதமும் எழுந்தது.

'பெண் கள்ளன்', 'காட் மோசடிக்காரன்', ஐ.ஆர்.ஸி. போன்ற வார்த்தைகளும், 'அரிசித் திருடன்' என்ற வார்த்தையும் பிரயோகிக்கப்பட்டன.

எனினும், சபாநாயகரின் பெருமுயற்சியால் சபையில் அமைதி ஏற்படுத்தப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர்களால் வாய்மூலம் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு அமைச்சர்கள் நேற்று முன்தினம் விடையளித்துக் கொண்டிருந்தனர்.

இந்தவேளையில், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, எம்.பிக்களான டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன, ருக்மன் சேனநாயக்க போன்றோர் புடைசூழ அப்துல்காதர் எம்.பி. சபைக்குள் பிரவேசித்தார். வழமைபோல் இரண்டாவது வரிசையில் ருக்மன் சேனாநாயக்காவுக்கு அருகில் அவர் அமர்ந்துகொண்டார்.

அப்போது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மேசைகளைத் தட்டி மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

ஆளும் கட்சி உறுப்பினரான மேர்வின் சில்வா வழமைபோல் ஏதேதோ கத்தினார். ஐ.தே.கட்சியின் மகேஸ்வரன் எம்.பிக்கும், ஆளும்கட்சி உறுப்பினர்களுக்கும் இடையில் சூடான வார்த்தைப் பிரயோகங்கள் இடம்பெற்றன.

அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே, மகேஸ்வரன் எம்.பியின் கூற்றுக்களைக் கண்டித்தார். இதனால், வாக்குவாதம் மேலும் கூடியது.

எனினும், சபாநாயகர் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் சபையில் அமைதியை ஏற்படுத்தினார். தொடர்ந்து அமைச்சர்கள் கேள்விகளுக்கான பதில்களை அளித்தனர்.

ஸ்ரீல.மு.காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் உட்பட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் காதர் எம்.பியிடம் சென்று கைலாகு கொடுத்துத் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டனர்.

விளக்கமறியலில் இருக்கும் அப்துல்காதர் எம்.பி. சபாநாயகரின் விசேட அனுமதியுடன் - விசேட சிறப்புப் பாதுகாவல்களுடனேயே நாடாளுமன்ற அமர்வுக்கு அழைத்துவரப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# 786 ஆம் இலக்க பஸ்சேவை சீரின்மையால் பயணிகள் விசனம்

யாழ்ப்பாணம்,ஓக.19

யாழ்ப்பாணத்திற்கும் காரைநகருக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் 786 ஆம் இலக்க பஸ்சேவை சில தினங்களாகக் குறிப்பிட்ட நேரத்திற்குச் செல்லாமல் நேரம் மாறி ஒழுங்கீனமாகச் சேவையில் ஈடுபடுவதாகப் பயணிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

இதனால், பாடசாலை மாணவர்கள், தனியார் கல்வி நிறுவன மாணவர்கள் மற்றும் யாழ். நகரில் உள்ள அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரிகின்ற ஊழியர்கள் குறிப்பிட்ட நேரத்தில் தமது கடமைகளுக்குச் சமுகமளிக்க முடியாமல் உள்ளது.

இதேபோன்று மாலை நேரங்களிலும் பஸ் சேவை சீரின்மையால் மாணவர்களும் மற்றும் தொழில்புரிகின்ற பெண்களும் குறிப்பிட்ட நேரத்திற்குரிய பஸ்ஸைத் தவறவிட்டுப் பெரும் அசௌகரியத்திற்கு உள்ளாகும் நிலை காணப்படுகின்றது.

இந்த பஸ்சேவையை ஒழுங்காகக் குறித்த நேரத்தில் இடம்பெறுவதற்குச் சம்பந்தப்பட்டோர் விரைந்து நடவடிக்கை எடுப்பார்கள் என்று பயணிகள் எதிர்பார்க்கின்றனர். (ஐ)

# சாயி சிந்தனை

## இல்லாத இடமே இல்லை



கடவுள் எல்லோரிடமும் இருக்கிறார். கடவுள் இல்லாத இடம் இல்லை. ஸர்வ பூத நமஸ்காரம் கேசவம் பிரதி கச்சதி! யாரையெல்லாம் நீ மதிக்கிறாயோ அது இறைவனையே போய்ச் சேருகிறது. இறைவன் உன்னை விட்டுத்தனியாக எங்கோ விலகியிருப்பதாக எண்ணாதே. கடவுள் உன்னிடம் இருக்கிறார். உனக்கு மேலே உன்னைச் சுற்றி இருக்கிறார். நீயும் கூட கடவுளே! நீ வெறும் மனிதப் பிறவி என எண்ணாதே! நீங்கள் எல்லாம் தெய்வத்தின் திருவடிவங்கள்! இந்த இறைவனது அன்பை நீங்கள் அனைவரிடமும் பகிர்ந்துகொள்ளுங்கள். ஆகையால் அன்பே கடவுள் அன்பிலேயே வாழுங்கள்.

துரதிர்ஷ்டவசமாக, அத்தகைய அன்பு நம்முள் நம் இதயத்தின் ஆழத்தில் படிந்திருந்தாலும் பயனற்றவர்களாக இருக்கிறோம். நம்மில் எத்தனை பேர் இந்த அன்பைச் சமுதாயத்திடம் பகிர்ந்துகொள்கிறோம்? இவ்வாறு அன்பைப் பகிர்ந்துகொள்ளும்போதுதான், நாம் மனிதர்கள் என அழைக்கப்படத் தகுதியாகிறோம். உண்மையில் இந்த அன்பையே உயிர்மூச்சாகக் கொள்ளவேண்டும். அன்பு என்பது ஒருவழிப்பாதையல்ல. அது இருவழிப்பாதை. கொடுப்பதும், எடுப்பதும் என இருக்கவேண்டும். இந்த நாட்டின் மக்கள் இந்தக் குணத்தை வளர்த்துக் கொள்ளவேண்டும். கோபம், காமம், பேராசை ஆகியனவற்றைக் கொல்லவேண்டும்.

*(ஆதாரம்: சனாதன சாரதி)*

# உள்ளூராட்சிச் சபைகளுக்கு இடையே முகாமைத்துவம் தொடர்பான போட்டிகள்

தென்மராட்சி,ஓக.19

வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சிச் சபைகளுக்கு இடையிலான முகாமைத்துவ சேவையை வழங்குவது தொடர்பான போட்டியினை மாகாண உள்ளூராட்சித் திணைக்களம் நடத்தவுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களின் நடவடிக்கைகளை மேலும் திட்டமிட்டுப் போட்டித் தன்மையுடன் திகழக்கூடியவாறும், அவற்றின் மொத்த செயலாற்றுகையை அதிகரிப்பதன் மூலம் வினைத்திறன்மிக்க, பயன்வாய்ந்த சேவையைப் பொது மக்களுக்கு நல்குவதற்கும் உள்ளூராட்சி மன்றங்களை வழிநடத்தும் நோக்கத்துடன் போட்டி நடத்தப்படவுள்ளது.

பிரதேச சபைகளுக்கிடையிலான போட்டியினை மாவட்ட மட்டத்தில் நடத்தித் தெரிவு செய்யப்படும் பிரதேச சபைகளுக்கிடையிலான போட்டி பின்னர் மாகாணமட்டத்தில் நடத்தப்படும்.

மாநகரசபைகள், நகரசபைகள் என்பனவற்றுக்குத் தனித்தனியாக மாகாணமட்டப் போட்டிகளை நடத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மாகாண மட்டப் போட்டியில் தெரிவுசெய்யப்படும் உள்ளூராட்சிச் சபைகள் தேசிய மட்டப் போட்டிக்கு அனுப்பிவைக்கப்படும்.

தேசிய மட்டப்போட்டியில் வெற்றிபெறும் உள்ளூராட்சிச் சபைகளுக்கு உள்ளூராட்சி அமைச்சினால் விருதுகள் வழங்கப்படும். சபை உத்தியோகத்தர், ஊழியர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்படும் என்று மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் செல்வி தெ.து.விஜயலட்சுமி அறிவித்துள்ளார்.

பிரதேச சபைகளுக்கான மாவட்டமட்டப் போட்டிகள் ஓகஸ்ட் 15 தொடக்கம் ஓகஸ்ட் 31ஆம் திகதிவரையும், மாகாண மட்டப்போட்டிகள் செப்ரெம்பர் முதலாம் திகதி தொடக்கம் 15ஆம் திகதி வரையிலும் -

நகரசபை, மாநகரசபைகளுக்கிடையிலான மாகாண மட்டப்போட்டிகள் ஓகஸ்ட் 15ஆம் திகதிதொடக்கம் செப்ரெம்பர் 15ஆம் திகதிவரையும் நடைபெறவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

உத்தேச போட்டியின் அடிப்படைத் தகவுத்திறனாக நிறுவனச் சூழல், உள்ளக நிர்வாகம், சட்டங்களும் துணைவிதிகளும், கணக்கு நடவடிக்கைகள், வரவு - செலவுத்திட்டம் வருமானம், மக்களின் பங்கேற்பு, மனிதவளமும் புதிய தொழில்நுட்பமும், வளங்களைப் பயனுள்ளவாறு பயன்படுத்திக்கொள்ளல், அபிவிருத்தி நடவடிக்கைகள் போன்றவற்றை உள்ளடக்கியதாக இருக்குமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-117)

# உதயனின் ஒலிம்பிக் கோலாகலம்

எதென்ஸ் 2004

பரிசுகள் உங்களுக்காகக் காத்திருக்கின்றன

## நீங்கள் செய்யவேண்டியது....

ஒலிம்பிக் போட்டி குறித்த கேள்வி அடங்கிய கூப்பன் உதயனில் பிரசுரமாகிறது. நீங்கள் அதனைப் பூர்த்திசெய்து 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் உள்ள உதயன் பணிமனையில் நேரிலோ அல்லது தபால் மூலமோ எதிர்வரும் 24ஆம் திகதி அன்று அல்லது அதற்கு முன்சேர்ப்பிக்க வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ஒலிம்பிக் கோலாகலம் எனக் குறிப்பிடவும் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் சரியான விடையை எழுதியிருந்தால் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

முதல் பரிசு யாழ். மின்னகம் வழங்கும் தொலைக்காட்சிப் பெட்டி

இரண்டாம் பரிசு பிறவுண் அன் கம்பனி வழங்கும் VCD ஸ்ரீறியோ செற்

மூன்றாம் பரிசு சொனி சீடிஸ்ஸ் வழங்கும் 2 in 1 ரேடியோ

நான்காம் பரிசு பவர் செலூலர் வழங்கும் கைத்தொலைபேசி

ஐந்தாம் பரிசு ஐ.ஐ.எஸ். வழங்கும் கலர் பிரிண்டர்

ஆறாம் பரிசு யமஹா பிளாஸா வழங்கும் மோ.சைக்கிள் உபகரணங்கள்

ஆறுதல் பரிசுகள் சிவகணேசன் ஸ்ரோர் வழங்கும் ஆயத்த ஆடைகள்

## உதயனின் ஒலிம்பிக் கோலாகலம்

### எதென்ஸ் ஒலிம்பிக் 2004

28 ஆவது ஒலிம்பிக் போட்டியின் முடிவில் பதக்கப் பட்டியலில் முதலிடத்தைப் பிடிக்கப்போகும் நாடு எது?........................

உதயன், 361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
முடிவு திகதி ஓகஸ்ட் 24

முழுப்பெயர்......................................................
முகவரி ..........................................................
.....................................................................
அ. அட்டை இல........................................

### விதிகள்

- ★ ஒருவர் எத்தனை கூப்பன்களும் அனுப்பலாம். ஆனால் போட்டோ பிரதிகள் ஏற்கப்படமாட்டா.
- ★ சிறுவர் சிறுமியர் பெற்றோரின் அடையாள அட்டை எண்களைப் பயன்படுத்தலாம்.
- ★ உதயன் மற்றும் அதன் சகோதர நிறுவனங்களின் ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் போட்டியில் பங்கேற்கமுடியாது.
- ★ நடுவர் குழுவின் முடிவே இறுதியானது.
- ★ போட்டி முடிவு குறித்து எந்தவித விளக்கம் கோரல்களோ தொடர்புகளோ ஏற்கப்படமாட்டாது.

## யாழ்ப்பாணம் - மாநகராட்சி மன்றம்

*நல்லூர் ஸ்ரீகந்தசுவாமி கோயில் மகோற்சவகால தற்காலிகக் கடைகளைக் குத்தகைக்கு வழங்குவதற்கான*

## கேள்வி அறிவித்தல் - 2004

நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் மகோற்சவ காலத்தில் தற்காலிகக் கச்சான் கடைகள், மணிக்காப்புக் கடைகள், ஐஸ்கிறீம் கடைகள்/வாகன நிலையங்கள், இனிப்புக் கடைகள, இதர கடைகள், துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையம், விளம்பர முகவர் நிலையங்கள் ஆகியவற்றை அமைப்பதற்கான நிலங்களைக் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் எதிர்வரும் 25-08-2004 ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 12.30 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

இதற்கான கேள்விப்படிவங்களை மீளளிக்க முடியாத படிவக்கட்டணம் ரூபா 300/= உம், மீளளிக்கக்கூடிய கேள்வப் பிணைப்பணமாக ஐஸ்கிறீம் கடைகளுக்கு ரூபா 10000/= உம், ஏனைய கடைகளுக்கு ரூபா 1000/= உம் சபையில் செலுத்துவதன் பேரில் எதிர்வரும் 24-08-2004 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப.3.00 மணிவரையும் மாநகராட்சி மன்ற நானாவித இறைவரிக்கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்திசெய்யப்பட்ட கேள்வியை அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையிலிட்டு இடதுபக்க மேல்மூலையில் வியாபாரத்தின் தன்மை குறிப்பிடப்பட்டு எதிர்வரும் 24.08.2004 ஆம் திகதி பி.ப.12.30 மணிக்கு முன் அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். அல்லது *ஆணையாளர், மாநகராட்சிமன்றம், யாழ்ப்பாணம்* என முகவரியிட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

கிடைக்கப்பெற்ற கேள்விகள் யாவும் எதிர்வரும் 25-08-2004 ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 2.30 மணிக்கு கேள்விச் சபையால் திறந்து பரிசீலிக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரர் அல்லது அவரது பிரதிநிதி எவரேனும் பிரசன்னமாக இருக்கலாம். மேலதிக விவரங்களை மாநகராட்சிமன்ற நானாவித இறைவரிக் கிளையில் அலுவலக நேரத்தில் அறிந்துகொள்வதுடன் கடைகளுக்கான வரைபடத்தையும் நேரில் பார்வையிடலாம்.

*குறிப்பு:* மேற்படி சபையால் வழங்கப்படும் தற்காலிகக் கடைகளைத் தவிர எதிர்வரும் 25-08-2004 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பித்து, சபையின் அனுமதி பெற்றிராத எந்தத் தற்காலிக வியாபாரமும் திருவிழாக்காலத்தில் நடத்த அனுமதிக்கப்படமாட்டாது என்பதையும் அறியத்தருகின்றோம்.

கலாநிதி க.குணராசா,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்றம்.
யாழ்ப்பாணம்.
(சி-36792) (26-14-19)

## கனடா, லண்டன், நியூசிலாந்து, ஆஸ்திரேலியா அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு

## குடிபெயர, கல்விகற்க, சுற்றுப்பயணம் மேற்கொள்ள விரும்புகின்றீர்களா?

### உயர்தர கல்லூரிகளில் பின்வரும் கற்கை நெறிகள்:

சான்றிதழ் | டிப்ளோமா | பட்டப்படிப்பு

*மருத்துவம் கற்கை நெறி*
*விற்பனையும் சந்தைப்படுத்தலும்*
*பொறியியல் தொழிநுட்பவியலாளன்*
*வியாபார நிருவாகம்*
*ஹோட்டல் சிற்றுண்டிச்சாலை நிருவாகம்*
*பி.எஸ்.ஸி (உயிரியல்/இரசாயனவியல்)*
*மற்றும் சகல கற்கை நெறிகளும்.*

*நர்சிங்*
*கணக்கியல் தொழிநுட்பவியலாளன்*
*சமயலும் சுற்றுப்பயணவியலும்*
*கணனி புரொக்ராமர் / அனலைசர்*
*பி.ஏ. முகவல்*
*ஆசிரியர் கற்கைநெறி*

### தொழிநுட்பவியலும் கணனி புரோக்ராமும்

தொழிநுட்பவியல் முகாமைத்துவம்
நுண்ணியல் கணனி வியாபார வலைப்பின்னல்
தகவல் முறை தொழில்நுட்பம்
இன்ற்றரெக்டிவ் கேம்ஸ் டிசைன்
கணனி அனலைல்
வாடிக்கையாளர்
கணனி அனிமேசன் ஸ்பெஸலிஸ்ற்
வெப் வெளியீடும் சந்தைப் படுத்தலும்

- Migration Visa
- Student Visa
- Business Visa
- Investment Visa
- Dependent Visa
- Touriist Visa

*கனடா, லண்டன், ஆஸ்திரேலியா நாடுகளுக்கான சட்டரீதியான பயணம் தற்போது சட்டங்கள் தளர்த்தப்பட்டுள்ளன. புதிய சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.*

கற்கை நெறிகள்:
பல்கலைக் கழக முன் கற்கைநெறி
டிப்ளோமா / பட்டப்படிப்பு கற்கைநெறி
பட்டப்பின் படிப்பு கற்கைநெறி
சான்றிதழ் கற்கைநெறி
இணைந்த பட்டப்படிப்பு கற்கைநெறி

**கடந்த 7 வருடங்களாக வாழ்க்கைத்தரத்தில் 1ஆம் நிலையில் கனடா இருக்கின்றது என்பது ஐ.நாவின் கருத்து**

- ◆ *உயர் அநுபவம்*
- ◆ *அனைத்தும் ஒரே கூரையின் கீழ்*
- ◆ *துரித முன்னெடுப்பு*
- ◆ *நவீன் தொழிநுட்பவசதி கொண்ட அனைத்துக்கும் இலகுவான இடம்*
- ◆ *உலகளாவிய தொடர்புகள்*
- ◆ *திறமையான கௌரவமிக்க நேர்மையான சேவை*
- ◆ *எவ்வேளையும் தொடர்பு கொள்ளலாம்*
- ◆ *ஒப்பற்றசேவை*

**ஐக்கிய ராஜ்ஜியம்** *தகவல் தொழில்நுட்பமாவது, கல்வி தொழில் அனுமதி என்பவற்றை அத்துறையில் பயில்வோருக்கும் ஆசிரியர்கள், தாதிகள் மற்றும் ஏனையோருக்கும் வழங்குகின்றது.*

இது தொடர்பான இலவச கருத்தரங்கு எதிர்வரும் 20-08-2004 பி.ப. 3.30 மணிக்கு Jaffna M.P.C.S. Auditorium (கேட்போர்கூடம்) 127, K.K.S. வீதி, யாழ்ப்பாணம் என்ற இடத்தில் நடைபெறும். அத்துடன் யாழ். மண்ணிலிருந்து Hungaria க்கு (Europeon Country) தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கான விசா வழங்கலும் இடம்பெறுகின்றது.

Seminar By : T.T. PRAKALATHAN - Migration and Educational Consultant
*Member of Srilanka and Hunganian Business Council of the Ceylon Charter of Commerce*

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி

# Sai International Institute and Migration (Pvt) Ltd.

*கொழும்பில் தலைமை காரியாலயம்:*
57A/4-2/1, Galle Road, Colombo 04.
Tel: 011-5351026 Fax : 011-5351027 Hot Line: 0777-798149
(9.30Am-4.00Pm Week Days) (10.00Am-1.00Pm Saturdays)

*யாழ்ப்பாணத்தில்* : MRS. A.THURAISINGAM
தொ. பே: *0777-322551*
MR. MANOKAR
தொ. பே: *0777-252167*

Strictly on Appointment

# சர்ச்சைகளுக்கு மத்தியில் 'குளோனிங்' சிகிச்சை அனுமதி!!

மனிதனின் முளையங்களைப் பயன்படுத்தி 'குளோனிங்' மருத்துவ சிகிச்சைகளை மேற்கொள்வதற்குப் பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் முதல தடவையாக அனுமதி அளித்திருக்கின்றார்கள். மனித கருக்கட்டல் மற்றும் முளையவியல் சபை (Human Fertilization and Embryology Authority) இதற்கான அனுமதியை ஆய்வாளர்களுக்கு வழங்கியுள்ளது.

அவ்விஞ்ஞானிகள் நீரிழிவு, பார்க்கின்ஸன் மற்றும் அல்ஸீமர் போன்ற நோய்களைக் குணப்படுத்துவதற்குப் புதிய சிகிச்சை முறைகளைக் கண்டறியும் ஆய்வில் ஈடுபட்டிருக்கிறார்கள். பெரும விமர்சனங்களுக்குட்பட்டுள்ள இந்த அனுமதியினால் நோய்களைக் குணப்படுத்துவது தொடர்பில் விஞ்ஞானிகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆய்வுகளில் புதிய யுகம் ஒன்று பிறந்துள்ளதாகவே கருதப்படுகிறது. இது ஆய்வின் மிக முக்கியமான பகுதியும், தொழில் நுட்ப ரீதியில் பொறுப்பு வாய்ந்ததும் ஆகும் என்று மனிதக் கருக்கட்டல் மற்றும் முளையவியல் சபையைச் சேர்ந்த தலைமை ஆய்வாளர் சுசி லீதெர் (Suzi Leather) கூறினார்.


இதுதொடர்பான ஆய்வுகள் 'நியூ காஸில்' சர்வதேச மையத்தில் இடம்பெறவுள்ளன. 'நியூ காஸில்' பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மனித பிறப்புரிமையியல் நிறுவனத்தின் நிபுணர்களும் 'நியூகாஸில்' கருக்கட்டல் மைய விஞ்ஞானிகளும் இந்த ஆய்வுகளில் ஈடுபடவுள்ளனர்.

ஐரோப்பிய நாடுகளில் இதுபோன்ற அனுமதிகள் வழங்கப்பட்டது இதுவே முதல் தடவை என்று கூறப்படுகிறது. 'குளோனிங்' முறையிலான தண்டுக் கலங்களின் (stem-cell) இச்சிகிச்சை ஆகக்கூடியது ஐந்து வருடங்களுக்குள் நோயாளிகள் பெற்றுக் கொள்வார்கள் என விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

மனிதக் கருக்கட்டல் மற்றும் முளையவியல் சபையின் இந்த அறிவிப்பானது மிகப் பெரும் சட்டச்சவால்களை எதிர்கொள்ளவேண்டியிருக்கும் என்று 'புரோலைவ் பாட்டி' (Pro-life Party) தெரிவித்துள்ளது.

'குளோனிங்' மருத்துவ சிகிச்சை பிரிட்டனில் 2001ஆம் ஆண்டில் இருந்து சட்டரீதியானதாக்கப்பட்டுள்ளது. இது மருத்துவ ரீதியான காரணங்களுக்காக மட்டும் அனுமதிக்கப்பட்டது. 'குளோனிங்' இனப்பெருக்கம் தொழில் நுட்பரீதியிலேயே சாதாரணமானதில் இருந்து வேறுபட்டது.

ஆயினும், மனிதாபிமான அடிப்படையில் இந்த அனுமதி வழங்கப்பட்டது.



மனித உடற் கலங்கள்

'கலக்கருப் பிரதியீடு' (Cell Nuclear Replacement) எனக் கூறப்படுகின்ற இக்குளோனிங் தொழில்நுட்பத்தில் மனிதனின் முட்டைக் கலத்திலிருந்து கருவை நீக்குதலும் அதனை மனித தோற்கலம் போன்ற உடற்கலத்திலிருந்து பெற்ற கருவினால் பிரதியீடு செய்வதும் மேற்கொள்ளப்படுகின்றது. அந்த முட்டையானது பின்னர் செயற்கையான முறையில் தூண்டலுக்குட்படுத்தப்படும். இதனால் முட்டை பிளவுபடும். இது சாதாரணமாக முட்டை பிரிவதனைப் போலவே இருக்கும்.

'நியூகாஸில்' கருக்கட்டல் மைய விஞ்ஞானிகள் குழுவுக்குத் தலைமை வகிக்கும் பேராசிரியர் அலிஸன் மேடோ (Alison Murdoch) கூறுகையில், இந்த ஆராய்ச்சிகள் மிகப பெரிய ஊக்கத்தைக் கொடுத்திருக்கிறது என்றார். "எமது கோரிக்கைகளைச் சமர்ப்பித்ததிலிருந்து சிரேஷ்ட நிபுணர்களினதும் உலகெங்கும் உள்ள மருத்துவவியலாளர்களதும் மற்றும் நோயாளர்களிடமிருந்தும் ஆதரவைப் பெறுவதில் நாங்கள் மிகப் பெரிய வெற்றியை அடைந்திருக்கிறோம்" என்றும் அவர் தெரிவித்தார்.

"இந்த ஆராய்ச்சிகள் அநேகமான நோய்கள் தொடர்பில் பெறுமதிவாய்ந்த தகவல்களை வழங்கும். உண்மையில் இது குறித்த சிகிச்சைகளை மேற்கொள்வதற்கு முன்னதாக மேலதிக ஆய்வுகூடச் செயற்பாடுகளுக்காக ஆகக் குறைந்தது ஐந்து வருடங்களாவது எமக்குத் தேவை. ஆனால், எமக்கு மேலதிக உதவிகள் கிடைக்கும் பட்சத்தில் இக்காலம் குறைவாகிப் போகலாம்" என்று பேராசிரியர் அலிஸன் மேடோ கூறுகிறார்.

மனித கருக்கட்டல் மற்றும் முளையவியல் சபைத் தலைவர் சுசி லீதர் கூறுகையில், "முதற்கட்ட ஆய்வுகளின் பின்னாக விஞ்ஞான, ஒழுக்கவியல், சட்ட மற்றும் மருத்துவ ரீதியாக இந்த ஆய்வுகளில் நாம் மிகக் கவனஞ் செலுத்த வேண்டியுள்ளது"

"அத்துடன், இது தொடர்பான எந்தவோர் ஆய்வும் ஆழமானதாகவும் மிகச் சரியானதாகவும் மேற்கொள்ளப்படுவதனை உறுதி செய்ய வேண்டியதும் மனித கருக்கட்டல் மற்றும் முளையவியல் சபையின் கடமையாகும்" என்றார்.

பிரிட்டிஷ் மருத்துவ சங்கத்தின் பேச்சாளர் கூறுகையில், "நாங்கள் கடுமையாக ஒழுங்குகளை ஆதரிக்கின்றோம். அதனால் உயிர்களைக் காப்பாற்றுகின்ற 'குளோனிங்' சிகிச்சைக்கு (Therapeutic Cloning) ஆதரவு கொடுக்கின்றோம். அதற்கு மக்களுடைய ஆதரவும் அமோகமாக உண்டு. ஆனால், அதேவேளையில் மனித 'குளோனிங் இனப்பெருக்கத்துக்கு' (Reproductive Cloning) மக்கள் பலமாக எதிர்க்கிறார்கள். அந்த அடிப்படையில் நாங்களும் எதிர்க்கின்றோம்" - என்றார்.

மனித கருக்கட்டல் மற்றும் முளையவியல் சபையின் தீர்மானத்தை 'விசனத்துக்குரியது - வருந்தத்தக்கது' என்று 'புரோ லைவ் பாட்டி'யின் பேராசிரியர் ஜக் ஸ்கரிஸ்பிரிக் விவரித்திருக்கிறார்.

"நாங்கள் அனைவரும் பயங்கரமான நோய்த் தாக்கங்களை வெற்றிகொள்ளவே நினைக்கின்றோம். ஆனால், அதற்காகக் 'குளோனிங்' போன்ற முறைகள் தேவையில்லை. வயதான ஒருவரிடமிருந்து தண்டுக்கலங்களைப் பெறுவதனால் நன்மை விளையும். எனினும், அதனை மேற்கொள்வது சரியில்லை" - என்கிறார் அவர்.

"புரோ லைவ் பாட்டி'யின் ஜோசப்பின் குயின்ராவல் என்பவர் இனப்பெருக்க ஒழுக்கவியல் குறித்து பி.பி.ஸிக்குப் பேட்டியளித்தபோது, "மனித கருக்கட்டல் மற்றும் முளையவியல் சபையின் முடிவு உண்மையில் மிகவும் கவலையளிப்பதாக உள்ளது. எந்தளவு அற்புதமான நன்மைகள் ஏற்படினும் மனித வாழ்க்கையானது எவர் ஒருவரின் நன்மைக்காகவும் பலியிடப்படக்கூடாது" - என்றார்.

மனித 'குளோனிங்' இனை மேற்கொள்வது 'குளோ னிங்' சிகிச்சைக்காக மட்டும் 2001ஆம் ஆண்டு ஜனவரியில் மேற்கொள்ளப்பட்ட 'மனித முளையவியல்' சட்டத் திருத்தத்தின் மூலம் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆனால், 'குளோனிங்' இனப்பெருக்கத்துக்காக மனித 'குளோனிங்' மேற்கொள்வது தற்போது வரை தடைசெய்யப்பட்டுள்ளது. மீறுவோருக்கு 10 வருட சிறைத் தண்டனையுடன் வரையறையற்ற குற்றமும் அறவிடப்படும். ✳

**சுடரும் விஞ்ஞானம்**
**ராஜபுத்திரன்**

# 'பயோ டீசல்'



சர்க்கரைவள்ளிக்கிழங்கில் இருந்து உயிரி எரிபொருளைத் தயாரிப்பதில் மரபுசாரா ஆற்றல் துறை விஞ்ஞானிகள் கவனஞ்செலுத்தி வருகின்றனர்.

உலகில் பெற்றோலியப் பொருள்களின் இருப்புக் குறைந்துகொண்டே செல்கிறது. அவற்றின் விலையோ அதிகரித்துக் கொண்டே செல்கிறது. இந்நிலைமைகள், புதிய மரபுசாரா எரிசக்திகளை உருவாக்க வேண்டிய அவசியத்தை ஏற்படுத்திவிட்டுள்ளன. இதனால், விஞ்ஞானிகள், தாவரங்களில் இருந்து உயிரி எரிபொருளைப் பெற்றுக்கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

சர்க்கரைவள்ளிக்கிழங்கில் இருந்து நூறு கிராமில் 125 கலோரி உண்டாக்கப்படுகிறது. இதிலிருந்து தயாரிக்கப்படும் 'பயோ டீசலை' தனி எரிபொருளாகவும் பயன்படுத்தமுடியும். சாதாரண டீசலுடன் கலந்தும் பயன்படுத்தலாமாம்.

ஆசியாக் கண்டத்தில் உள்ள நாடுகளில் சர்க்கரை வள்ளிக்கிழங்கு, மிகவும் அதிகளவில் உற்பத்தியாகின்றது. உலகின் மொத்த சர்க்கரைவள்ளிக் கிழங்கு உற்பத்தியில 92 சதவீதம் ஆசிய நாடுகளின் பங்களிப்பாகும். சர்க்கரைவள்ளிக் கிழங்கு, அமெரிக்காவைத் தாயகமாகக் கொண்டது. பினனர் ஐரோப்பிய, பசுபிக் மற்றும் ஆசிய நாடுகளுக்குப் பரவியது. ஆரம்பத்தில் காட்டுச் செடியாக வளர்க்கப்பட்டு பின்னரே அறுவடை முறைக்குக் கொண்டுவரப்பட்டது.

சர்ககரை வள்ளிக்கிழங்கில் நர்ச்சத்து 68.5 சதவீதமும் மாப்பொருள் சத்து 22 சதவீதமும் உள்ளன. சர்ககரைவள்ளிக் கிழங்கு மதுபானத் தயாரிப்பிலும் பயன்படுகின்றது. இது கால்நடை உணவாகவும் பயன்படுத்தப்படுகின்றது. சர்க்கரைவள்ளிக் கிழங்கில் இருந்து தயாரிக்கப்படும் மாப்பொருள், பேக்கரித் தொழிலில் மூலப்பொருளாகப் பயன்படுகின்றது. இதுவரை இவ்வாறு பயன்படுத்தப்பட்டுவந்த சர்க்கரைவள்ளிக் கிழங்கு, தற்போது 'பயோ டீசல்' என்ற புதிய பரிமாணத்தை எட்டியுள்ளது.

# இயற்கைப் பருத்தி



இயற்கைச் சூழலில் வளர்ந்த முற்றிலும் இயற்கையான பருத்தி இந்தியாவில் விளைவிக்கப்பட்டுள்ளது. இதில் தயாரிக்கப்பட்ட மெத்தைகள் ஆஸ்மா மற்றும் ஒவ்வாமை போன்ற நோயாளிகளுக்கு உகந்தது எனத் தெரியவந்துள்ளது.

ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து மற்றும் இங்கிலாந்திலுள்ள 'ஸ்கால்' ஆய்வுகூடம் போன்றவை இந்த இயற்கைப் பருத்தித் துணிக்கு அங்கீகாரம் அளித்துப் பரிந்துரை செய்துள்ளன.

தற்போதுள்ள ஆடைகளில் அதிகளவில் காணப்படுகின்ற ரெசின் மற்றும் குளோரைட்டு போன்றவை இந்த இயற்கைப் பருத்தி ஆடையில் முற்றிலும் இல்லை.

குஜராத்தில் உள்ள மாண்ட்வி பகுதியில் முதலில் இயற்கைப் பருத்தி விளைவிக்கப்பட்டது. பருத்தி விளைவிப்பதற்கு 3ஆண்டுகளுக்கு முன்னரே நிலத்தில் இரசாயன உரங்கள், பூச்சிகொல்லிகள் பயன்படுத்துவது முற்றிலும் தடைசெய்யப்பட்டுள்ளது. நிலத்தில் இரசாயன உரங்கள், பூச்சிகொல்லிகள் தன்மையில்லாத சூழ்நிலையிலேயே பருத்தி விதைக்கப்பட்டது. மரபணு மாற்றம் செய்யப்படாத விதையே விவசாயத்திற்குப் பயன்படுத்தப்பட்டது.

பருத்தி விளையும் பருவத்திலேயும் எந்தவிதமான உரங்களோ, பூச்சி கொல்லிகளோ, களைகொல்லிகளோ பயன்படுத்தப்படவில்லை. மாட்டின் சாணமும், மண்புழு உரமுமே பயன்படுத்தப்பட்டுப் பருத்தி விளைவிக்கப்பட்டது. முற்றிலும் முழுமையான அளவில் இரசாயனப் பொருள்கள் கலக்காத பருத்தி முதன்முதலில் இந்தியாவில்தான் பயிரிடப்பட்டுள்ளது.

பருத்தி அறுவடை, நூல் விற்றல், நெசவு சாயமேற்றுதல் என எந்த நிலையிலும் இரசாயனப்பொருள்கள் கலப்பு இல்லாமல் இயற்கையான பருத்தி ஆடை தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த இயற்கைப் பருத்தி ஆடைகளினால் குழந்தைகளுககு ஆடைகள் தயாரித்து, ஆஸ்துமா, அலர்ஜியைக் கட்டுப்படுத்த முடியும் என்று அறியப்பட்டுள்ளது.

# அழியும் கழுகு இனம்



உலகில் சகல உயிரினங்களும் நேரடியாகவோ மறைமுகமாகவோ ஒன்றுக்கொன்று தொடர்புடையதாகவே உள்ளன. ஒரு குறிப்பிட்ட உயிரினத்தின் எண்ணிக்கை கூடினாலும் குறைந்தாலும் தொடர் விளைவுகள் ஏற்படுகின்றன.

தற்போது உலகில் பிணம் தின்னும் கழுகுகள் எண்ணிக்கை குறைந்துகொண்டே வருகின்றது என மதிப்பீடுகளில் தெரியவந்துள்ளது. பிணம் தின்னும் கழுகுகளினால் மனித இனத்துக்கு நேரடிப் பயன் இல்லாவிடினும், சுற்றுச்சூழல் தொடர்பில், உணவுச் சங்கிலியில் இவை முக்கிய இடத்தை வகிக்கின்றன. ஆசிய நாடுகளில், குறிப்பாக இந்தியா, பர்மா, பாகிஸ்தான் முதலிய நாடுகளில் இவை அதிகளவில் காணப்பட்டன.

'டைக்ளோபெனக்' எனும் பதார்த்தமே பிணம் தின்னும் கழுகுகளின் அழிவுக்குக்காரணமாக உள்ளதாக அறியப்பட்டுள்ளது. 'டைக்ளோபெனக்' கால்நடைகளின் மருந்துகளில் சேர்க்கப்படுகின்றது. இந்த மருந்து செலுத்தப்படும் கால்நடைகளின் உடலில் 'டைக்ளோபெனக்' படிமங்கள் நிரந்தரமாகத் தங்கிவிடுகின்றன. கால்நடைகளின் இறப்பிற்குப் பின்னரும் இந்தப் பதார்த்தத்தின் தன்மை எந்தவடிவத்திலும் குறைந்துவிடாமல் அவற்றின் உடலில் இருக்கின்றது. இக்கால்நடைகளின் இறந்த உடல்களைத் தின்னும் பிணம் தின்னும் கழுகுகளின் உடலில் 'டைக்ளோபெனக்' செல்கின்றது. இதனால், இந்தக் கழுகுகளின் சிறுநீரகங்கள் பாதிப்படைகின்றன.

'டைக்ளோபெனக்' போன்று ஓவரான் மருந்துகளும் கழுகுகளின் சிறுநீரகப் பாதிப்புக்கு முக்கிய காரணமாக உள்ளன. இந்தச் சிறுநீரகப் பாதிப்பு கழுகுகளின் உயிரையே பறித்துவிடுகின்றது.

இவ்வாறு உணவுச் சங்கிலியில் கழுகுகளின் எண்ணிக்கை திடீரெனக் குறைவதால் பாதிப்புகள் ஏற்படுகின்றன. சுற்றுச்சூழல் மாசு ஏற்படுகின்றது.

பிணந்தின்னும் கழுகுகளின் எண்ணிக்கையால் ஏற்பட்டுள்ள இந்த வீழ்ச்சி குறித்து சூழலியல் மற்றும் உயிரியல் ஆய்வாளர்கள் கவனஞ்செலுத்தி வருகின்றனர்.

## வீனஸ் பாம்

பதவி வெற்றிடம்
1. பண்ணை முகாமையாளர்.
2. பண்ணைப் பராமரிப்பாளர்கள்

அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

காலை 9.00மணி முதல் 12.மணி வரை அலுவலக நேரத்தில் நேரில் சமுகம் தரவும்.

**வீனஸ் பாம்**
இல.79/5A, ஆனைவிழுந்தான் லேன்,
பலாலி வீதி,
திருநெல்வேலி (சந்தி அருகில்).

(35-14-19-24) (35406)

## கண்ணீர் அஞ்சலி



தமிழ் இனம் என்றுமே மறக்க முடியாத தீவக மண்ணின் மைந்தனும்,
தீவகம் தெற்கு (வேலணை) முன்னாள் பிரதேச செயலரும்,
சிறந்த அமைப்பாளரும், முன்னாள் வே.ப.நோ.கூ. சங்க இயக்குநர்மன்ற
உறுப்பினரும், சிறந்த கூட்டுறவாளரும், சிறந்த சமூக சேவையாளரும்,
நெறியுரையாளரும் பண்பாளரும், விளையாட்டு வீரரும் பன்மொழி வித்தகரும்,
நாட்டுப்பற்றாளருமான

**அமரர் செல்லையா இரத்தினம்**

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தலைவர், பணிப்பாளர்கள்,
அங்கத்தவர்கள்,
பணியாளர்கள்.

வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்.
வங்களாவடி. வேலணை. (35414)(26-21-19-14)

## ரஷ்யாவில் மருத்துவக் கல்வி

உலக சுகாதார ஸ்தாபனத்தினதும், சர்வதேச அங்கீகாரத்தையும் பெற்ற ரஷ்யப் பல்கலைக்கழகத்தில் ஆங்கில ஊடகத்தில் மருத்துவக் கல்வி பெற அனுமதி பெற்றுத்தரப்படும்.

உடன் தொடர்பு கொள்ளவும்.

**Dr.க.சிவனடியான்**
ஆனைக்கோட்டை- மானிப்பாய்.

**T.P.: 0777667474** (35438) (21-14-19-24)

## Computer Express
### Hardware Sales & Service Center

NO. 328 Stanly Road, Jaffna.
0777-222422 021-2227866

அதிரடி விலைக் கழிவுகை

**Computer Express** இன் **Hardware Sales and Service Center** வெகுவிமர்சையாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

கொழும்பு விலையில் **Pentium I / Pentium II Pentium III / Pentium IV** கணனிகளை பெற்றுக் கொள்ளலாம்.

மிக மிகக் குறைந்த விலையில் நீங்களும் ஓர் கணனிக்கு சொந்தக்காரராக.....

100% உத்தரவாதம்
நம்பிக்கையான விற்பனைக்குப் பிந்திய சேவை

விலை 10,000 ரூபாவில் இருந்து

## CATWAS. COM
### Computer Academy

**22.08.2004 2ஆம் பிரிவு ஆரம்பம்**

மாணவர்களே பல்கலைக்கழக அனுமதி உறுதியாக உள்ளதா? பல்கலைக்கழகக் கல்வியில் உங்கள் பாடநெறி சம்பந்தமான தகவல்களை இணையத்தளத்தில் இருந்து சுயமாகப் பெற்றுக்கொள்ளுவதற்கும், கல்விசார் வேலைகளைக் கணனி மயப்படுத்தவும், உங்கள் கணனி அறிவை வலுப்படுத்தவும் இன்றைய கணனி உலகில் வீறுநடைபோட்டுச் செல்வதற்குத் தகவல் தொழில்நுட்பத்துறையில் இன்றே எம்முடன் இணைந்து ஆரம்பியுங்கள்.

**Diploma Courses**
- Microsoft Office 1750/=
- DTP 2000/=
- Hardware 1500/=
- Web page 3000/=
- Video Mixing 2500/=

**Certificate Courses**
- Word 2003 Excel 2003
- Power Point 2003
- Access 2003 Cool 3D
- Corel Draw Photo shop
- Page Maker Premiere
- Visual Basic Studio

விண்ணப்பங்கள் யாவும 22.08.2004 இற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது தபால் மூலமோ அனுப்பிவைக்கவும்.

No.26, Somasundram Avenue,
Chundikuli, Jaffna.
T.P.: 021-222-3805

பெற்றோர்கள் கவனத்துக்கு! எமது நிறுவனமானது கடந்த இரண்டு வருடங்களாகப் பாடசாலை விடுமுறைக்காலங்களை மாணவர்கள் தகுந்த முறையில் பயன்படுத்தும் வகையில் அவர்களுக்கான விசேட கணனி வகுப்புகளைக் குறைந்த கட்டணத்தில் நடத்திவருகிறது. அந்த வகையில் இம் முறையும் அவர்களுக்காக M.S.Office Certificate Course 40% கழிவுடன் 22.08.2004 அன்று ஆரம்பிக்கப்பட உள்ளது. மாணவர்கள் மட்டுப்படுத்தப்படுவதால் குறிப்பிட்ட திகதிக்கு முன்பு உங்கள் பிள்ளைகளின் பதிவுகளை மேற்கொண்டு விடுமுறையை பயனுள்ளதாக்குங்கள்.

(C/36805)(42-21-19-14)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



திருமதி
**இரத்தினம் கிருஷ்ணபிள்ளை**

மலர்வு:
02-04-1935

உதிர்வு:
20-07-2004

*காலமெல்லாம் ஒன்றாக வாழ்வோமெனக்*
*கண்டிருந்த கனவுகளைக் கலைத்துவிட்டு*
*– எம்மை*
*ஆறாத வேதனையில் ஆழ்த்திவிட்டு*
*அமைதியாய் உறங்கிப்போன*
*அருமைத் தாயே!*
*அன்பு மட்டும் ஆறாகி எம்மை வாட்ட*
*அருந்துணையே அவனிவிட்டுச்*
*சென்றதேனோ?*

கடந்த 20.07.2004 அன்று இறைவனடி சேர்ந்த குடும்பத் தலைவி திருமதி இரத்தினம் கிருஷ்ணபிள்ளை அவர்களின் இறுதிக்கிரியையில் கலந்துகொண்டு மலர்வளையம், மலரஞ்சலி செலுத்தியோருக்கும், அஞ்சலி உரைகள் ஆற்றியோருக்கும், தொலைபேசி மூலம் தந்தி மூலம் ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மேலும் இன்று (19.08.2004) வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியையில் கலந்து அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தித்து அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**- குடும்பத்தினர்.**

"ஹரண்மகால்",
மாமுனை,
செம்பியன்பற்று.
தொலைபேசி: 0776567413.

(35374) (26-21-19-14)

## கேள்வி அறிவித்தல்

### வாகன தரிப்பிடம் அமைத்தல்

**பிரதேச செயலகம், உடுவில்**

உடுவில் பிரதேச செயலகத்தில் வாகனத் தரிப்பிடமொன்றை அமைப்பதற்கான கேள்விப் பத்திரங்கள் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் அல்லது பதிவுசெய்யப்பட்ட பொதுத்தாபனங்களிடமிருந்து கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரங்களையும் மற்றும் விவரங்களையும் இச்செயலகத்தில் வேலை நாள்களில் நேரில் வந்து 2004–08–25 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளலாம்.

சி.திருவாகரன்,
பிரதேச செயலாளர்,
வலி. தெற்கு, உடுவில்,
சுன்னாகம்.

(C/36799)(42-14-19-24)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி முத்துலிங்கம் நகுலாம்பிகை

புகையிரத வீதி, தெல்லிப்பழையைச் சேர்ந்த திருமதி முத்துலிங்கம் நகுலாம்பிகை நேற்று (18.08.2004) புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துலிங்கத்தின் அன்பு மனைவியும் தெல்லிப்பழை பிரபல வர்த்தகர்களான காலஞ்சென்ற இரங்கநாதன் செகராஜசிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் முத்தாம்பிகை, நகுலேஸ்வரி, நடராஜா ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற நடராஜா மற்றும் இலட்சுமிநாதன் (பிரபல வர்த்தகர், தெல்லிப்பழை) ருக்குமணி ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (18.08.2004) புதன்கிழமை கனத்தை மயானத்தில் தகனம்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*செட்டித்தெரு,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
ச.பரமநாதன் (கண்ணா),
(யாழ்ப்பாணம்)

(35431)(42-14-19-24)

### கந்தசாமி ஐயர் பாலநடராஜா ஐயர்

(சின்னபால்லா)

ஊரெழு மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தசாமி ஐயர் பாலநடராஜா ஐயர் 16.08.2004 திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (19.08.2004) வியாழக்கிழமை கொழும்பில் உள்ள அவரது வதிவிடத்தில் நடைபெற்று, முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது புகழுடல் தகனக் கிரியைக்காகக் கனத்தை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஊரெழு மேற்கு,*
*சுன்னாகம்.*

தகவல்:
க.சுந்தரராஜன் ஐயர்,
செல்வி பிரபா கந்தசாமி ஐயர்.

(35425)(42-14-15-24)

உதயனின்

# ஒலிம்பிக் கோலாகலம்

## ஒலிம்பிக் போட்டி வரலாற்றில் வெள்ளி வென்ற முதல் இந்தியர்


ரதோர்

ஒலிம்பிக் வரலாற்றில் வெள்ளிப்பதக்கம் வென்ற முதல் இந்தியர் என்ற பெருமையை இந்திய இராணுவ அதிகாரியான ராஜ்யவர்தன் சிங் ரதோர் (வயது-34) பெற்றார். நேற்றுமுன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிசுடும் பிரிவில் அவர் வெள்ளிப் பதக்கம் வென்றார். இதன்மூலம் இந்தியாவும் பதக்கப்பட்டியலில் இடமபிடித்தது. இந்தியா சுதந்திரம் பெறமுன்னர் - 1900 ஆம் ஆண்டில்-இடம்பெற்ற பரிஸ் ஒலிம்பிக்கில் இந்தியா சார்பில் கலந்துகொண்ட பிரிட்டிஷ் இராணுவ வீரர் நோர்மன் பிரிட்சர்ட் தடகளப் போட்டிகளில் இரு வெள்ளிப்பதக்கங்களைப் பெற்றிருந்தார். ஆனாலும் அவர் வெள்ளையர் என்பதால் இந்தியரான ரதோர் வெள்ளிப்பதக்கம் பெற்றமையே இந்தியர்களுக்குப் பெருமையளிக்கிறது.

இதேவேளை, இப்போட்டியில் ஐக்கிய அரபுக் குடியரசின் அகமது அல்மக்தோம் தங்கமும், சீனாவின் ஜெவக்வாங் வெண்கலமும் வென்றனர். ஒலிம்பிக் வரலாற்றில் 1952இல் ஹெல்கின்சி ஒலிம்பிக் மல்யுத்தத்தில் கஷாபாதிக் விஜய் யாயாதவும, 1996இல் அட்லாண்டா ஒலிம்பிக் டெனிஸில் லியாண்டர்பயர்சும், 2000இல் சிட்னி ஒலிம்பிக் பளுதூக்குதலில் கர்ணம் மல்லீஸ்வரியம் இந்தியா சார்பாக தனிநபர்களுக்கான வெணகலப்பதக்கங்களை வென்றிருந்தனர்.


தென்கொரிய வில்வித்தை வீராங்கனை யுன் மி.ஜின் தான் முன்னர் ஏற்படுத்திய 180 புள்ளிகளுக்கு 178 என்ற உலக சாதனையை இம்முறை சமப்படுத்தினார்.

## தந்தைக்குப் பின் மகனுக்குத் தங்கம்


நயோயா

ஜப்பான் ஜிம்னாஸ்டிக்வீர், நயோயா சுக்காரா தங்கம் பெற்றுள்ளார். 1968, 1972 மற்றும் 1976 ஆகிய ஆண்டுகளில் இவரது தந்தை மிட்சுவோ ஜப்பான் அணி சார்பில் தங்கப் பதக்கங்களை அள்ளினார். தந்தையைப் போலவே நயோயாவும் அணி சாாபில் பதக்கத்தைப் பெறறுள்ளார். 2ஆம் உலகப் போருக்குப் பின்னர், ஒலிம்பிக்கில் தந்தையும் மகனும் பதக்கங்கள் பெற்றது இல்லை. இந்தப் பிரிவில் ஜப்பான் 1984இற்குப் பிறகு தங்கம் பெறவில்லை அக்குறையை நயோயா தீர்த்துள்ளார். நயோயாவுக்கு 27வயதாகிறது கடந்த 11ஆண்டுகளாக இவரது தந்தைதான் அவருக்குப் பயிற்சி அளித்து வந்திருக்கிறார்.

### டெனிஸ்போட்டி: காலிறுதியில் இந்தியா

எதென்ஸ் ஒலிம்பிக் டெனிஸ் போட்டியில் இரட்டையர் பிரிவில் இந்தியா வின் லியாண்டர் பயஸ்-மகேஷ்பூவதி ஜோடி கால் இறுதிக்குத் தகுதி பெற்றது. இந்தியா பதக்கம் பெற வாய்ப்புள்ள விளையாட்டாக டெனிஸ் உள்ளது.


மகளிருக்கான ஹொக்கிப் போட்டியில் ஸ்பெயினுடனான முதற்சுற்று ஆட்டத்தில் சீன வீராங்கனை வூபரோவ் கோலடிக்கின்றார். இதில் 3:0 என்ற கணக்கில் சீனா வென்றது.

## ஒலிம்பிக் மோகத்தால் பொலீஸாருக்குச் சிக்கல்

பொலீஸார் ஒலிம்பிக் போட்டியில் மூழ்கியதால், கைதிகள் இருவர் தப்பிச் சென்றனர்.

இச்சம்பவம் தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றுள்ளது.

தாய்லாந்து வீராங்கனை போல்சாக் 53 கிலோ பளுதூக்குதல் போட்டியில் பங்கேற்பதைப் பொலீஸார் பாங்கொக் பொலீஸ் நிலையத் தொலைக்காட்சியில் ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தனர். இத் தருணத்தைப் பயன்படுத்தி, பொலீஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப் பட்டிருந்த கொலைக்கைதிகள் இருவர் தப்பியோடிவிட்டனர். இதனால் அந்தப் பொலீஸார்மீது துறைசார் நடவடிக்கை எடுக்க உத்தரவிடப் பட்டுள்ளது.

இதேவேளை, அதிர்ஷ்டவசமாக, அந்த வீராங்கனை தங்கம் வென்று விட்டார். அதுவே தாய்லாந்துக்குக் கிடைத்த முதல் தங்கப் பதக்கம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மலரும் நினைவுகள்

வீயெஸ்ரி

1948ஆம் ஆண்டு ஜுலை மாதம் 29ஆம் திகதி தொடக்கம் ஓகஸ்ட் மாதம் 14ஆம் திகதிவரை பிரிட்டனின் லண்டன் நகரில் 14ஆவது ஒலிம்பிக் போட்டி இடம்பெற்றது. 17 வகையான 136 போட்டிகள் கொண்ட இநத ஒலிம்பிக்கில் 59 நாடுகளைச் சேர்ந்த 3ஆயிரத்து 714 வீரர்களும் 390 வீராங்கனைகளும் கலந்து கொண்டனர்.

முதன் முதலில் இம்முறையே இலங்கையின் சார்பாக வீரர்கள் போட்டிகளில் பங்குபற்றினர். இவ்வாய்ப்பைப் பயன்படுத்தி 400 மீற்றர் தடை தாண்டும் ஓட்டப்போட்டியில் இலங்கையின் சார்பாகக் கலந்து கொண்ட டங்கன் வைட் என்ற வீரர் வெள்ளிப்பதக்கத்தை வென்றார். 14ஆவது ஒலிம்பிக் போட்டியை ஜப்பானும், ஜேர்மனியும் புறக்கணித்தன.

1952ஆம் ஆண்டு ஜுலை மாதம் 19ஆம் திகதி தொடக்கம் ஓகஸ்ட் மாதம் 3ஆம் திகதிவரை பின்லாந்து நாட்டின் ஹெல்சிங்கி நகரில் 15ஆவது ஒலிம்பிக் போட்டி இடம்பெற்றது. 17வகையான 149போட்டிகள் கொண்ட இந்த ஒலிம்பிக்கில் 69 நாடுகளைச் சேர்ந்த 4ஆயிரத்து 436 வீரர்களும் 519 வீராங்கனைகளும் கலந்துகொண்டனர்.

1912ஆம் ஆண்டில் இடம்பெற்ற 5ஆவது ஒலிம்பிக்போட்டிகளின் பின்னர் ஒலிம்பிக போட்டிகளில் கலந்துகொள்ளாதிருந்த ரஷ்யா, 40 ஆண்டுகள் கழித்து மீண்டும் இம்முறை கலந்துகொண்டது.

இம்முறை ரஷ்ய வீரவீராங்கனைகள் மொத்தமாக 22தங்கப்பதக்கங்களை வென்றெடுத்தனர். இநத ஒலிம்பிக் போட்டிகளில் செக்கோசிலேவேக்கிய நாட்டு வீரர் 'எமில் சடோபெக்' முறையே 5ஆயிரம் மீற்றர், 10ஆயிரம் மீற்றர் மற்றும் மரதன் ஓட்டம் ஆகிய மூன்று போட்டிகளிலும் தங்கப்பதக்கங்களை வென்றெடுத்ததன்மூலம் ஒரே ஒலிம்பிக்போட்டிகளில் மூன்று தங்கப்பதக்கங்களைப் வென்றெடுத்த முதல் வீரர் என்ற சாதனைக்கு உரியவரானார்.

1956ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30ஆம் திகதி தொடக்கம் டிசெம்பர் மாதம் 8ஆம் திகதிவரை ஆஸ்திரேலியாவின் மெல்போண் நகரில் 16ஆவது ஒலிம்பிக் போட்டி இடம்பெற்றது. 17 வகையான 145போட்டிகள் கொண்ட இந்த ஒலிம்பிக் போட்டிகளில் 72 நாடுகளைச் சேர்ந்த 2ஆயிரத்து 938 வீரர்களும் 376 வீராங்கனைகளும் பங்கெடுத்தனர். இப்போட்டிகளில் 37 தங்கப்பதக்கங்கள் உட்பட 98 பதக்கங்களை வென்றெடுத்ததன் மூலம் ரஷ்யா முதலிடத்தைத் தட்டிச்சென்றது.

## பெல்ப்ஸ்ஸுக்கு 3ஆவது தங்கம்

அமெரிக்க நீச்சல் வீரர் மைகேல் பெல்ப்ஸ் எதென்ஸ் ஒலிம்பிக்கில் மூன்றாவது தங்கப்பதக்கத்தையும் கைப்பற்றினார். 4X200 மீற்றர் அஞ்சல் நீச்சலில் அமெரிக்க அணி முதலிடம் பெற்றது. இந்த அணியில் அங்கம் வகித்தவரான பெல்ப்ஸ் இதன்மூலம் தங்கப்பதக்கம் பெற்றார்.

இப்போட்டியில் ஆஸ்திரேலிய அணியினர் வெள்ளிப் பதக்கத்தையும், இத்தாலி அணியினர் வெண்கலப் பதக்கத்தையும் பெற்றனர்.

## பதக்கப் பட்டியல்

(நேற்றுமாலை நிலைவரம்)

| நிலை | நாடு | தங்கம | வெள்ளி | வெண்கலம் | மொத்தம |
|---|---|---|---|---|---|
| 01. | சீனா | 10 | 6 | 2 | 18 |
| 02. | அமெரிக்கா | 6 | 8 | 6 | 20 |
| 03. | ஆஸ்திரேலியா | 6 | 3 | 5 | 14 |
| 04. | ஜப்பான் | 6 | 2 | 1 | [illegible] |
| 05. | பிரான்ஸ் | 3 | 2 | 4 | 9 |
| 06. | உக்ரைன் | 3 | 1 | 1 | 5 |
| 07. | ரஷ்யா | 2 | 5 | 5 | 12 |
| 08. | இத்தாலி | 2 | 3 | 2 | 7 |
| 09. | கிரேக்கம் | 2 | 0 | 1 | 3 |
| 09. | ரொமானியா | 2 | 0 | 1 | 3 |
| 09. | துருக்கி | 2 | 0 | 1 | 3 |
| 12. | ஜெர்மனி | 1 | 2 | 2 | 5 |
| 13. | ஸ்லோவேக்கியா | 1 | 2 | 1 | 4 |
| 14. | தெ.கொரியா | 1 | 1 | 2 | 4 |
| 15. | ஹங்கேரி | 1 | 1 | 1 | 3 |
| 16. | தாய்லாந்து | 1 | 0 | 2 | 3 |
| 17. | தெ.ஆபிரிக்கா | 1 | 0 | 0 | 1 |
| 17. | சுவிற்சர்லாந்து | 1 | 0 | 0 | 1 |
| 17. | ஐ.அ.குடியரசு | 1 | 0 | 0 | 1 |
| 20. | நெதர்லாந்து | 0 | 2 | 3 | 5 |
| 21. | கொரியகுடியரசு | 0 | 2 | 1 | 3 |
| 22. | ஒஸ்ரியா | 0 | 2 | 0 | 2 |
| 22. | போலந்து | 0 | 2 | 0 | 2 |
| 24. | பிரிட்டன் | 0 | 1 | 2 | 3 |
| 25. | ஜிம்பாப்வே | 0 | 1 | 1 | 2 |
| 26. | ஸ்பெயின் | 0 | 1 | 0 | 1 |
| 26. | ஜோர்ஜியா | 0 | 1 | 0 | 1 |
| 26. | இந்தோனேசியா | 0 | 1 | 0 | 1 |
| 26. | இந்தியா | 0 | 1 | 0 | 1 |
| 26. | போர்த்துக்கல் | 0 | 1 | 0 | 1 |
| 26. | சொ.மொனாநீக்ரோ | 0 | 1 | 0 | 1 |
| 32. | கியூபா | 0 | 0 | 4 | 4 |
| 33. | பெல்ஜியம் | 0 | 0 | 2 | 2 |
| 33. | பிரேஸில் | 0 | 0 | 2 | 2 |
| 33. | பல்கேரியா | 0 | 0 | 2 | 2 |
| 36. | ஆர்ஜென்ரீனா | 0 | 0 | 1 | 1 |
| 36. | கனடா | 0 | 0 | 1 | 1 |
| [illegible]6. | கொலம்பியா | 0 | 0 | 1 | 1 |
| 36. | செக்.குடியரசு | 0 | 0 | 1 | 1 |
| 36. | மொங்கோலியா | 0 | 0 | 1 | 1 |
| 36. | ஸ்லோவேனியா | 0 | 0 | 1 | 1 |


எப்பிரதேசத்திலும் அன்ரனா மூலம் இயங்கக் கூடிய மொபி ரெல் இணைப்புக்கள்
IDD இணைப்புக்கள் 23000/=
பவர் செலூலர் ட்ரேடிங் கம்பனி
இல.185. முதலாம் மாடி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 2227070

கணணித்துறையில் நீங்கள் ஓர் பட்டதாரியாக......
BTEC HND
"IIS என்றும் உங்கள் வளமான எதிர்காலத்தின் வழிகாட்டி"
Institute of Informatics Studies (IIS)
# 100, Clock Tower Road, Jaffna
T.P : 021 222 2831/021 222 6933

Castrol Engine Oil From U.K
உங்கள் நெஞ்சைத் தொடும் யமஹா
From Japan
YAMAHA PLAZA
298 KKS Road, Jaffna.
Castrol YAMAHA racing

"அழகிய ஜவுளிகளின் ஆலயம்"
சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்
# 41, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.
T.P- 222 2063

Abans
நிறுவனத்தின் உத்தரவாதத்துடன் இலவச விநியோக சேவையில் பெற்றிட...
LG Digitally yours
JAFFNA ELECTRICALS
Authorised Dealer For Abans T.P-021-222-5766

SHARP be sharp
5 வருட உத்தரவாதத்துடன் விற்பனைக்கு பிந்திய சேவை
பிறவுண் அன்ட் கம்பனி
89, ஸ்ரான்லி வீதி, யாழ்
021-222 5150

SONY
சீடில்சின் உத்தரவாத பத்திரத்தை வற்புறுத்தி வாங்கவும்
ஏக விநியோகஸ்தர்கள்:-
SIEDLES
No.11, Stanly Road, Jaffna

## எமது ஸ்தாபனத்திற்கு பின்வரும் பணிகளுக்கு பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்

i. விநியோக உதவியாளர்கள்

தகைமைகள்:

★ ஜீ.சீ.ஈ. (சாதாரண தரம்) சித்தி.
★ வயது 20-35 இற்கும் இடையில்.
★ விநியோக முன்அனுபவம்.
★ தேக ஆரோக்கியம் உள்ளவர்கள்.

ii அலுவலகச் சிற்றூழியர்

★ அலுவலக வேலைகளுடன் பூந்தோட்டமும் பராமரிக்கக் கூடியவர் விரும்பத்தக்கவர்.

விரும்புவோர் (20-08-2004) வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்குக் கீழ்க்காணும் முகவரிக்கு ஆவணங்களுடன் நேரில் வரவும்.

**மனித வள முகாமையாளர்,**
**லக்ஷ்மி குறூப்,**
**23/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.**

(பிறவுண் வீதியில் இருக்கும் மின்சார சபைக் காரியாலயத்திற்கும் கலட்டிச் சந்திக்குமிடையில் முகவரி அமைந்துள்ளது.)

(சி-36811)(24-17-13)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

### முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடம் இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகள் கல்வியாண்டு - 2003/2004

முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தின் பின்வரும் B.Ad./B.Com. இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் 01.09.2004 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

1. இரண்டாம் வருடம் பகுதி I
2. மூன்றாம் வருடம் பகுதி II
3. நான்காம் வருடம் பகுதி III

மீள் பரீட்சைக்குத் தோற்றுவோர் ஒரு பாடத்துக்கு ரூபா 50/= வீதம் பல்கலைக்கழகக் காசாளரிடமோ அல்லது பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையிலோ செலுத்திய பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை 20.08.2004 முதல் முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களைப் பீடாதிபதி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு மாணவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

(சி-36810)(24-13-17-29) -பதிவாளர்.


## யாழ்ப்பாணக் கல்லூரியில் பாரதியார் விழா

யாழ்ப்பாணம்,ஓக.19

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பாரதி விழா அடுத்த மாதம் 10 ஆம் திகதி கல்லூரி முதல்வர் நோயல் . ஏ. விமலேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் பிரதமவிருந்தினர்களாக மதுரை காமராஜர் பல்கலைக்கழகப் பேராசிரியர் இரா.மோகன், திருமதி நிர்மலா மோகன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

பாரதி பற்றிய சிறப்புப்பேச்சை தென்னிந்தியத் திருச்சபைப் பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன் ஆற்றவுள்ளார். (10-185)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 10 - 01 - 1920



மறைவு 20 - 07 - 2004

**திருமதி நடராசா பொன்னம்மா**

பண்புடன் வாழ்ந்து பரமனடி சேர்ந்த தாயே!
அன்புடன் உங்கள் ஆத்மா சாந்தியடைய
ஆண்டவனை வேண்டுகின்றோம்.

வட்டுக்கோட்டை. நினைவு கூரும்:
(35441)(21-13-17-29) -குடும்பத்தினர்.






## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை

### கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மருத்துவபீடக் கட்டடத் தொகுதியில் கழிப்பறை திருத்தவேலைகள் மற்றும் சில மேம்படுத்தல் பணிகளை நிறைவேற்றுவதற்கான அரக்கிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கேள்விச் சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கட்டட நிர்மாண வேலைகளுக்கான இக்ராட் (ICTAD) நிறுவனத்தில் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரர் கேள்விப்பத்திரங்கள் பெறத் தகுதியுடையவராவர்.

கேள்விப் பத்திரங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உதவிப் பதிவாளர் / நிர்வாகம் அவர்களிடமிருந்து 03.09.2004 வரை செல்லுபடியான ஒப்பந்தகாரர் பதிவுப் புத்தகத்தையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் காசாளர் கருமபீடத்தில் பின்வரும் வைப்பீடுகளுக்கான தொகையைப் பணமாகச் செலுத்திய பற்றுச்சீட்டையும் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

01. மீளளிக்கப்படும் வைப்புத் தொகை ரூபா 5,000/=
02. மீளளிக்கப்படாத வைப்புத்தொகை ரூபா 250/=

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 14.09.2004 அன்று மாலை 3.00 மணிக்கு முன் தலைவர், கேள்விச் சபை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அவர்களுக்குக் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் இடப்படல் வேண்டும். எவ்வாறாயினும் மேலுறையில் பணிவிவரம் எழுதப்படல் வேண்டும்.

தேவைப்படின் கேள்விப் பத்திரங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாகக் கிளையில் வழமையான அலுவலக நேரங்களில் கட்டணம் ஏதுமின்றி கேள்விதாரர்கள் பரிசீலிக்கமுடியும்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். தபால்பெட்டி இல. 57,
18.08.2004 (சி-36809)(24-13-17-29) திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.



## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 604 |
| திகதி | 17-08-2004 |

4874397-4890171

லக்கினம் இடபம்

வெற்றி இலக்கங்கள் 17 29 42 50

ஜக்பொட் பரிசு ரூபா.73,39,825/- வெல்லப்படவில்லை. இந்த வெள்ளிக்கிழமை ஜக்பொட் ரூபா. 77,32,000/-

| | | | |
|---|---|---|---|
| 1.இல | 3,51,216 | 10/- | 35,12,160/- |
| 2.இலக்கங்கள் | 32,218 | 20/- | 6,44,360/- |
| 1.இல + லக்கினம் | 31,880 | 30/- | 9,56,400/- |
| 2.இல + லக்கினம் | 2,956 | 100/- | 2,95,600/- |
| 3.இலக்கங்கள் | 863 | 500/- | 4,31,500/- |
| 3.இல + லக்கினம் | 71 | 5,000/- | 3,55,000/- |
| 4.இலக்கங்கள் | 04 | 1,00,000/- | 4,00,000/- |
| 4.இல + லக்கினம் | - | 73,39,825/- | - |
| மொத்தம் | 4,19,213 | - | 76,77,520/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 76,77,520/-

4884964-0-00
4888914-4-05
4877416-8-50
4877838-7-04
4884883-4-58

# முதியோர் இல்ல கட்டடத் திறப்புவிழா

கைதடி, அரச முதியோர் இல்லத்தின் புதிய விடுதி, அரச சிறுவர் இல்ல புதிய கட்டடத்திறப்புவிழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு வடக்கு - கிழக்கு மாகாண சமூக நலத்துறை திணைக களத்தின் பணிப்பாளர் திருமதி ரஞ்சினி நடராஜபிள்ளையின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ். அரச அதிபர் செ. பத்மநாதனும், சிறப்புவிருந்தினர்களாக வடக்கு - கிழக்கு மாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு சமூக நலன் மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் வே.பொ.பாலசிங்கமும் தென்மராட்சிப் பிரதேச செயலாளர் செ.ஸ்ரீனிவாசனும் நல்லூர்ப் பிரதேச செயலாளர் திருமதி சு.தெய்வேந்திரமும் கலந்துகொள்ளவுள்ளனர். (எ-13)

# திருநெல்வேலியில் தையல் கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஓக.19

திருநெல்வேலி, கலாசாலை வீதியில் அமைந்துள்ள சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு கைப்பணிப் பொருள்கள், தையல் கண்காட்சியும் விற்பனையும் இடம் பெறவுள்ளன.

நல்லூர் பிரதேச செயலர் திருமதி க.தெய்வேந்திரத்தால் திறந்து வைக்கப்படவுள்ள இந்தக் கண்காட்சியில் மேற்படி சங்கத்தின் தையல் ஆசிரியர்களால் பயிற்றப்பட்ட இல்லச் சிறார்களினால் உருவாக்கப்பட்ட கைப்பணி பொருள்களும் தைக்கப்பட்ட ஆடைகளும் கண்காட்சிக்கு வைக்கப்படவுள்ளன. (எ-201)

# லெப்.கேணல் திலீபன் நினைவு தின கலந்துரையாடல்

லெப்.கேணல் தியாகி திலீபனின் 17 ஆவது ஆண்டு நினைவுதினம் தொடர்பான கலந்துரையாடல் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை10 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. மேற்படி கலந்துரையாடலில் அனைத்து கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் மற்றும் செயலாளர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ்.மாவட்டக் கூட்டுறவுச்சபைச் செயலாளர் கேட்டுள்ளார்.(10-201)

## கண்ணீர் அஞ்சலி



முன்னாள் சங்கானை, வேலணை பிரதேச செயலாளரும் தற்போதைய யாழ்.மாவட்ட சிரான் (SHIRAN) இணைப்பாளருமான

அமரர்

**செல்லையா இரத்தினம் அவர்களின்**

பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உதவி அரசாங்க அதிபர் பணிமனை
தீவகம் வடக்கு.
ஊர்காவற்றுறை.

உதவி அரசாங்க அதிபரும் ,
ஊழியர்களும், நலன்புரிச் சங்கம்.

(C/36828)(40-12-11)

## திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் தாரண வருடம் ஆவணித் திங்கள் இன்று (19.08.2004) வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு வட்டுக்கோட்டை எபனேசர் ஜெப ஆலயத்தில

| மணமகன் | மணமகள் |
|---|---|
| திருவாளர் செல்வன் | திருவளர் செல்வி |
| **பாலலோஜனன்** (லண்டன்) | **நாகநந்தினி** |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

தேவனின் கிருபையால் திருமணம் நடைபெறுகின்றது. இந்நிகழ்விற் கலந்து புதுமணமக்களை ஆசீர்வதிப்பதுடன் யாழ்.பற்றிக்ஸ் வீதி, லொயலாஸ் மண்டபத்தில் நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் பங்கேற்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**தங்கள் நல்வரவை நாடும்**

திரு.திருமதி.
அரியமுத்து சற்குணேஸ்வரி
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி

திரு.திருமதி.
நாகசுந்தரம் நாகேஸ்வரி,
லோட்டன் வீதி,
மானிப்பாய்.

(இரு வீட்டார் அழைப்பு)

(35446)(40-11-12)

## ஓராண்டு நினைவலைகள்

மனம் மகிழ 24 - 10 - 1949

மனம் நெகிழ 31 - 08 - 2003



உரும்பிராய் மேற்கு வீரசைவகுலதிலகர்

அமரர்

**அப்பாத்துரை கருணாகர ஐயர்**

அன்புக்கு அகல் விளக்காய்
இருந்தீரே எம்மோடு
ஆண்டொன்று சென்றும்
அழியவில்லை உம்நினைவு
ஆண்டாண்டு சென்றாலும்
அழியாது எம்மனதில்

அன்னாரின் இல்லத்தில் நாளை (20.08.2004) வெள்ளிக்கிழமை நடைபெறும் சிவபூசையிலும் மதியபோசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

"கருணைவாசா"
உரும்பிராய் மேற்கு.

- குடும்பத்தினர்.

(35455)(11-12-40)

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி முத்தையா
### (முன்னாள் அரசாங்க ஒப்பந்தகாரர் - இடைப்பிட்டி, காரைநகர்)

காரைநகர், இடைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், இல.5 2/3, உருத்திரா மாவத்தை, வெள்ளவத்தை, கொழும்பு - 06 ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி முத்தையா அவர்கள் நேற்று (18.08.2004) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கமுத்துவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பரமானந்தம் மற்றும் பரஞ்சோதி, பாலசுப்பிரமணியம், நித்தியானந்தம், சற்குணராசா, தவநாயகம் ஆகியோரின் அன்புத் தந்தையும் புஸ்பகாந்தி, சுந்தரகாந்தி, நாகரத்தினம், புஸ்பராணி, நிர்மலா, பிறேமாம்பிகை ஆகியோரின் மாமனும் காலஞ்சென்ற இராசம்மா, செல்லம்மா, காலஞ்சென்ற சண்முகம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் உஷாநந்தினி, சுதாசினி, கௌரி, குகதாசன், ராதிகா, சுகந்தன், கஜேந்திரன், கஜேந்தினி, மயூரி, பிரசாந்தி, தவரூபன், தவரஞ்சன், பிரதீபன், அபிராமி, மீரா, குமரன் துவிஷனா, செந்தூரன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பொறளை ஜெயரத்தின மலர்ச்சாலையில் இன்று (19.08.2004) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகி, கனத்தை இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றர், உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*உருத்திராமாவத்தை,*
*வெள்ளவத்தை.*
*T.P.:011-2554767, 077-6612399* (35443)(40-11-12)

தகவல்:
மு.பரஞ்சோதி
(மகன்).

## கதிர்காமு முத்தையா

நாவற்குழி கிழக்கைச் சேர்ந்த கதிர்காமு முத்தையா அவர்கள் 17.08.2004 செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னாரின் பூதவுடல் கொச்சிக்கடை இரத்தினம் வீதியில் உள்ள 123 ஆம் இலக்க இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றறர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*123, இரத்தினம் வீதி,*
*கொச்சிக்கடை.* (35452)(12-11-40)

தகவல்:
க. தம்பிராசா
(சகோதரன்).

## திருமதி இராசரத்தினம் நாகம்மா



யார்வத்தை, வதிரியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட இராசரத்தினம் நாகம்மா 15.08.2004 ஞாயிற்றுக்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - சின்னப்பிள்ளை தம்பதிகளின் மூத்த மகளும், இராசரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் அன்னப்பிள்ளை, தெய்வானைப்பிள்ளை, ஐயாத்துரை, காலஞ்சென்ற தங்கராசா மற்றும் பறுபதம் ஆகியோரின் சகோதரியும், குணரத்தினம், காலஞ்சென்ற நடராசா மற்றும் செல்வராசா, சிவராசா, கனகராசா, தவராசா, யோகராணி, நாகேஸ்வரி, யோகேஸ்வரி, காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, செல்லப்பாக்கியராணி ஆகியோரின் அன்புத் தாயாரும் யோகமலர், பரமேஸ்வரி, புஷ்பமலர், பவளமலர், விஜிதா, தர்மதி, ஆதிலக்சுமி, சிவராசசுந்தரம், செல்வானந்தன், நவசீலன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், அரசரத்தினம், அரவிந்தன், பவானி, கோபிகா, ஜெயராசா, ஜெயராணி, தவராசா, லஜீபன், றியோபன், கார்த்தீகன், கஜந்தி, அருண்யா, லக்சலா, திசாலினி, வேதினி, சுபானி, நிசானி, பிரணவன், கஷன், மிரோஷா, ஹரிசன், காயத்திரி, அனுயா, கீர்த்திகா, துர்ய, ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.08.2004) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வதிரி, ஆலங்கட்டை இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*யார்வத்தை,*
*வதிரி,*
*கரவெட்டி* (35451)(40-12-11)

தகவல்:
இ.குணரத்தினம்,
இ.சிவராசா (மகன்மார்)

## விவாஹ சுபமுகூர்த்தப் பத்திரிகை

உ
ஸ்ரீ ராம ஜெயம்

அன்புடையீர

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான தாரண வருடம் ஆவணி மாதம் 04 ஆம் நாள் (20.08.2004) வெள்ளிக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் 10.30 மணிவரையுள்ள அத்த நட்சத்திரமும் அமிர்த சித்த யோகமும் கூடிய துலா லக்கின சுபமுகூர்த்த வேளையில

பிரம்மஸ்ரீ.சி.பொன்னையா ஐயரின்
பௌத்திரனும் எமது கனிஷ்ட
புத்திரனுமாகிய சிரஞ்சீவி
**கிருஷ்ணானந்த சர்மா** (B.A.Hons)
சிவன்கோவில் - நல்லூர்
விரிவுரையாளர் - சமஸ்கிருதத்துறை
பல்கலைக்கழகம் - யாழ்ப்பாணம்.
அவர்கட்கு

திருமலை சிவஸ்ரீ பூர்ணானந்தேஸ்வரக்
குருக்கள், கோப்பாய் சிவஸ்ரீசுப்பிரமணியக் குருக்கள்
ஆகியோரின் பௌத்திரியும் பிரம்மஸ்ரீ பூ.சுந்தரேஸ்வர ஐயர்
தம்பதிகளின் புத்திரியுமாகிய சௌபாக்கியவதி
**ரவிச்சந்திரிகா** (B.A.Hons)
(ஆசிரியை கோணேஸ்வரா இந்துக் கல்லூரி,
திருகோணமலை.
அவர்களை

கன்னிகாதான, திருமாங்கல்யதாரண பாணிக்கிரஹணம் செய்துவைப்பதாக ஸ்ரீ கமலாம்பிகா சமேத ஸ்ரீ கைலாஸநாத சுவாமி, திருமலை வில்லூன்றிக் கந்தன் திருவருளுடனும், ஜகத் குரு ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகளின் ஆசியுடனும் பெரியோர்களால் நிச்சயிக்கப்பெற்று மேற்படி முகூர்த்தம் நல்லூர் சிவன் கோவிலில் நடைபெற இருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் பந்துமித்திரர்கள் சூழ வந்து தம்பதிகளை ஆசீர்வதித்து திருமண விழாவை சிறப்பாக நடத்தி வைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

சமாவர்த்தனம் 2004.08.20 காலை 6.00 மணிக்கு மணமகன் இல்லத்தில் இடம்பெறும்.

*இவ்வண்ணம் தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்:*

ஸ்ரீ ஸ்ரீமதி பொ.ஸ்ரீபதிசர்மா லஷ்மி அம்மாள் தம்பதிகள்,
ஆயுர்வேத வைத்தியர் குன்னாலை வடக்கு,
கரவெட்டி. (T.P.021-2263808)

பிரம்மஸ்ரீ சுந்தரேஸ்வர ஐயர் மங்களகௌரி தம்பதிகள்
வில்லூன்றி கந்தசுவாமி கோவில்,
திருகோணமலை. (T.P.026-2220704)

கா. இரத்தினகைலாஸநாதர் குருக்கள் பிரதான குருவும் தர்மகர்த்தாவும்
கார்யகாலமந்திரம் ஸ்ரீ முன்னேஸ்வர தேவஸ்தானம் நல்லூர் சிவன் கோவில்.

வரவேற்பு: 2004. 08.22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00 மணிக்கு மணமகள் இல்லத்தில் நடைபெறும்.

*வரவேற்பாளர்கள்

ஸ்ரீ.ஸ்ரீமதி சி.பாலசுப்பிரமணிய சர்மா தம்பதிகள்,
ஸ்ரீ.ஸ்ரீமதி ஸ்ரீசச்சிதானந்த சர்மா தம்பதிகள்.

ஸ்ரீ.ஸ்ரீமதி சோ.ஸ்ரீனிவாச சர்மா தம்பதிகள்,
ஸ்ரீ.ஸ்ரீமதி கு.ஸ்கந்ததாச சர்மா தம்பதிகள,
ஸ்ரீ.ஸ்ரீமதி சோ.பிரபாகர சர்மா தம்பதிகள்.

(இருவீட்டார் அழைப்பு)

(35454)(40-11-12)

## கொக்குவில்
## மஞ்சவனப்பதி முருகன் ஆலயம்
## தாரண வருஷம் (2004)
## மகோற்சவ விஞ்ஞாபனம்

முருகன் அடியார்களே!

நிகழும் தாரண வருஷம் ஆவணி மாதம் 4ஆம் நாள் 20.08.2004 வெள்ளிக்கிழமை பகல் 10.00 மணிக்கு வருடாந்த மகோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 29.08.2004 ஞாயிற்றுக்கிழமை தீர்த்தோற்சவத்துடன் நிறைவுபெற்று 30.08.2004 திங்கட்கிழமை பூங்காவனத் திருவிழா நடைபெறும் என்பதை முருகன அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.

| | |
|---|---|
| கொடியேற்றம்: | 20.08.2004 வெள்ளிக்கிழமை பகல் 10.00 மணி |
| தண்டாயுதபாணி உற்சவம்: | 26.08.2004 வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணி |
| சப்பரம்: | 27.08.2004 வெள்ளிக்கிழமை மாலை 7.00 மணி |
| தேர்த்திருவிழா: | 28.08.2004 சனிக்கிழமை காலை 9.00 மணி |
| தீர்த்தோற்சவம்: | 29.08.2004 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி |
| பூங்காவனம்: | 30.08.2004 திங்கட்கிழமை மாலை 5.00 மணி |
| 12 ஆவது தின அலங்கார உற்வசம் | 01.09.2004 செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணி |
| தேரடிப்பொங்கல்: | 02.09.2004 புதன்கிழமை மாலை 4.00 மணி |

**மகோற்சவ குரு -சிவஸ்ரீ இரங்கவரதராஜக்குருக்கள்.**

**அடியார்கள் அனைவரும் வருக! இறைவன் ஆசி பெறுக!!**

ஆலயத்தொண்டில்

பெறுநர்
வே.நடராசா

ஆலய நிர்வாக சபையினரும்
இளந்தொண்டர்களும்.

(C/36815)(40-11-12)

## தவறிவிட்டது

தெல்லிப்பழை யாழ். மினிபஸ் பயணத்தில் க.பிரமேஸ்வரன் என்பவருடைய தே.அ. அட்டை (இல. 710444404V) தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள். 0777 156663, 077 6184627 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (35450)


**ராஜா** யாழ்ப்பாணம்.



இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
கமலஹாசன். பிரபு. சிநேகா நடித்த
**வசூல்ராஜா M.B.B.S**
புதியநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30
ரிக்கெற்முற்பதிவு செய்துகொள்ளலாம்.

**நாகம்ஸ்** சுன்னாகம்



இன்று முதல் அர்ஜுன். மீனா. சுவாதி நடிப்பில்
**அன்பு சகோதரன்**
காட்சிநேரம்: 11.00, 3.00, 7.00
(C/36415) (12)

அரவிந், சோனா, ரகுவரன் நடித்த
**கையோடு கை**
**ROAD TRIP**
11.00, 2.45, 6.00 புது வெள்ளி, சனி, ஞாயிறு. [இரவு 8.45 பு.இ.]

**ஓவ்(F) செட் மெசின் மைண்டர் தேவை**

முன்பு வேலைசெய்த அச்சக அனுபவம் உடைய
★ ஓவ் (F) செட் (டேவிசன்) மெசின் மைண்டர்
★ கணனி இயக்குநர் (இருபாலாரும்)
★ பைண்டர்
★ஸ்கிறீன் பிறிண்டிங் உடன் தேவை

நேரில் சந்திக்கவும்.
**தயா அச்சகம்**
கொம்பியூட்டர், ஓவ்செட் பிறிண்டேர்ஸ்,
138, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
நாவலர் பாடசாலை முன்பாக.
T.P 021 2222881
(சி.36798)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

எமது சங்கத்தின். செயலாளர்
கி.மனோகர்ன் அவர்களின்
அன்புத் தந்தையார்
**கதிரன் கிருஷ்ணபிள்ளை**

அவர்களது மறைவினால் துயருறும் குடுமபத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொளகின்றோம்.

நேற்றைய் உதயனில் பக்கம் 15 இல் கி.மனோகரன் என்பது தவறுதலாக கி.மகேஸவரன என்று பிரசுரமானதற்கு வருந்துகின்றோம்.

யாழ்.மாவட்ட கரபந்தாட்டச்
சங்க உறுப்பினர்கள்,
யாழ்ப்பாணம். (35444)

# விகிதாசார அடிப்படையில் எழுதுவினைஞர் நியமனங்கள்

அரச சேவைகளில் எழுதுவினைஞர்களை ஆள்சேர்த்துக்கொள்வதற்காக 2002 ஆம் ஆண்டில் நடைபெற்ற போட்டிப் பரீட்சை அடிப்படையில் மாவட்ட சனத்தொகை விகிதாசாரங்களுக்கு அமைய அரச நிர்வாக சேவைகள் அமைச்சினால் தீர்மானிக்கப்படவுள்ள வெட்டுப் புள்ளிகளுக்கு ஏற்ப 4 ஆயிரம் பேருக்கு எழுதுவினைஞர் நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

இத்தகவலை அரச நிர்வாக சேவைகள் அமைச்சின் ஒருங்கிணைந்த சேவைகளின் பணிப்பாளர் நாயகம் திருமதி விஜித்தா செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

மேற்படி பரீட்சைக்கு சுமார் 3 லட்சம் விண்ணப்பதாரிகள் தோற்றியிருந்தனர். அவர்களுள் 1லட்சத்து 34 பேரே சித்தியடைந்தனர். அவர்களுள் 15 ஆயிரம் பேர் 126 புள்ளிகளுக்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

அரச சேவைகளில் வெற்றிடங்களாக உள்ள 4 ஆயிரம் எழுதுவினைஞர் நியமனங்கள் தொடர்பாக திறைசேரியில் அனுமதி கோரப்பட்டுள்ளதாக அரச நிர்வாக சேவைகள் மற்றும் உள்நாட்டு விவகார அமைச்சர் தொடங்கொட தெரிவித்துள்ளார். தற்போது நிலவும் அடிப்படைத் தேவைகளுக்கு அமைய முதற்கட்டமாக 2 ஆயிரம் எழுதுவினைஞர் நியமனங்கள் தொடர்பாக திறைசேரியின் அனுமதி பெறப்படவுள்ளது. பின்னர் எஞ்சியுள்ள 2 ஆயிரம் நியமனங்கள் தொடர்பாக திறைசேரியின் அனுமதியைப் பெறுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் அரச நிர்வாக சேவைகள் அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (எ-9)






யாழ்.பல்கலைக்கழக விவசாய பீடாதிபதி பேராசிரியர் க.இராசதுரை எழுதிய 'வேளாண் நூல்' என்ற நூலின் அறிமுக விழா அண்மையில் பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்ட வேந்தர் பேராசிரியர் ம.சிவசூரிய, துணைவேந்தர் சு.மோகனதாஸ், வாழ்நாள் பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம் (நந்தி), பேராசிரியர் எஸ்.வி.பரமேஸ்வரன், நூலாசிரியர் பேராசிரியர் க.இராசதுரை ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும்-

யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி உரை நிகழ்த்துவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: தீபா)

# பண்டாரவளை பஸ் விபத்தில் இருவர் மரணம்; 36 பேர் படுகாயம்

## இளந்தாய் பலி; மடியிலிருந்த குழந்தை தப்பியது!

பதுளை,ஓக.19

பண்டாரவளை,ஹெலமுதுன எனுமிடத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பஸ் விபத்தில் இருவர் மரணமடைந்தனர்; மேலும் 36 பேர் படுகாயமடைந்தனர்.

இந்த பஸ்ஸில் தாயின் மடியிலிருந்து பயணித்த மூன்று வயதுப் பெண் குழந்தையொன்று காயம் ஏதுமின்றி தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளது. ஆனால், தாயோ பரிதாபகரமாக உயிரிழந்தார்.

பண்டாரவளையிலிருந்து பல்லேவெல எனுமிடத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்த தனியார் பஸ் ஒன்று ஹெலமுதுனவில் பாதையை விட்டு விலகி 100 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது.

இவ்விபத்தில் டி.டி.கருணாவதி (வயது31) என்றதாய் ஒருவரும், பி.வி.அபேசேகர (வயது 60) என்பவருமே பலியானவர்களாவர்.

காயமடைந்தவர்கள் பதுளை, பண்டாரவளை, தியத்தலாவ வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக்ச் சேர்க்கப்பட்டனர். அவர்களில் மூவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

பஸ்விபத்துக்குள்ளானபோது சாரதியும் நடத்துனரும் யன்னல் வழியாகப் பாய்ந்து தப்பி ஓடிவிட்டனர் என மேலும் தெரிவிக்கப்பட்டது. இவ்விருவரையும் தேடி பண்டாரவளைப் பொலீஸார் வலை விரித்துள்ளனர் என அறிவிக்கப்படுகிறது.

(முன்னர் வந்த செய்தி 4 ஆம் பக்கத்தில்)

## தெற்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனினும், இந்நடவடிக்கை என்ன என்பது பற்றிய தகவல் வெளியிடப்படவில்லை.

இதேவேளை, விடுதலைப் புலிகளின் தற்போதைய நடவடிக்கைகள் தொடர்பில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அறிக்கை ஒன்றை வெளியிடவிருக்கின்றார் என பாதுகாப்பு அமைச்சின் செயலாளரை மேற்கோள்காட்டி செய்தி ஏஜென்ஸி ஒன்று தகவல் வெளியிட்டது.

அண்மைக்காலமாக கிழக்கிலும், கொழும்புப் பகுதியிலும் பரவலாகக் கொலைகள் இடம்பெற்று வரும் நிலையிலேயே பாதுகாப்புச் செயலாளரின இக்கருத்துக்கள் வெளியாகியுள்ளன.

அரசு - புலிகள் புரிந்துணர்வு உடன்பாட்டின இணங்கப்பட்ட விடயங்களுக்கு முரணாகாமலும் - அதேசமயம், தென்னிலங்கைப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் விதத்திலும் விசேட நடவடிக்கைகளை எடுக்க அரசு திட்டமிட்டு வருவதாகக கூறப்பட்டது. (க)

## அரசு செயலிழந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றைக் கூறுகின்றது.

மிகவும் மோசமான அரசியல் நெருக்கடியின் ஆரம்பம் இது.

புலிகள் முன்வைத்துள்ள இடைக்காலத் தனாட்சி அதிகாரசபையை அடிப்படையாக ஏற்று சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசு தயாரா அல்லது இல்லையா என்பது இன்னும் நாட்டுக்குத் தெரியாது.

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை தொடர்பாகப் புலிகள் சமர்ப்பித்துள்ள யோசனைகளுக்கு மாற்று யோசனைகளை அரசு தயாரிக்கின்றது என்று அரசின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜயந்ததனபால யாழ்ப்பாணத்தில் கூறுகின்றார். ஆனால், அப்படியல்ல என்று ஜே.வி.பி. பகிரங்கமாக அறிவிக்கின்றது.

இவ்விவகாரத்தில் ஜனாதிபதி குமாரதுங்க சில சமயங்களில் 'ஆம்' என்கிறார். பிறிதொரு சமயத்தில் 'இல்லை' என்கிறார்.

அவரின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பியோ முழுமூச்சாக இத்திட்டத்தை எதிர்க்கின்றது.

அரசின் நாளாந்தக் கடமைகள் நகர்வதே அதிசயமான நிலைமைதான்.

விலைவாசி விஷம் போல ஏறி அதிர்ச்சி தருகின்றது. பெற்றோலியப் பொருள்களின் விலையேற்றம் நிலைமையை மிகவும் மோசமாக்கியிருக்கின்றது.

பொருளாதார நிலைமை நாளுக்கு நாள் மிகவும் சீர்கெட்டுவிட்டது. வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இங்கு முதலீடு செய்யப் பின்னடிக்கின்றனர்.

டொலருக்கு எதிரான ரூபாவின் பெறுமதி மிக மோசமாக வீழ்ந்துவருகின்றது.

- இப்படி மேலும் தெரிவித்த பேராசிரியர் பீரிஸ், புதிய அரசின் இரட்டைவேடப் போக்கை அம்பலப்படுத்தும் வகையில் விடயங்களை நேற்றைய பத்திரிகையாளர் மாநாட்டில் வெளிப படுத்தினார். (க)

# பஸ் கட்டணம் 9 வீதம் உயர்வு; செவ்வாய் முதல் நடைமுறை

கொழும்பு,ஓக.19

தனியார் பஸ் கட்டணங்களை ஒன்பது வீதத்தால் உயர்த்துவதற்கு தேசியப் போக்குவரத்து ஆணைக்குழு அனுமதி அளித்துள்ளது.

நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான அனுமதியைப் பெற முடிவு செய்யப்பட்டதாகவும் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதனடிப்படையில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முதல் திருத்தப்பட்ட பஸ் கட்டணங்கள் நடைமுறைக்கு வரும்.

இம்முறை திருத்தத்தின்போது ஆகக் குறைந்த கட்டணத்தை மூன்று ரூபாவில் பேணுவது குறித்தும் பரிசீலிக்கப்படும் எனவும் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது. (க)

## பெற்றோலிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிதி நெருக்கடியில் இருந்து மீள்வதற்காகவும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் செயல்திறன் மட்டத்தில் முன்னேற்றததை ஏற்படுத்துவதற்காகவும் சில ஆக்கபூர்வமான தீர்மானங்கள் தொடர்பாக ஜனாதிபதி இதன்போது விளக்கமளித்ததாகவும் - கூறப்பட்டது.(ஏ-8)

## ஈ.பி.டி.பி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் கையொப்பம் இடுவதற்குரிய இடத்தினை மாற்றம் செய்து தருமாறும் கோரி - கொழும்பு உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தனர்.

இதனை ஏற்றுக்கொண்ட உயர் நீதிமன்றம் சந்தேகநபர்களின் பாதுகாப்புக் கருதி ஒவ்வொரு மாதமும், கடைசி ஞாயிற்றுக்கிழமை வவுனியா பொலீஸ் நிலையத்திற்குச் சென்று கையொப்பம் இடுமாறு உத்தரவிட்டது. (எ-5)

## வாழைச்சேனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாரம் மூன்று படுகொலைச் சம்பவங்கள் இடம்பெற்றன. அவற்றின்போது நான்கு இளைஞர்கள் கொல்லப்பட்டனர். இனம்தெரியாத ஆயுதக் குழுவொன்றினால் இப்படுகொலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இப்பகுதியில் இடம்பெற்றுவரும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் நோக்குடனேயே இந்தத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டதாக வாழைச்சேனைப் பொலீஸார் தெரிவித்தனர். (க)

## தனியார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மயமாக்கல் இடம்பெற்றால் பல ஆயிரம் ஊழியர்கள் வேலையை இழக்க வேண்டி நேரிடும் எனப் போராட்டத்தினை ஒழுங்குசெய்த அமைப்புத் தெரிவித்தது.

ரயில்வே அதிகார சபையின் பெரும்பாலான பங்குகளை தனியார் நிறுவனங்களுக்கு விற்றுவிட அரசு நடவடிக்கை எடுத்துவருவதனைக் கடுமையாக எதிர்ப்பதாகப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள தெரிவித்தனர். (எ-9)

## ஐந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுத்தார். அவர் அதனுள் இருந்த ஒரு ரொக்கட் குண்டை வாவியில் எறிந்த பின்னர், ஏனையவற்றை வீட்டிற்கு எடுத்துச் சென்று தோட்டத்தில் புதைத்து வைத்துள்ளார். பின்பு அவற்றைப் பொலீஸார் மீட்டெடுத்தனர். இந்த ரொக்கட் ஒன்றின் நிறை ஒரு கிலோகிராம் ஆகும்.

மீட்கப்பட்ட ரொக்கட் தொடர்பில், இருவர் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளனர். பொலீஸார் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (க)


PERSONAL CLASS
PHYSICS A/L Day Class
ஆரம்பம்: 20.08.2004 வெள்ளி 6.30p.m.
ஆசிரியர்: திரு.ம.ஸ்பெல்மன்
இடம்: No.18, மத்தியூஸ் வீதி, யாழ்.
(35395)(29-11-12)

வணிகக்கல்வி
C.C.A. சுன்னாகம்
Day Class
V.முரளி B.B.A.(F.M.Spe.)
ஆரம்பம் August 20 8.30 a.m.
(35432)(29-11-12)


# துயர் பகிர்கின்றோம்

## நாட்டுப்பற்றாளர் செல்லையா இரத்தினம்



முன்னாள் வேலணை, சங்கானைப் பிரதேச செயலரும் யாழ்.மாவட்ட சிரான் இணைப்பாளருமாகிய செல்லையா இரத்தினம் அவர்களின் மறைவை அறிந்து அதிர்ச்சியடைந்தோம். அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருடனும் தமிழீழ மக்களினதும் துயரில் நாமும் பங்குகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

'வாழ்க்கையில் நேசித்தவரை மரணத்திலும் நேசிப்போமாக'

உதவி ஆணையாளரும்,
உத்தியோகத்தர்களும்,
கமநல அபிவிருத்தித் திணைக்களம் யாழ்.மாவட்டம்,
உதவிப் பணிப்பாளரும் பணியாளரும்,
கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபை,
யாழ்ப்பாணம்.

தலைவர்கள்,
உறுப்பினர்கள்,
கமநலசேவைக்குழு
வேலணை, புங்குடுதீவு.

(சி-36829)(29-11-12)


கலையகம் ஆவரங்கால்
A/L DAY
கலைப்பிரிவு
Tam. - தமிழிந்திரன்
H/c. - முகுந்தன்
Log. - S.R.J.சுதன்
Eco. - S.S.சிறி
Geo. - நெராட்
ஆரம்பம்: 21.08.2004 சனிக்கிழமை 4.00 p.m.
(35396)(38-11-12)

ஓகஸ்ட் 21 முதல் நிலவு.com இன்
யாழ் Online.com
www.yarlonline.com
தொடர்புகளுக்கு : 0777917599

சண்டிலிப்பாயில்....
பிரத்தியேக வகுப்பு
(A.G.A. அலுவலகம் அருகில்)
LOGIC A/L DAY CLASS
R.S.சந்திரன்
ஆரம்பம்: 28.08.2004 8 a.m.
(35328)(29-11-12)


# மரண அறிவித்தல்

## மிக்கேல் கிறிஸ்துராசா



நீதிமன்ற வீதி, மல்லாகத்தைச் சேர்ந்த மிக்கேல் கிறிஸ்துராசா அவர்கள் நேற்றுமுன்தினம் (17.08.2004) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் மிக்கேல் - காலஞ்சென்ற எலிசபேத் தம்பதிகளின் அன்பு மகனும் தவமணி (பூமலர்)யின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கணபதி - பூரணம் தம்பதிகளின் மருமகனும் சுரேஸ் (சுவிஸ்), சுதாயினி (சுவிஸ்), சுபாஜினி (புதுக்குடியிருப்பு), தியாஜினி (ஜேர்மன்), கெனடி (மல்லாகம்) ஆகியோரின் அன்புத் தகப்பனும் சுமதி (சுவிஸ்), ஜெயராசா (சுவிஸ்), கமலநாதன் (ஜேர்மன்), அப்பன் (புதுக்குடியிருப்பு) ஆகியோரின் மாமனாரும் தேவராசா (சுவிஸ்), செலவராசா (பிரான்ஸ்), தனராசா, லூர்த்தம்மா, அமிர்தவற்பவநாயகி, லுவினா, காலஞ்சென்றவர்களான இராஜேஸ்வரி, மேரிராணி, அமிர்தராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் இரத்தினம், இராசாத்தி, பவுண், இராசா, நடேசு ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் அடக்க ஆராதனை இன்று (19.08.2004) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பிரான்ஸிஸ் சவேரியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பின்னர் பூதவுடல் பிற்பகல் 2 மணியளவில் மல்லாகம் சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும ஏற்றுக்கொள்ளவும்.

நீதிமன்ற வீதி,
மல்லாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(35457)(29-11-12)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.08.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.